வேத பாடசாலை **2**

லேவியராகமம், எண்ணாகமம், உபாகமம், யோசுவா

புத்தகம் -2

மோசேயின் போதனைகள்

Leviticus through Joshua
Booklet - 2
Tamil

லேவியராகமம், எண்ணாகமம், உபாகமம், யோசுவா

புத்தகம் - 2

© IBL
2003

Cover Credit : Cynthia Kingston
Printed by : Creative Enterprises

For additional booklets write to :

India Bible Literature
67, Beracah Road, Kilpauk
Chennai - 600 010.

Ph : 26425166 Fax : 26428298
E-mail : ibl.maa@iblchennai.org

வேத பாடசாலை
67, பராக்கா ரோடு,
கீழ்ப்பாக்கம்
சென்னை - 600 010.

அதிகாரம்-1

லேவியராகமம்

வேதாகமத்தை வாசிக்கும் அநேகர் லேவியராகமம் விளங்குவதற்குக் கடினமான புத்தகம் என்று எண்ணுவர், யாத்திராகமத்திலுள்ள கடைசி மூன்று அதிகாரங்களிலும் வனாந்தரத்தில் கட்டிய ஆசரிப்புக் கூடாரத்தின் அளவு முதலிய விபரக்குறிப்புகள் கூறப்பட்டிருக்கிறது. அதை வாசிப்பவர்களுக்கு மனச் சோர்வையும் சலுப்பையும் தரும். வேதத்தை முதல் அதிகாரத்திலிருந்து வாசிப்பவர்கள் லேவியராகமத்தை வாசிக்கும் போது வேதத்தை முழுவதும் வாசிக்க வேண்டும் என்ற எண்ணத்தை இழக்கிறார்கள்.

லேவியராகமம் என்பதின் பொருள் ‘லேவியருக்கு உரியது’ என்பதாகும். லேவியர் எபிரெய ஆசாரியர்களாவார்கள். லேவியராகமத்தை விளங்கி வாசிக்க வேண்டுமென்றால் வனாந்தரத்திலுள்ள ஆசரிப்புக் கூடாரத்தைப் பற்றி நீ அறிந்திருக்க வேண்டும். அங்குள்ள ஆசாரியர்கள் செலுத்தும் பலிகளையும் காணிக்கைகளையும் மற்ற வழிபாட்டு முறைகளையும் அறிந்து கொள்ள வேண்டும். மோசேக்கு தேவனால் கட்டளையிடப்பட்ட முறையிலே கட்டப்பட்ட வனாந்தரத்திலுள்ள ஆசரிப்புக் கூடாரத்தைப் போல் பிற்காலத்தில் சாலொமோன் ராஜா பெரிய அளவில் அதே மாதிரியைப் பின்பற்றி தேவாலயத்தைக் கட்டினான்.

இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களும் நாற்பது வருடங்களாக வனாந்திரத்திலே சுற்றிச் சுற்றி வந்த போது இந்தச் சிறிய ஆசரிப்புக் கூடாரம் அவர்கள் மத்தியில் இருந்ததே அதன் முக்கியத்துவங்களில் ஒன்றாகும். அந்த ஆசரிப்புக் கூடாரம் அவர்கள் மத்தியில் வைக்கப்பட்டது நமக்கு ஒரு காரியத்தை விளக்குகிறது. பத்துக் கற்பனைகளுக்குள் முதலாவது கற்பனை தேவனுக்கு முதலிடம் தரவேண்டும் என்பதே. தேவன் நம் எல்லாருடைய வாழ்க்கையிலும் நடுமையத்தில் இருக்க வேண்டும். இதைத் திட்டமாகவும் தெளிவாகவும் நமக்கு எடுத்துக் காட்டவே அந்தச் சிறிய ஆசரிப்புக் கூடாரம் இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களின் பாளையத்தின் நடுவில் இருந்தது என்று வேதம் கூறுகிறது.

இந்த ஆசரிப்புக் கூடாரத்தைப் பற்றி நாம் கவனிக்க வேண்டிய முக்கியமான காரியம் என்னவென்றால், தேவன் மெய்யாகவே அந்தச் சிறிய கூடாரத்தில் வாசம் பண்ணினார் என்பதே. மோசே ஆசரிப்புக் கூடாரத்தைக் கட்டி முடித்த பின்பு தேவனுடைய பிரசன்னமும் மகிமையும் மகா பரிசுத்த ஸ்தலத்தை நிரப்பிற்று. அது இன்றைய விசுவாசிகளைப் பரிசுத்த ஆவி நிரப்புவதற்கு அடையாளமாக இருக்கிறது.

இஸ்ரவேலர் வனாந்திரத்தின் வழியாகப் பிரயாணம் செய்கையில் கூடாரத்தின் மேல் தங்கியிருந்த மேகம் அவர்களுக்கு வழி காட்டியது. மேகஸ்தம்பம் எழும்பும் போது இஸ்ரவேலர் பிரயாணம் பண்ணப் புறப்பட்டார்கள். இவ்வாறாக, மேகஸ்தம்பம் அவர்களுக்கு வழிகாட்டியது. மக்கள் பாவ மன்னிப்புக்காகவும் ஆராதனை செய்வதற் காகவும் வழி நடத்தப்படுவதற்காகவும் போக முடிந்தது.

ஆசரிப்புக் கூடாரத்தின் விபரம்

ஆசரிப்புக் கூடாரம் கட்டப்பட்டதன் காரணத்தை நாம் அறிந்தோம். இப்பொழுது அதன் அமைப்பைப் பற்றி விரிவாகப் பார்ப்போம். ஆசரிப்புக் கூடாரத்தைச் சுற்றி ஒரு வேலி அமைக்கப்பட்டிருந்தது. அந்த வேலி முரட்டுத்துணியால் செய்யப் பட்டிருந்தது. அந்த வேலிக்கு உள்ளே ஆசரிப்புக் கூடாரத்தைச் சுற்றி வாசஸ்தலத்தின் பிரகாரம் இருந்தது. பிற்காலத்தில் சாலொமோன் கட்டின தேவாலயத்தைச் சுற்றியுள்ள பிரகாரம் 14 ஏக்கர் பரப்பளவை உடையதாய் பெரியதாய் இருந்தது. ஆனால் முதலில் கட்டப்பட்ட ஆசரிப்புக் கூடாரத்தின் பிரகாரம் அவ்வளவு பெரிதல்ல.

இந்த ஆசரிப்புக் கூடாரத்திலுள்ள பணிமுட்டுகள் மிகவும் முக்கியமானவை. அவர்கள் வனாந்திரத்தில் பிரயாணம் செய்யும்போது அந்தப் பணிமுட்டுகளைத் தூக்கிக் கொண்டு செல்ல வேண்டியிருந்த தால் அவைகளுக்குக் கைப்பிடிகள் அமைக்கப்பட்டிருந்தன.

வாசலுக்கு உள்ளே, பிரகாரத்தில் ஒரு வெண்கலப் பலிபீடம் இருந்தது. இந்தப் பலிபீடத்தின் அடியில் அடுப்புக்கரியைத் தாங்கி நிற்கும் வெண்கலச் சல்லடை தட்டினடியில் தீ எப்பொழுதும் எரிந்து

கொண்டே இருக்கும். பாவஞ் செய்தவன் மன்னிப்புப் பெற ஆசரிப்புக் கூடாரத்துக்கு வரும் போது ஆசரிப்புக் கூடார வாசலில் ஒரு ஆசாரியனால் சந்திக்கப்படுவான். அவன் கொண்டு வந்த மிருகத்தை ஆசாரியன் லேவியராகமத்தில் கூறப்பட்டபடியே பலி கொடுப்பான். அதன் பின்பு, பலியிட்ட மிருகத்தை வெண்கலப் பலிபீடத்தின் மேல் வைப்பான். அந்தப் பாவி பிரகாரத்தின் வாசலில் காத்திருப்பான். அவன் ஒரு போதும் மூடப்பட்டிருந்த ஆசரிப்புக் கூடாரத்திற்குள் செல்ல மாட்டான். அவனுக்குப் பதிலாக ஆசாரியன் அந்த கூடாரத்துக்குள் செல்லுவான். ஆசாரியன் பலியிடப்பட்ட மிருகத்தை வெண்கலப் பலிபீடத்தின் மேல் வைத்தவுடன் அதிலிருந்து எழும்பும் புகை சுகந்த வாசனையாக கர்த்தரிடம் எழும்பும். பின்பு ஆசாரியன் பிரகாரத்திலுள்ள அடுத்த பணிமுட்டான தொட்டியிடம் செல்லுவான்.

ஆசரிப்புக் கூடாரத்திலுள்ள தொட்டியானது பறவைகள் குளிக்கும் தொட்டியைப் போன்றது. மிகவும் பெரிதாக இருக்கும். இதில் தான் ஆசாரியன் முறைப்படித் தன்னைச் சுத்திகரித்துக் கொள்வான். இச்சுத்திகரிப்பு வாசலில் நிற்கும் பாவிக்குப் பதிலாக செய்து கொள்வதாகும்.

ஆசரிப்புக் கூடாரம் அல்லது கூடாரத்தின் முக்கியப்பகுதியை இரண்டாகப் பிரிக்கலாம். வெளியேயுள்ள பகுதி பரிசுத்த ஸ்தலமாகும். பரிசுத்த ஸ்தலத்தையும் மகா பரிசுத்த ஸ்தலத்தையும் இரண்டு பகுதிகளாகத் தனித் தனியே பிரித்துக் காட்டுவது அங்குள்ள திரைச் சீலையாகும். இங்கு தான் கர்த்தர் தங்கி இருக்கிறார். இந்த திரைச்சீலை முரட்டுத் துணியால் செய்யப்பட்டது. ஜோஸீபஸ் என்ற ஆசிரியர், அநேகக் குதிரைகள் கூட்டமாக வெவ்வேறு திசைகளிலிருந்து இழுத்தாலும் அதைக் கிழிக்க முடியாது என்று கூறுகிறார். இயேசுவானவர் காலத்தில் இருந்த சாலொமோன் தேவாலயத்திலுள்ள திரைச்சீலை ஒரு பெரிய நாடக அரங்கின் திரைச் சீலையைப் போன்று இருந்தது.

சுவிசேஷங்களிலே இயேசு கிறிஸ்து சிலுவையில் மரித்தவுடன் பரிசுத்த ஸ்தலத்தையும் மகா பரிசுத்த ஸ்தலத்தையும் பிரித்த அந்த

திரைச்சீலை மேல் தொடங்கி கீழ்வரைக்கும் இரண்டாகக் கிழிந்தது என்று கூறப்பட்டிருக்கிறது. வேதத்தில் கூறப்பட்ட அநேக அற்புதங்களில் இதுவும் ஒன்று. இது அடிக்கடி கவனிக்கப்படாத ஒரு அற்புதமாகும்.

ஆசரிப்புக் கூடாரத்தில் நான்கு பணிமுட்டுகள் உண்டு. பிரகாரத்திலுள்ள தொட்டியிலே தன்னை முறைப்படி சுத்திகரித்துக் கொண்ட ஆசாரியன் மறைவாக மூடிக்கட்டப்பட்டிருந்த பரிசுத்த ஸ்தலத்துக்குச் செல்லுவான்.

அவனுக்கு இடது பக்கத்தில் இருப்பது விளக்குத் தண்டாகும். அந்த விளக்குத் தண்டு முக்கியத்துவம் வாய்ந்தது. இந்த விளக்குத் தண்டு ஆண்டவர் தம் ஜனங்களுக்குத் தமது வார்த்தைகளை அறிவித்ததைக் காட்டுகிறது. மேலும் ஆண்டவரை எவ்வாறு நெருங்கலாம் என்றும் காட்டுகிறது. ஆசாரியன் விளக்குத் தண்டிற்கு முன்னால் நிற்கும் போது அவன் கர்த்தரை ஆராதிப்பான். தான் பரிந்து பேசின வாசலில் நிற்கும் பாவிக்கும் பிற கர்த்தருடைய பிள்ளைகளுக்கும் அவர் கொடுத்த வெளிப்பாட்டுக்காக நன்றி சொல்லுவான்.

ஆசாரியனுக்கு வலது பக்கத்தில் தேவ சமுகத்து அப்பங்களை வைக்கும் மேசை இருந்தது. இது இஸ்ரவேல் ஜனங்கள் வனாந்தரத்தில் பிரயாணம் செய்த போது அவர்களுக்கு அளித்த மன்னாவை வெளிப்படுத்துகிறது. மேலும் ஆண்டவர் நமக்கு அன்றாட ஆகாரத்தைத் தருவார் என்ற உண்மையை விளக்குகிறது.

தூப பீடம் மகா பரிசுத்த ஸ்தலத்தை மறைக்கும் திரைச் சீலைக்கு முன் அதன் அருகே வைக்கப்பட்டிருந்தது. இந்தத் தூபபீடத்தில் தான் ஆசாரியன் வாசலில் நிற்கும் பாவியான மனிதனுக்காகப் பரிந்து பேசும் ஜெபத்தை ஏறெடுப்பான். ஆசாரியன் செய்யும் பணி இத்துடன் முடிகிறது. அதன் பிறகு அவன் பாவத்திற்குப் பரிகாரம் தேடும் மற்றொருவனைச் சந்திக்கச் சென்று மறுபடியும் இதே பரிந்து பேசும் பணியை மேற்கொள்வான்.

வருடத்துக்கு ஒருமுறை ஜனங்கள் ஆசரிப்புக் கூடாரத்தைச் சுற்றி நிற்பார்கள். அப்பொழுது பிரதான ஆசாரியன் திரைச்சீலையைக் கடந்து மகா பரிசுத்த ஸ்தலத்துக்குச் செல்லுவான். அவன் சகல ஜனங்களின் பாவங்களுக்காக இரத்த பலியைச் செலுத்துவான்.

நாம் இந்தச் சிறிய ஆசரிப்புக் கூடாரத்தைப் பார்க்கும் போது அங்குள்ள பணிமுட்டுகளில் ஒவ்வொன்றும் இயேசு கிறிஸ்துவுக்கே உருவகமாகக் கூறப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள வேண் டும். இது இவ்வாறு இருக்க, நாம் ஒவ்வொரு பொருளையும் தனித்தனியே ஆராய்வோம்.

ஆசரிப்புக் கூடாரத்தின் பணிமுட்டுகள்:

வெண்கலப் பலிபீடம் புதிய ஏற்பாட்டிலுள்ள சுவிசேஷத்தைப் போதிக்கிறது. எல்லா மிருகங்களும் அந்த வெண்கலப் பலிபீடத்தின் மேல் பலியிடப்பட்டன. இந்த மிருக தகன பலிகள் இயேசு கிறிஸ்து சிலுவையில் மரித்த போது நிறைவேறினது. வெண்கலப்பலிபீடம் ''நீ பரிசுத்த தேவனை பலி இல்லாமல் நெருங்க முடியாது. இரத்தம் சிந்துதலில்லாமல் மன்னிப்பு உண்டாகாது'' (எபிரெயர் 9:22) என்று நமக்குச் சொல்லுகிறது. ஆசரிப்புக் கூடாரத்திலுள்ள தொட்டியில் ஆசாரியர்கள் பரிசுத்த ஸ்தலத்துக்குள் செல்லுமுன் முறைப்படித் தங்களைச் சுத்திகரித்துக் கொள்வது, வேதாகமத்தில் அநேக இடங்களில் கூறப்பட்ட ''யார் கர்த்தருடைய பர்வதத்துக்கு ஏறுவான்? கைகளில் சுத்தமுள்ளவனும், இருதயத்தில் மாசில்லாதவனும் தானே'' (சங்கீதம் 24:4) என்பதை விளக்குகிறது.

ஆசரிப்புக் கூடாரத்தின் முக்கிய நோக்கம், தேவனோடு ஐக்கியம் கொள்ளுவதே. ஒவ்வொன்றும் இதை நோக்கியே செயல்படுகிறது. வேதத்தில் நாம் ஆண்டவரோடு கொண்டிருக்கும் தொடர்பு அவரோடு அமர்ந்து போஜனம் பண்ணுவதைப் போலிருக்கிறது என்று ஒப்பிடப் பட்டிகிறது.

நம் பெற்றோர் நாம் சிறுவர்களாக இருக்கும் போது நம்மிடம் சாப்பாட்டு மேசைக்கு உணவருந்த வருமுன் கைகளைக் கழுவும்படிக் கூறுவர். சாப்பிட வரும் போதும் தேவனோடு ஐக்கியம் கொள்ள வரும் போதும் நாம் நம்மைச் சுத்திகரிக்க வேண்டும். நீ கழுவவும்

சுத்திகரிக்கப்படவும் வேண்டும். இதைத் தான் இந்தத் தொட்டி நமக்குப் போதிக்கிறது.

ஆசாரியன் பொன்னாலான விளக்குத் தண்டுக்கு முன்னால் நிற்கும் போது தேவன்தாம் வேத புத்தகத்துக்கு மூலகர்த்தா என்ற உண்மையை ஏற்றுக் கொள்வான். மேலும் வேத வசனமே நமது பாதைக்கு வழி காட்டும் தீபமாக இருக்கிறது என்று விளக்குவான்.

வாசலில் நின்ற பாவிக்குக் கர்த்தர் கொடுத்த ஒளிக்காக, வெளிப்பாட்டுக்காக எப்படி நான் இரட்சிக்கப்பட முடியும், எப்படி அவரை நெருங்கி ஆராதனை செய்ய முடியும் என்ற வெளிப்பாட்டுக்காக ஆசாரியன் அவருக்கு நன்றி செலுத்துவான்.

மேலே நான் கூறியபடி தேவ சமுகத்தப்பங்கள் வைக்கும் மேசை ஆண்டவர் நமக்கு அன்றாட ஆகாரத்தைத் தருவார், தேவைகளைச் சந்திப்பார் என்ற உண்மையை விளக்குகிறது. நாம் ஜீவிப்பது அவராலேயே என்ற உண்மையை நாம் ஒருக்காலும் மறக்கக்கூடாது என்று ஆண்டவர் விரும்புகிறார். நம் ஆவி, ஆத்துமா, சரீர தேவைகளுக்காக அவரையே நோக்கிப் பார்க்க வேண்டும் என்று விரும்புகிறார்.

அடுத்தது தூப பீடத்தை நோக்குவோம். இதற்கு முன் ஆசாரியன் நிற்கும் போது பிரகாரத்தின் வாசலில் நிற்கும் பாவிக்காக ஜெபத்தை ஏறெடுப்பான். அப்படிச் செய்யும் போது, அது அவனைப் பிரதான ஆசாரியராகிய இயேசு கிறிஸ்துவுக்கு ஒப்பிட்டு அவர் நமக்காகப் பிதாவினிடம் பரிந்து பேசி ஜெபத்தை ஏறெடுப்பதை விளக்குவதாக இருக்கிறது.

தொகுப்புரை

ஆசரிப்புக் கூடாரத்திலுள்ள அனைத்தும் இயேசு கிறிஸ்துவைப் பற்றியதே ஆகும். அவரே உலகிற்கு ஒளியாக இருக்கிறார். அவரே ஜீவ அப்பம், அவரே நமக்காகப் பலியானார். அவர்தான் நம்மைச் சுத்திகரிக்கிறார். ஆசரிப்புக் கூடாரத்தில் நாம் காண்பது இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷமே. நாம் ஆசரிப்புக் கூடாரத்தை விளங்கிக் கொண்டால் தான் லேவியராகமம் என்ற புத்தகத்தை விளங்கிக்கொள்ள

முடியும். ஏனென்றால் லேவியராகமத்தில் கூறப்பட்ட படியே ஆசாரியர்கள் ஆசரிப்புக் கூடாரத்தில் தங்கள் கடமைகளைச் செய்தார்கள். இந்த ஆசரிப்புக் கூடார மூலமாகத் தெளிவாகக் காட்டப்பட்ட இயேசுவை நீ அறிவாயா?

அதிகாரம்-2

இன்றைய ஆசரிப்புக் கூடாரம்

ஆதியாகமம் என்ற புத்தகத்தில் நாம், ஒரு மனிதன் பாவம் செய்தால் அவனுக்கு வருகிற பெரிய தண்டனை என்னவென்றால் ஆண்டவருக்கும் அவனுக்கும் இடையே பிரிவினை ஏற்படுகிறது; கைவிடப்பட்ட நிலை ஏற்படுகிறது என்று வாசிக்கிறோம். தேவனுக்கும் மனிதனுக்கும் உள்ள வேற்றுமையினால் உண்டான பிரிவை சமரசம் செய்து சரிப்படுத்துவதே இந்தப் பிரச்சினைக்குத் தீர்வாகும். இது தான் வேதத்தின் அடிப்படை உண்மை. இதைத்தான் வனாந்திரத்திலுள்ள ஆசரிப்புக் கூடாரமும் உணர்த்துகிறது.

இப்படியிருக்க நாம் ஏன் தற்காலத்தில் மிருகபலி கொடுப்பதில்லை? இதற்குக் காரணம் என்னவென்றால் ஆண்டவருடைய எதிர்பார்ப்பு மாறிவிட்டது. நாம் வேதத்திலுள்ள எபிரெயருக்கு எழுதின நிருபத்தை வாசிக்கும்போது இதைப்பற்றி இன்னும் விளக்கமாக அறிந்து கொள்ளலாம் எபிரெயர் 9ம் அதிகாரத்தில் கூறப்பட்டதை நாம் தொகுத்துப் பார்ப்போமானால் இந்த ஆசரிப்புக் கூடாரம் பரலோகத்தில் உள்ள ஆசரிப்புக் கூடாரத்தின் சாயலாக அமைக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிகிறோம். இந்த பரலோக ஆசரிப்புக் கூடாரம் காணக்கூடிய பொருட்களால் ஆனதல்ல. அங்குள்ள பொருட்கள் யாவும் பரலோக சம்பந்தமானதும், ஆவிக்குரியவையுமாகும். ஆண்டவர் மோசேயிடம் கட்டச் சொன்ன ஆசரிப்புக் கூடாரம் காணக் கூடியதாயும் தொட்டு அறியக்கூடியதுமாயிருக்கிறது. அது, எபிரெயர் 9ம் அதிகாரத்தில் நாம் வாசிக்கும், ஆவிக்குரியதும் தொட்டு அறியக் கூடாததுமான ஆசரிப்புக் கூடாரத்தின் சாயலாகக் கட்டப்பட்டது.

இயேசு கிறிஸ்து சிலுவையில் மரித்தவுடன் சாலொமோன் தேவாலயத்தில் உள்ள திரைச்சீலை மேல் தொடங்கி கீழ் வரைக்கும் கிழிந்ததை நினைவு கூருவாயாக. வருடத்துக்கு ஒரு முறை பிரதான ஆசாரியன் மகா பரிசுத்த ஸ்தலத்துக்கும் மக்களுடைய பாவங்களுக்கும் பரிகாரமாக இரத்தத்தைத் தன்னுடன் எடுத்துச் செல்வான் என்பதையும் அறிவாயாக. இயேசு கிறிஸ்து சிலுவையில் மரித்த போது உலக ஆசரிப்புக் கூடாரத்தில் எவ்விதமாக ஒரு பிரதான ஆசாரியன் பிரவேசித்ததாகக் கூறப்பட்டிருக்கிறதோ, அதே போல் மகா பிரதான ஆசாரியராக பரலோக ஆசரிப்புக் கூடாரத்தில் பிரவேசித்தார். அவர் பரலோக ஆசரிப்புக் கூடாரத்தில் உள்ள பலிபீடத்தில் தன் உயிரைப் படைத்து நித்திய மீட்பை உண்டு பண்ணினார். பின் அவர் பரலோக ஆசரிப்புக் கூடாரத்திலுள்ள சுத்திகரிப்பின் தொட்டிக்குச் சென்று உலக மக்களைக் கழுவி நிலையான சுத்திகரிப்பைத் தந்தார்.

கிறிஸ்துவின் மரணத்துக்கு முன் ஒரு பாவி கர்த்தரை அணுக முடியாது. ஆசாரியன் மாத்திரம் தான் சென்று பாவிக்காகப் பரிந்து பேச முடியும். இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணம் இவையெல்லாவற்றையும் ஒழித்து விட்டது. இயேசு கிறிஸ்து சிலுவையில் மரித்த போது அவர் நீயும் நானும் தேவனுடைய சமுகத்திற்கு நேரடியாகச் செல்லும் உரிமையைத் தந்தார்.

கிறிஸ்து மரிக்குமுன் ஒரு பாவி கர்த்தருடைய சமுகத்துக்குச் செல்ல முடியாது. ஆசாரியன் மாத்திரம் தான் சென்று பாவிக்காகப் பரிந்து பேசும் ஜெபம் ஏறெடுப்பான். இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணம் இவையெல்லாவற்றையும் ஒழித்து விட்டது. இயேசு கிறிஸ்து சிலுவையில் மரித்த போது அவர் நீயும் நானும் தேவனுடைய சமுகத்திற்கு நோடியாகச் செல்லும் உரிமையைத் தந்தார்.

அடுத்த முக்கியமான காரியம் என்னவென்றால் உங்களுடைய சரீரமே தேவனுடைய ஆலயமாயிருக்கிறது. பவுல் கூறினதின் சாராம்சம் என்னவென்றால் ‘‘பரிசுத்த ஆவியானவர் உங்களில் வாசமாயிருக்கிறார் என்பதை நீங்கள் அறியீர்களா? ஒருவன் அவருடைய ஆலயத்தைக் கெடுத்தால் தேவன் அவனைக் கெடுப்பார் ஏனென்றால் அவருடைய

ஆலயம் பரிசுத்தமுள்ளது. அந்த ஆலயமே நீங்கள்’’. அப்போஸ்தலனாகிய பவுல் வேசித்தனத்திற்கு அடிமைப்பட்டிருந்த கொரிந்தியருக்கு இந்த உண்மையை உணர்த்தினார். ‘‘உங்கள் சரீரம் வேசித்தனத்துக்குரியதல்ல. தேவனுக்கு உரியது. உங்கள் சரீரமானது தேவனுடைய ஆலயமாயிருக்கிறதென்றும் தேவன் அதில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியீர்களா?’’ (1 கொரிந்தியர் 6:15-20). கொலோசெயர் 1:27ம் வசனத்தில், ‘‘புறஜாதிகளுக்குள்ளே விளங்கிய இந்த இரகசியத்திலுள்ள மகிமையின் ஐசுவரியம் இன்னதென்று, தேவன் தம்முடைய பரிசுத்தவான்களுக்குத் தெரியப்படுத்தச் சித்தமானார்; கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசியம்’’ என்று வாசிக்கிறோம். கிறிஸ்து உங்களுக்குள் இருப்பதே ஒரு அற்புதம். அது தேவ சமுகம் உனக்குள் வாசமாயிருக்கிறதையும், தேவன் அழைத்த அழைப்புக்குப் பாத்திரவானாக நீ இருப்பதையும் காட்டுகிறது.

நாம் இப்போது ஆசரிப்புக் கூடாரத்தின் மூலம் நம் வாழ்க்கையில் வெளிப்படும் ஆவிக்குரிய சத்தியங்களைக் காண்போம். உனக்கு ஆலோசனையாகச் சொல்வது என்னவென்றால் நீ அதிகாலையில் எழும்பும்போது சிறிது நேரம் அமைதலாக இருக்க வேண்டும். பின்பு அவரை ஆராதிக்க வேண்டும், பின்பு அவர் சமுகத்தில் அமைதலாகக் காத்திருக்க வேண்டும். இவ்வாறு அன்றாட வேலைக்குச் செல்லுமுன் நீ செய்ய வேண்டும். நாம் இவ்வாறு செய்யும் போது, நாம் ஆசரிப்புக் கூடாரத்தையும் அதிலுள்ள ஒவ்வொரு பணிமுட்டு மூலம் ஆண்டவரை அணுக உதவும் விதிமுறைகளையும் நம்முடைய நினைவுக்குக் கொண்டு வரவேண்டும். நீ வெண்கலப் பலிபீடத்தின் அருகில் வருகிறாய் என்று நினைத்துக்கொள். அப்பொழுது இயேசு கிறிஸ்து உங்கள் பாவங்களுக்காக தேவாட்டுக் குட்டியாக சிலுவையில் மரித்தார் என்ற நற்செய்தியை விசுவாசி. நீ இதுவரை கிறிஸ்து என் பாவங்களை மன்னித்தார் என்று விசுவாசியாமலிருந்தால் இப்பொழுது அவரை விசுவாசி. அவர் தான் நம் பாவங்களுக்குப் பரிகாரி என்று திட்டமாக உணர்ந்து கிறிஸ்து நமக்குச் சிலுவையில் பெற்றுத் தந்த பாவ மன்னிப்புக்காக அவரைத் துதி.

இப்பொழுது நீ சுத்திகரிக்கும் தொட்டிக்குக் கடந்து வருகிறாய் என்று நினைத்துக் கொள். அங்கு தான் உன் கைகளையும் கால்களையும் கழுவ வேண்டும். மேலும் தொடர்ச்சியாக சுத்திகரிப்பு உனக்குத் தேவையாயிருக்கிறது உன்னுடைய வாழ்க்கையில் தேவனுக்குப் பிரியமில்லாத அழுக்கான பாவம் இருக்கிறதா? தேவனிடம் அறிக்கை பண்ணி அதை விட்டு விடு. அப்பொழுது சுத்திகரிக்கப்படுவாய். அதன் பின்பு பரிசுத்த ஸ்தலத்திற்குள் இருக்கும் விளக்குத் தண்டின் முன் நில். அங்கு கர்த்தர் கொடுத்த வெளிப்பாட்டுக்காக, உன்னை இருட்டிலிருந்து ஒளிக்கு அழைத்து வந்து ஜீவனையும் இரட்சிப்பையும் அருளினதற்காக நன்றி சொல்லு. அவரது வசனத்துக்காக நன்றி செலுத்து.

நீ இப்பொழுது தேவ சமுகத்து அப்பங்கள் இருக்கும் மேசைக்கு முன்னால் நிற்கிறாய் என்று நினைத்துக் கொள். உன்னுடைய எல்லாத் தேவைகளையும் தேவன் சந்தித்ததற்காக நன்றி செலுத்து. நம்மிடம் உள்ள ஒவ்வொரு துண்டு அப்பம், எல்லாப் பொருட்கள், அனைத்துத் தேவைகளையும் சந்திப்பது தேவன் தான் என்பதை நாம் மறக்கக் கூடாது. கர்த்தர் தாம் நம் தேவைகளைச் சந்திக்கிறார் என்று நன்றியறிதலோடு அங்கீகரிக்க வேண்டும்.

பின்பு தூப பீடத்தைப் பற்றி நாம் சிந்திக்கும்போது ஜெபத்தின் வல்லமையை அது நமக்கு நினைப்பூட்டுகிறது. உன்னுடைய எல்லா தேவைகளுக்காகவும் நீ அன்று சந்திக்கப்போகிற அலுவல்களுக் காகவும் நேரம் எடுத்து ஜெபி.

பின்பு, மகா பரிசுத்த ஸ்தலத்தைப் பார்க்கும் பொழுது மெய்யாகவே கர்த்தரின் தெய்வீகப் பிரசன்னம் என்பது உண்டு என்று நாம் அறிகிறோம். கர்த்தரின் பரிசுத்த ஆவி நம்மில் இருக்கிறது என்றும் நாம் எங்கிருந்தாலும் அவருடைய பிரசன்னத்தில் இருக்கிறோம் என்பதை அறிவாயாக. நமக்காகக் கர்த்தரின் பிரசன்னத்துக்குச் செல்ல ஆசாரியன் வேண்டுவதில்லை. ஆசரிப்புக் கூடாரத்தில் நடத்தப்பட்ட ஆராதனையை நாம் எழுத்தின் படி பின்பற்ற வேண்டியதில்லை. ஏனென்றால் கிறிஸ்து சிலுவையில் மரித்தபோது நாம் நேராகவே கர்த்தரண்டை நெருங்க வழி வகுத்தார்.

வனாந்தரத்து ஆசரிப்புக் கூடாரத்தின் மூலம் வெளிப்படும் அநேக ஆவிக்குரிய சத்தியங்கள் உண்டு. இதில் மிகவும் முக்கியமானது ஒன்று உண்டு. ஒரு பாவியான ஆணோ பெண்ணோ மிகவும் பரிசுத்தமான கர்த்தரண்டை நெருங்கவும் அவருடைய பிரசன்னத்துக்குள் வரவும் முடியும். எப்படியென்றால் இயேசு கிறிஸ்து மூலமாக தேவனண்டை சேர புதிதும் ஜீவனுமான மார்க்கம் உண்டாயிருக்கிறது.

கர்த்தர் நம் ஆத்தும மீட்புக்காகச் செய்த அற்புதத்தைக்காண விருப்பத்தோடு அவர் பிரசன்னத்துக்குள் வர ஜனக் கூட்டமாகத் திரண்டு வந்திருப்பர். நீ எப்பொழுதாவது அவர் பிரசன்னத்துக்குள் வந்திருக்கிறாயா? ‘‘நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன். என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவனிடத்தில் வரான்’’ (யோவான் 14:6) என்று திட்டவட்டமாகச் சொல்கிறார். இந்த சுவிசேஷத்தில் கூறப்பட்ட மகத்தான வசனம் ஆசரிப்புக் கூடாரத்தைப் படம் பிடித்துக் காட்டுகிறது. கர்த்தர் உன்னைச் சந்திக்க விரும்புகிறார். உன் வாழ்க்கை யைத் தம் ஆசரிப்புக் கூடாரமாக ஏற்றுக் கொள்ள விரும்புகிறார்.

அத்தியாயம்-3

பலிகளின் பொருள்

இப்பொழுது ஆசரிப்புக் கூடாரத்தைப் பற்றி நமக்கு ஓரளவு தெளிவான அறிவு இருப்பதால் லேவியராகமம் என்ற இந்த சிறிய புத்தகத்தைப் படிக்க ஆயத்தமாயுள்ளோம். உண்மையில் இந்தப் புத்தகம் ஆசாரியர்களுக்கான ஒரு எளிய கையேடு. இது ஒரு மிருகத்தை எப்படிக் கொல்வது, அதன் குடல்கள் மற்றும் உள்ளுறுப்புக்களை என்ன செய்வது என்பது பற்றி தெளிவாக எடுத்துக் கூறும் ஒரு வழிகாட்டியாயுள்ளது. 23ம் சங்கீதத்தைப் போல் அல்லது 1 கொரிந்திரயர் 13 போல் நம்மை உற்சாகப்படுத்தி எழுப்பும் புத்தகமாக இது இல்லாமல் இருக்கலாம். ஆனால் இந்த லேவியராகமத்திலிருந்து ஆவிக்குரிய சத்தியங்களோ, தியானத்திற்குப் பயன்படும் பகுதிகளோ இல்லை என்று தயவு செய்து எண்ணிவிடாதீர்கள். இந்தப் புத்தகத்தில்

அழகான சத்தியங்கள் உள்ளன. இதிலுள்ள பூந்தோட்டப் பகுதிகளை உனக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

புத்தகத்தின் பகுதிகள்

இந்த ஆசாரியரின் கையேடு பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது என்பதை நீங்கள் அறிய வேண்டும். முதல் ஏழு அதிகாரங்கள் பலிகளைப் பற்றிவை. ஆசாரியர்கள் பலிகளை ஆயத்தம் செய்யும்போது மிகச் சரியாக என்னென்ன செய்ய வேண்டும் என இப்பகுதி விளக்குகிறது. அதே சமயம் இந்த பலிகளின் பொருளையும் விளக்குகிறது.

எட்டாம் அதிகாரத்திலிருந்து பத்தாம் அதிகாரம் வரை ஆசாரியர் களைப் பற்றிக் கூறுகிறது. இப்பகுதியில் கொடுக்கப்பட்டுள்ள அறிவுரைகள் ஆசாரியர்கள் எப்படிப்பட்ட மனிதர்களாய் இருக்க வேண்டும் எனவும் ஆசாரியர்கள் கடைப்பிடிக்க வேண்டிய அளவுகள் பற்றியும் தெளிவாகக் கூறுகிறது. அநேக தியான சத்தியங்களை இந்த அதிகாரங்களில் காணலாம்.

இந்தப் புத்தகத்தின் கரு எனக் கருதப்படும் பகுதி 11ம் அதிகாரத்திலிருந்து 22ம் அதிகாரம் வரையுள்ளவை ஆகும். இப்பகுதியைப் பரிசுத்தமாகுதல் என்று சொல்வேன். தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட மக்கள் ஒரு பரிசுத்த ஜனம். ஏனெனில் அவர்களுடைய தேவன் பரிசுத்தர் - இந்தக் கருத்தை உலகிற்கு எடுத்துரைப்பது ஆசரிப்புக் கூடாரமும் அங்கு பணி புரியும் ஆசாரியர்களும் தான். இந்த அதிகாரங்களில், இந்த மக்கள் வித்தியாசமாக இருப்பதற்கெனத் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் என அழுத்திக் கூறப்பட்டுள்ளது. ‘பரிசுத்தமான’ என்ற பதத்தின் பொருள் ‘தேவனுக்குச் சொந்தமான’ என்பதாகும். இந்த ஆசாரியர்கள், தேவனுக்குச் சொந்தமான மக்களாக வாழ வேண்டியதாயிருந்தது.

அதிகாரங்கள் 23லிருந்து 25வரை ‘ஊழியங்கள்’ பற்றி சொல்லப்பட்டுள்ளது. யூத விசுவாசத்தின்படி அநேக பரிசுத்த நாட்கள் உண்டு. அவைகளைப் பற்றிய விவரங்களை வேதாகமத்தின் முதல் ஐந்து புத்தகங்களில் காணலாம். இந்தப் பரிசுத்த நாட்களிலும், மிகப் பரிசுத்தமான சடங்குகளிலும் ஆசாரியர்களே பணிபுரிய வேண்டி

இருந்ததால், எல்லாவற்றையும் எப்படிச் செய்ய வேண்டுமென்ற செய்முறைக் குறிப்புகள் அவர்களுக்குத் தேவைப்பட்டன.

லேவியராகமத்தின் இப்பகுதிக்கு நீ வரும்போது உன்னையே கீழ்க்கண்ட கேள்வியைக் கேட்டுக்கொள். பஸ்கா போன்ற ஒரு பரிசுத்த நாளை தேவன் நியமித்த பொழுது ஆசாரியர்கள் எதை நினைவு கூரவேண்டும் என தேவன் விரும்பினார்? அதன் பிறகு கீழே வரும் கேள்வியையும் உன்னைக் கேட்டுக்கொள்: ஆசாரியர்கள் ஏன் இவைகளை நினைவு கூர வேண்டுமென தேவன் விரும்பினார்?

வாழ்க்கையில் செயல்முறைப்படுத்துதல்

லேவியராகமத்தின் கடைசி இரண்டு அதிகாரங்களையும் ‘அர்ப்பணிப்பு’ என்று கூறுவேன். லேவியராகமம், உபாகமம் மற்றும் யோசுவா ஆகிய புத்தகங்கள் வலுவான வாழ்க்கைப் பாடங்களைப் போதிக்கும் பிரசங்கங்களுடன் முடிவடைகின்றன.

தேவனுடைய கற்பனைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்றும், பரிசுத்த மக்களாக வாழ அழைக்கப்பட்டபடியே இருக்க வேண்டு மென்றும், தேவனுடைய மக்களுக்குக் கூறும் ஒரு சிறந்த புத்திமதியுடன் அப்புத்தகங்கள் முடிவடைகின்றன. அவர்கள் விடுவிக்கப்பட்டதும் காப்பாற்றப்பட்டதும், பரிசுத்தமாக வாழ்வதற்குத் தான். லேவியராகமத்தின் கடைசி அதிகாரங்களில் கூறப்பட்டுள்ள புத்திமதிகள், இவ்வதிகாரங்களை வல்லமையுள்ளவையாக ஆக்கு கின்றன. மோசே தன்னைத் திக்குவாயனென்றும், சரியாகப் பேசவராது என்றும் கூறியிருந்தான். ஆனால் இங்கே அவன் பேச்சுவன்மை பெற்றவனாகக் காட்சியளிக்கின்றான்.

தியானத்திற்கும், தனிமனித வாழ்வுக்கும், நடைமுறைப் படுத்து வதற்கான பாடங்கள்

லேவியராகமத்தில் நாம் பெறக்கூடிய சில தியானத்திற்கான ஆசீர்வாதங்களை இப்பொழுது காண்போம். முதல் பகுதியில் ‘‘பலிகள்’’ பற்றி ஆரம்பிப்போம். ஆசாரியர்கள் எவ்விதம் தேவனுக்குப் பலி செலுத்த வேண்டும் என்பது பற்றிய சில அழகான சத்தியங்களை இப்புத்தகத்தின் முதல் ஏழு அதிகாரங்கள் கொண்டுள்ளன.

எடுத்துக்காட்டாக, மன்னிப்புப் பெற விரும்பும் பாவி ஒருவன் ஆசரிப்புக் கூடாரத்திற்கு வரும் போது, ஆசாரியன் அவனை வாசலில் சந்திப்பான். அந்தப் பாவி கொடுக்கும் பலி எதற்காகக் கொடுக்கப்படு கிறது என்று ஆசாரியன் அவனுக்கு விளக்கிச் சொல்லுவான்.

பிற பொறுப்புகளோடுங்கூட ஆசாரியர்கள் தேவனுடைய மக்களுக்கு ஆசிரியர்களாகவும் இருந்தார்கள். பாவி பலி செலுத்தும்போது, மிருகத்தின் தலை மீது அவன் கையை வைக்க வேண்டுமென ஆசாரியன் கூறினான். பாவி அப்படிச் செய்தபோது அந்த மிருகம் அவனுடைய 'பதிலி'யாக ஆகிறது. அந்தப் பாவி செய்த பாவமெல்லாம் மிருகத்தின் தலை மீது மாற்றப்படுகிறது. பாவி செய்த பாவத்தினால் பாவிக்குக் கிடைக்க வேண்டிய மரணத்தைப் பாவியல்ல - அந்த மிருகமே உத்தரிக்கிறது. இங்கு தான் 'போக்காடு' (scapegoat) என்ற பதம் வருகிறது. பலியின் பொருள் அது தான். இறையியல் வல்லுனர்கள், நம்முடைய பாவங்களுக்காக இயேசு கிறிஸ்து சிலுவையில் அடைந்த மரணத்திற்கு இதை உவமையாகக் கூறி 'பிராயச்சித்த பலி' என்று அழைக்கிறார்கள்.

தேச மக்கள் முழுவதும் பாவம் செய்த போது முழு தேசமும் மனந்திரும்ப வேண்டியிருந்ததை இப்புத்தகத்தை நீ படிக்கும் போது பார்க்கலாம். தாங்கள் செய்த பாவத்தை உணர்ந்த பொழுது ஒரு இளங்காளையைப் பாவ நிவாரண பலியாகச் செலுத்த வேண்டியிருந்தது. அவர்கள் அதை ஆசரிப்புக் கூடாரத்திற்குக் கொண்டு வந்தனர். தலைவர்கள் அம்மிருகத்தின் தலையில் தங்கள் கைகளை வைத்தனர். அதன் பின் கர்த்தருக்கு முன்பாக அது கொல்லப்பட்டது. அதற்குப் பின் பாவ நிவாரண பலிக்குச் செய்யும் அதே முறையைக் கையாண்டார்கள். இவ்விதம் ஆசாரியர்கள் தேசம் முழுமைக்கும் பாவ நிவாரணம் செய்தார்கள். இன்றும் கூட, தேசமாக இந்த அநுபவத்துக்குள் வந்தால் நன்றாயிருக்குமில்லவா? தேசத்தின் பாவத்திற்காய் தேச மக்கள் அனைவரும் மனந்திரும்புவது, எந்த ஒரு தேசத்துக்கும் அருமையான சிறந்த அநுபவமாயிருக்கும். இந்தச் சம்பவம் லேவியராகமத்தில் குறிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆசாரியர்கள் அபிஷேகிக்கப்பட்டவர்களாய் இருக்க வேண்டும்; அதாவது அவர்கள் பரிசுத்த ஆவியானவரால் வழி நடத்தப்பட்டு, ஆளப்படுபவர்களாக இருக்க வேண்டும். இதைச் சித்தரிக்க, பலியின் இரத்தத்தை, ஆசாரியர்களின் காது மடல்கள், கைகள், வலது பாதத்தின் பெருவிரல் ஆகியவற்றின் மேல் தடவ வேண்டும். ''நீ ஒரு பரிசுத்தமான மனிதனாக இருக்க வேண்டும். மக்கள் பரிசுத்தமாயிருக்க நீ அவர்களை நடத்த வேண்டும். நீ கேட்கும் ஒவ்வொன்றும், தொடும் ஒவ்வொன்றும் அல்லது நீ செய்யும் ஒவ்வொன்றும் நீ போகும் இடம் ஒவ்வொன்றும் அபிஷேகிக்கப்பட்டு பரிசுத்த ஆவியானவரால் ஆளப்படுவதாய் இருக்க வேண்டும்'' என்று சொல்வது போல் இச்செய்கை அமைந்துள்ளது.

மோசே நியாயப்பிரமாணப் புத்தகங்களை எழுதிய போது, இயேசுவைப் பற்றியும் எழுதினார் என்று நாம் கூறுகிறோம். லேவியராகமப் புத்தகத்தில் இதற்கான ஒரு அழகான காட்சியைக் காணலாம். புதிய ஏற்பாட்டில், குஷ்டரோகியை சுகமாக்கிய போதெல்லாம், சுகமாக்கப்பட்டவனிடம், ''நீ போய் உன்னை ஆசாரியர்களிடத்தில் காட்டு'' என்று தான் இயேசுவானவர் எப்போதும் சொன்னார். ஏன் அப்படிச் சொன்னார்? லேவிராகமத்தில், ஆசாரியர்களுக்கு அவ்வாறு கட்டளைக் கொடுக்கப்பட்டுள்ளது.

மோசேயின் மகத்தான பிரசங்கத்தில் அநேக தியானத்திற்கான விஷயங்களை லேவியராகமப் புத்தகத்தின் கடைசி சில அதிகாரங்களில் காணலாம். எடுத்துக்காட்டாக, ''நீங்கள் என் கட்டளைகளின்படி நடந்து, அவைகளின்படி செய்தால், நான் ஏற்ற காலத்தில் உங்களுக்கு மழையைப் பெய்யப் பண்ணுவேன்; பூமி தன் பலனையும், வெளியிலுள்ள மரங்கள் தங்கள் கனியையும் கொடுக்கும். விதைப்புக் காலம் வரைக்கும் திராட்சப்பழம் பறிக்குங்காலம் வரைக்கும் போரடிக் கும் காலம் இருக்கும்; விதைப்புக் காலம் வரைக்கும் திராட்சப்பழம் பறிக் குங் காலம் இருக்கும்; நீங்கள் உங்கள் அப்பத்தைத் திருப்தியாகச் சாப்பிட்டு, உங்கள் தேசத்தில் சுகமாய்க் குடியிருப்பீர்கள்... உங்கள் சத்துருக்களைத் துரத்துவீர்கள்; அவர்கள் உங்கள் முன்பாகப் பட்டயத்தால் விழுவார்கள்... நான் உங்கள் நடுவிலே உலாவி, உங்கள் தேவனாயிருப்பேன், நீங்கள் என் ஜனமாயிருப்பீர்கள் ''(லேவி 26:3-12).

மேலும் ஓரினச்சேர்க்கை போன்ற சில காரியங்கள் லேவியராகமப் புத்தகத்தில் தடை செய்யப்பட்டிருப்பதைக் காண்பாய். திருமணம் செய்து கொள்வதும் பின்னர் பெற்றோராவதும் தேவனின் திட்டம். இவர்கள் பெற்றெடுத்த பிள்ளைகள் நாளாவட்டத்தில் திருமணம் செய்து பெற்றோராகிறார்கள். தேவனின் இந்தத் திட்டத்தில் ஓரினச்சேர்க்கை பொருத்தமானதாக இல்லை. ஓரினச்சேர்க்கை தடைசெய்யப்பட்டுள்ளது. ஏனெனில் அதன் விளைவுகள் நல்லவை அல்ல. மோசே நேரடியாகவே, மிக மிகக் கடுமையாகவே ஓரினச் சேர்க்கையைக் கண்டிக்கிறார். அதே போல் மாந்திரீகம், பில்லிசூனியம், குறிசொல்லுதல் இன்னும் அநேகக் காரியங்களை மோசே கண்டிக்கிறார். மோசேயால் கொடுக்கப்பட்ட தேவனுடைய சட்டதிட்டங்கள் கடுமையானவை. ஏனெனில் யூத மக்கள் ஒரு பரிசுத்த ஜனமாக இருக்க வேண்டியவர்கள். லேவியராகமப் புத்தகத்தின் பிரதான செய்தி பரிசுத்தம் என்பது தான்.

லேவியராகமப் புத்தகத்தைப் பற்றிய இந்த முன்னுரையும், மேலெழுந்த வாரியாகப் பார்த்த பகுதிகளும் நீயே படிப்பதற்கும், ஆசீர்வாதம் பெறுவதற்கும் உதவியாயிருக்கும் என நம்புகிறேன். ஆசாரியர்கள் எப்படி அபிஷேகிக்கப்படுவது, பரிசுத்தமான தேவ மனிதர்கள், தேவனுடைய ஜனங்கள் எப்படி பரிசுத்தமாயிருக்க வேண்டுமென கற்பிப்பது என்பவை பற்றிக் காட்டும் ஆசாரியர்களுக்கான வழி காட்டும் புத்தகம் இது என்பதை நினைவில் கொள்.

''நான் பரிசுத்தர்; ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்று கர்த்தர் உரைக்கிறார்'' - உங்களுக்கும் எனக்கும் லேவியராகமப் புத்தகம் கூறும் செய்தி இதுவே.

அத்தியாயம்-4

எண்ணாகமம்

ஆதியாகமத்தில் துவங்கும் வரலாற்றுக் கதை, யாத்திராகமத்தில் தொடர்ந்து வருகிறது. இடையில், வனாந்தரத்தில் ஆசரிப்புக் கூடாரம்

எழுப்புவதற்கான திட்டங்களையும் குறிப்புகளையும் தேவன் மோசேக்குச் சொல்லும் புத்தகம் வருகிறது.

எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து இஸ்ரவேல் புத்திரர் அற்புதமான விதமாக விடுவிக்கப்பட்டனர். அவர்கள் வனாந்தரத்தைக் கடந்து வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட கானானுக்குள் வரவேண்டியிருந்தது. அவர்கள் எகிப்திலிருந்து நேரடியாகக் கானானுக்குள் செல்லவில்லை; நாற்பது வருடங்கள் வனாந்தரத்தில் அலைந்து திரிந்தார்கள் என்று எண்ணாகமம் நமக்குச் சொல்கிறது!

இதை உருவகமாக எடுத்துக் கொண்டு பேசுவதானால், அநேக விசுவாசிகள் இன்றும் இப்படித் தான் செய்கிறார்கள். கிறிஸ்துவுடைய இரத்தத்தினாலே, அவர்கள் பாவத்திற்கான தண்டனையிலிருந்து விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள் - கிறிஸ்து தரும் மன்னிப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். இருப்பினும் தேவன் அவர்களைப் படைத்தபடி, மறுவாழ்வு கொடுத்தபடி அவர்கள் வாழ்கிறதில்லை. அவர்கள் மனச்சோர்வடைந்து, உற்சாகமிழந்து, திருப்தியற்று, நிறைவான வாழ்க்கை வாழாமல் இருக்கிறார்கள். புதிய ஏற்பாட்டில் கூறப்பட்டுள்ள 'நித்திய ஜீவன்' என்ற தரமான வாழ்க்கை வாழும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குள் அவர்கள் சேரவில்லை (யோவான் 3:15). ''நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்'' (யோவான் 10:10). இந்த வாழ்க்கைத் தரத்தை புதிய ஏற்பாடு 'நித்திய ஜீவன்' என்றழைக்கிறது. இந்த வாழ்க்கைத் தரத்தின் உருவகப் படம் தான் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட கானான் தேசம். இந்தக் 'கானான் தேச' வாழ்க்கை வாழும்படி இரட்சிக்கப்பட்ட விசுவாசியோ, அவிசுவாசம், ஏமாற்றம் மற்றும் குழப்பங்களினூடே சுற்றி வருகிறார். எபிரெய மக்களின் சரித்திரத்தை ஆதார பூர்வமாய் பதிவு செய்துள்ள எண்ணாகமப் புத்தகம், இப்படிச் சுற்றிச் சுற்றி வரும் வாழ்க்கைப் பாடத்தை உருவகப்படுத்தி நமக்குக் கற்பிக்கிறது.

ஒரு தலைமுறையின் மரணம்

இந்தப் புத்தகத்திற்கு இப்பெயர் வரக் காரணம் எபிரெய மக்கள் இருமுறை எண்ணப்பட்டார்கள் என்பது. இப்புத்தகத்தின் முதல் மூன்று

அதிகாரங்களில் ஒரு மக்கள் தொகை கணக்கெடுப்பு நடந்தது.பின்னர் அடுத்த மக்கள் தொகை கணக்கெடுப்பு இருபத்தி ஆறாம் அதிகாரத்தில் வருகிறது. இந்த இரண்டு கணக்கெடுப்புகளுக்குமிடையே ஒரு தலைமுறையினர் அனைவருமே இறந்து போனார்கள். அவர்களுடைய விசுவாசக் குறைவினால் தேவன் இஸ்ரவேலர்களிடம் கீழ்க்கண்டவாறு கூறினார்.

‘‘இந்த வனாந்தரத்தில் உங்கள் பிரேதங்கள் விழும்; உங்களில் இருபது வயது முதல் அதற்கு மேற்பட்டவர்களாக எண்ணப்பட்டு, உங்கள் தொகைக்கு உட்பட்டவர்களும் எனக்கு விரோதமாய் முறுமுறுத்திருக்கிறவர்களுமாகிய அனைவரின் பிரேதங்களும் விழும். எப்புன்னேயின் குமாரன் காலேபும், நூனின் குமாரன் யோசுவாவும் தவிர, மற்றவர்களாகிய நீங்கள் நான் உங்களைக் குடியேற்றுவேன் என்று ஆணையிட்டுக் கொடுத்த தேசத்தில் பிரவேசிப்பதில்லை. கொள்ளையாவார்கள் என்று நீங்கள் சொன்ன உங்கள் குழந்தைகளையோ நான் அதில் பிரவேசிக்கச் செய்வேன்; நீங்கள் அசட்டை பண்ணின தேசத்தை அவர்கள் கண்டறிவார்கள். உங்கள் பிரேதங்களோ இந்த வனாந்தரத்திலே விழும். அவைகள் வனாந்தரத்திலே விழுந்து தீருமட்டும், உங்கள் பிள்ளைகள் நாற்பது வருஷம் வனாந்தரத்திலே திரிந்து, நீங்கள் சோரம்போன பாதகத்தைச் சுமப்பார்கள். நீங்கள் தேசத்தைச் சுற்றிப் பார்த்த நாற்பது நாள் இலக்கத்தின்படியே, ஒவ்வொரு நாள் ஒவ்வொறு வருஷமாக, நீங்கள் நாற்பது வருஷம் உங்கள் அக்கிரமங்களைச் சுமந்து, என் உடன்படிக்கைக்கு வந்த மாறுதலை உணருவீர்கள். கர்த்தராகிய நான் இதைச் சொன்னேன்: எனக்கு விரோதமாய்க் கூட்டங்கூடின இந்தப் பொல்லாத சபையார் யாவருக்கும் இப்படியே செய்வேன்; இந்த வனாந்தரத்திலே அழிவார்கள், இங்கே சாவார்கள் என்று சொல்’’ என்றார் (எண்ணாகமம் 14:29-35).

இஸ்ரவேலர் வனாந்தரத்தில் அலைந்து திரிந்த போது, தாம் அவர்களோடிருப்பதை தேவன் திரும்பத் திரும்ப நிரூபிக்க முயன்றார். அவர்கள் விசுவாசத்திற்கு அடித்தளமும் ஆதாரமுமாக அவர்களுக்கென அற்புதங்கள் செய்தார். அவர்கள் யோர்தான் நதியைக் கடந்து, கானான்

தேசத்திற்குள் செல்ல முடியும் என விசுவாசிக்கத் தேவையான விசுவாசத்தை அவர்களுக்குக் கொடுக்க இப்படி அவர் முயன்றார்.

ஆனால், அவர்கள் எகிப்திலிருந்து வந்து, சிவந்த சமுத்திரத்தைக் கடந்தார்கள். காதேஸ் பர்னேயாவில், சீனாய் மலையினிடத்திற்கு வந்தார்கள் அதன்பின்... நாற்பது வருடங்கள் சுற்றிச் சுற்றி அலைந்தார்கள். எகிப்திலிருந்து கானானுக்குச் செல்ல பதினொரு நாள் தான் ஆகும் என உபாகமப் புத்தகத்தில் சொல்லப்பட்டுள்ளது (உபாகமம் 1:1).

அவர்கள் விசுவாசத்தை வளர்க்க, தேவன் பத்துமுறை வனாந்தரத்தில் ஆச்சரியமான அற்புதங்களைச் செய்தார். ஆனால் அவர்களோ சுற்றிச் சுற்றி நடந்து கொண்டேயிருந்தார்கள். அநேக சமயங்களில் அவர்கள் மிக மிக பயங்கரமாகப் பாவம் செய்த தனிமித்தமாக, மோசே ஒரே சமயம் ஆசாரியனாகவும் தீர்க்கத்தரிசியாகவும் பணியாற்ற வேண்டியதாயிற்று. அவர்களுடைய ஆசாரியனாக, அவர் சீனாய் மலைக்குச் சென்று, அவர்களுக்காக தேவனிடம் மன்றாடினார். ‘‘தேவனே அவர்களை மன்னியும், தேவனே அவர்களை மன்னியும்’’ என ஜெபித்தார். இது பத்து முறை நடந்தது, பத்து முறையும் தேவன் அவர்களை மன்னித்தார் (எண்ணாகமம் 14:22).

இஸ்ரவேல் புத்திரரின் பாவங்களை மன்னிப்பதன் மூலம் தேவன் பொறுமை காட்ட வேண்டுமென மோசே சீனாய் மலையில் தேவனிடம் மன்றாடிக் கேட்டான். மோசே கேட்டுக் கொண்டபடியே கர்த்தர் அவர்களை மன்னித்தார். ஆனால் ‘‘எனக்கு விரோதமாய் முறுமுறுக்கிற இந்தப் பொல்லாத சபையாரை எது வரைக்கும் பொறுப்பேன்? இஸ்ரவேல் புத்திரர் எனக்கு விரோதமாய் முறுமுறுக்கிறதைக் கேட்டேன். நீ அவர்களோடே சொல்ல வேண்டியது என்னவென்றால்: நீங்கள் என் செவிகள் கேட்கச் சொன்ன பிரகாரம் உங்களுக்குச் செய்வேன் என்பதை என் ஜீவனைக் கொண்டு சொல்கிறேன் என்று கர்த்தர் உரைக்கிறார். இந்த வனாந்தரத்தில் உங்கள் பிரேதங்கள் விழும்; உங்களில் இருபது வயது முதல் அதற்கு மேற்பட்டவர்களாக எண்ணப்பட்டு, உங்கள்

தொகைக்கு உட்பட்டவர்களும் எனக்கு விரோதமாய் முறுமுறுத்திருக் கிறவர்களுமாகிய அனைவரின் பிரேதங்களும் விழும்'' என்று கூறினார் (எண்ணாகமம் 14:27-29).

தேவனுடைய வார்த்தைகளை மோசே மக்களிடம் கூறியபொழுது, பாளயம் முழுவதும் எத்தனை துக்கம், எத்தனை துயரம்! அவர்கள் அதிகாலையில் எழுந்து, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தை நோக்கிப் புறப்பட்டார்கள். அவர்கள் பாவம் செய்துவிட்டதை உணர்ந்தார்கள். கர்த்தர் அவர்களுக்கு வாக்குக் கொடுத்த தேசத்திற்குச் செல்லவும் ஆயத்தமாயிருந்தார்கள். ஆனால் மோசேயோ இப்பொழுது காலம் கடந்துவிட்டது என்றார். அவர்கள் கர்த்தரை விட்டு விலகிப் போனதால், கர்த்தரும் இப்பொழுது அவர்களை விட்டுப் போய் விட்டார்.

சரித்திரத்தின் இந்தப் பகுதி, உருவகமாக நாம் தேவனோடு கொண்டிருக்கும் தொடர்பு பற்றிச் சிறிது கூறுகிறது. இஸ்ரவேல் புத்திரரை அவர் மன்னித்தார். ஆனால் அவர்கள் பாவம் இன்னும் அவரை மிகவும் துக்கப்படுத்தியது. இதே போல் நம் பாவங்கள் மன்னிக்கப் படுவதற்கும், அதிகமான காரியங்கள், நம் கிறிஸ்தவ வாழ்க்கைக்கு உள்ளன. தேவன் நம்மைப் படைத்தார்; இரட்சிப்பின் மூலமாக நம்மை மறுபடியும் சிருஷ்டித்தார் - அவருக்கு ஊழியம் செய்வதன் மூலமாகவும் அவர் நமக்கென திட்டம் செய்து வைத்துள்ள எல்லாவற்றையும் நாம் செய்வதன் மூலமாகவும் தேவனை மகிமைப்படுத்துவதற்காகவே அப்படிச் செய்தார். நம்முடைய இரட்சிப்பிற்கு ஒரு காரணம் அல்லது நோக்கம் இருப்பதாக வேதம் சொல்லுகிறது. இஸ்ரவேல் மக்கள் கானானுக்குள் செல்லாமல் வனாந்தரத்தில் அலைந்து திரிந்த அநுபவம் ஒரு பயங்கரமான நிஜத்தைக் காட்டுகிறது. நாமும் கூட இரட்சிக்கப்பட்டதன் நோக்கத்தை இந்த வாழ்க்கையில் தவறவிடுவதற்கு நேரலாம், வாய்ப்பு உள்ளது.

தீர்மானிக்க வேண்டிய கட்டம்

பிரமாண்டமானதொரு விமானத்தை இயக்கிப் பறக்க வைக்கும் விமானி ஒரு குறிப்பிட்ட நிலை வரும்பொழுது, அவன் வேறு வழியில்லாமல் தரையிறக்கத்தான் வேண்டும். அங்கே அவன் தொடர்ந்து பறக்கமாட்டான். அதை ''தீர்மானம் செய்ய வேண்டிய

நிலை'' எனக் கூறுவர். எல்லையற்ற பொறுமையும், நிறைந்த கிருபையுமுள்ளவர் தேவன். ஆனால் நம்முடைய விசுவாசப் பயணங்களிலும் அவர் தீர்மானம் எடுக்க வேண்டிய கட்டம் இருப்பதாக, எண்ணாகமம் 14ம் அதிகாரம் கூறுகிறது. நாம் தேவனோடு நடந்து வருகையில், ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் நம்முடைய வாழ்க்கையில் தேவனுடைய சித்தத்தைச் செய்யப் போகிறோம் அல்லது அவர் சித்தத்தைச் செய்யப் போகிறதில்லை எனத் தீர்மானிக்கிறோம்.

தேவனுடைய சித்தத்தை நாம் அறியவும் அதைச் செய்யவும் வைக்க தேவன் எல்லா உதவியும் செய்வார்தான். ஆயினும் ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் அவர் நம்முடைய சொந்த வழிக்கு நம்மை விட்டுவிடுவார். அதன்பின், எதைச் செய்யவேண்டுமென்று அவர் முயன்றாரோ, அதைச் செய்வதற்கு இன்னொருவரைத் தெரிந்து கொள்வார். நாம் பிடிவாதமாக, தேவனுடைய சித்தத்தைச் செய்ய மாட்டோமென்று மறுத்துவிடுவதால், தேவன் நம்மை விட்டுப் போய் விடுகிறார். இவ்வாழ்க்கையில் இரட்சிக்கப்பட்டதன் நோக்கத்தை நாம் தவறவிட்டு விடுவதால், நமக்குப் பேரிழப்பு உண்டாகிறது. நம்முடைய இரட்சிப்பை நாம் இழப்பதில்லை; ஆனால் எதற்காக தேவன் நம்மை இரட்சித்தாரோ, அந்த நோக்கத்தை நிறைவேற்றும் தருணத்தை நாம் இழந்து விடுகிறோம். (எபேசியர் 2:8-10)

எண்ணாகமம் பதினான்காம் அதிகாரத்தில் மோசே மக்களிடம், ''காலம் கடந்து விட்டது. உங்கள் ஆயுதங்களை எடுக்க வேண்டாம். நீங்கள் தேவனை விட்டுப் போனீர்கள். இப்பொழுது தேவன் உங்களை விட்டுப் போய் விட்டார்'' எனக் கூறும் வசனங்கள் மிக மிக துயரம் தரும் வசனங்களாகும்.

தேவனுடைய நன்மையும், பிரியமும், பரிபூரணமுமான சித்தம் என்று ஒன்று நம் ஒவ்வொருவரின் வாழ்க்கைக்கெனவும் இருக்கிறது. (ரோமர் 12:1,2). அந்தத் தேவனுடைய சித்தத்தை நம் வாழ்க்கையில் செய்வதைப் பற்றிக் கூறுகிறது எண்ணாகமம். பதினான்காம் அதிகாரத்தில், தேவனுடைய சித்தத்தைச் செய்யப்போகிறோமா இல்லையா என்று தீர்மானிக்கும் கட்டத்தைப் பற்றி வாசிக்கிறோம். நாம்

இனியும் சுற்றிச் சுற்றி அலைந்து திரியப்போவதில்லை தேவன் நமக்குத் திட்டம் வகுத்து வைத்துள்ள கானானுக்குள் பிரவேசித்து ஜெயிக்கப் போகிறோம் என்று தீர்மானிக்கக் காலம் கடந்து போகவில்லை.

அத்தியாயம்-5

அறிவைக் கவரும் உருவகங்கள்

எண்ணாகமப் புத்தகத்தில் வலிமையான உருவகங்கள் பல உள்ளன. வேதத்திலுள்ள சரித்திர பூர்வமான விஷயங்களை நம் தியானத்திற்கும், நடைமுறை வாழ்க்கைக்கும் பயன்படுத்த வேண்டு மெனப் பவுல் அப்போஸ்தலன் கீழ்க்கண்டவாறு கூறுகிறார்: ''இவைகளெல்லாம் திருஷ்டாந்தங்களாக அவர்களுக்குச் சம்பவித்தது; உலகத்தின் முடிவு காலத்திலுள்ள நமக்கு எச்சரிப்புண்டாகும்படி எழுதப்பட்டும் இருக்கிறது'' (1 கொரிந்தியர் 10:11). வேதத்திலுள்ள சரித்திரங்களைப் படிக்கும் பொழுது திருஷ்டாந்தங்கள் மற்றும் எச்சரிப்புகளைக் கண்டுகொள்ள வேண்டுமென்பதே இவ்வசனத்தின் பொருள்.

'திருஷ்டாந்தங்கள்' என்று பவுல் உபயோகிக்கும் வார்த்தையை 'மாதிரிகள்' அல்லது 'காட்சிப்பாடங்கள்' அல்லது 'உருவகங்கள்' என்று மொழிபெயர்க்கலாம். உருவகங்கள் என்று சொல்லும்போது இவை நடக்காத சம்பவங்கள் என்று நாம் சொல்வதில்லை. உருவகம் என்றால் சன்மார்க்க அல்லது ஆவிக்குரிய அறிவுரை கொண்டுள்ள ஆழமான அர்த்தம் கொண்டுள்ளது என்று பொருள்.

வழிகாட்டும் மேகம்

வனாந்தரத்திலே ஆசரிப்புக் கூடாரம் செய்து முடிக்கப்பட்ட வேளையிலே ஒரு மகத்தான அற்புதம் நடந்ததாக யாத்திராகமத்தின் கடைசி சில வசனங்களில் வாசிக்கிறோம். வனாந்தரத்தில் ஆசரிப்புக் கூடாரம் எழுப்புவதற்கு தேவன் மோசேக்குக் கொடுத்த அளவுகள் மற்றும் மாதிரியின்படியே பிற்காலத்தில் சாலொமோனின் ஆலயம் கட்டப்பட்டது. சாலொமோனின் ஆலயம் நிரந்தர வழிபாட்டு ஆலயம்.

அது விலையுயர்ந்த பொருள்களால் மகிமைகரமானதாகக் கட்டப்பட்டது. அந்த ஆலயம் பிரதிஷ்டை செய்யப்பட்ட பொழுது, பரிசுத்த ஆவியானவர், மேகம் போல் இறங்கி தேவாலயத்தை வல்லமையாக நிரம்பியதால், ஆசாரியர்கள் தேவாலயத்தினின்று வெளியே ஓடிவிட்டார்கள் (1 ராஜாக்கள் 8:10,11).

மோசே தேவனுக்குக் கீழ்ப்படிந்து, வனாந்தரத்தில் ஆசரிப்புக் கூடாரத்தைக் கட்டினான். அப்பொழுது ஒரு மகத்தான அற்புதம் நடந்தது. ''வாசஸ்தலம் ஸ்தாபனஞ்செய்யப்பட்ட நாளிலே, மேகமானது சாட்சியின் கூடாரமாகிய வாசஸ்தலத்தை மூடிற்று; சாயங்காலமான போது, வாசஸ்தலத்தின் மேல் அக்கினிமயமான ஒரு தோற்றம் உண்டாயிற்று; அது விடியற்காலமட்டும் இருந்தது. இப்படி நித்தமும் இருந்தது; பகலில் மேகமும் இரவில் அக்கினித் தோற்றமும் அதை மூடிக் கொண்டிருந்தது. மேகம் கூடாரத்திலிருந்து மேலே எழும்பும்போது இஸ்ரவேல் புத்திரர் பிரயாணம் பண்ணுவார்கள்; மேகம் தங்குமிடத்தில் இஸ்ரவேல் புத்திரர் பாளயமிறங்குவார்கள். கர்த்தருடைய கட்டளையின்படியே இஸ்ரவேல் புத்திரர் பிரயாணப் படுவார்கள்; கர்த்தருடைய கட்டளையின்படியே பாளயமிறங்குவார்கள். மேகம் வாசஸ்தலத்தின் மேல் தங்கியிருக்கும் நாளெல்லாம் அவர்கள் பாளயத்தில் தங்கியிருப்பார்கள். மேகம் நெடுநாள் வாசஸ்தலத்தின் மேல் தங்கியிருக்கும்போது, இஸ்ரவேல் புத்திரர் பிரயாணப்படாமல், கர்த்தரின் காவலைக் காத்துக்கொண்டிருப்பார்கள்''(எண்ணாகமம் 9:15-19).

இந்த அற்புதச் சம்பவத்தின் விவரம் தெய்வீக வழி நடத்துதலைக் குறிக்கிறது; நம்மில் பரிசுத்த ஆவியானவரின் அற்புதக் கிரியை, நம்மீது ஆவியானவரின் அபிஷேகம் - இவற்றையும் குறிக்கின்றன. பின்னர், புதிய ஏற்பாட்டில், ஆசரிப்புக் கூடாரம் நம் சரீரங்களைக் காட்டும் சித்திரமாகிறது. பரிசுத்த ஆவியானவர் தங்கும் ஆலயமாக நம் சரீரம் மாறுகிறது. சரீரமாகிய அந்த ஆலயத்தில் 'மறுபிறப்பு' எனும் அற்புதத்தைப் பரிசுத்த ஆவியானவர் நிகழ்த்துகிறார். பரிசுத்த ஆவியானவர் நம்மை அபிஷேகிக்கிறார், நம்முள் வாசம் பண்ணுகிறார்.

ஆசரிப்புக் கூடாரத்தையும், சாலோமோனின் தேவாலயத்தையும் நிரப்பியது போல நம்மையும் நிரப்புகிறார்.

நீங்கள் ஒருவேளை இந்தக் கேள்வியைக் கேட்க நினைக்கலாம். ''இஸ்ரவேல் புத்திரரை இந்த மேகம் வழி நடத்தி, அவர்களும் கீழ்ப்படிந்து பின்பற்றினார்களென்றால், அந்த மேகம் ஏன் வனாந்தரத்தையும் யோர்தானையும் குறுக்காய் கடந்த வாக்குத்தத்தம் பண்ணின தேசத்துக்கு அவர்களை வழி நடத்தவில்லை? தேவனுடைய ஆலோசனையைப் பெற்ற அவர்கள் வனாந்தரத்தையே சுற்றிச் சுற்றி அலைந்து திரிந்தது எப்படி?''

இங்கே ஒரு முக்கியமான சத்தியம் இருக்கிறது. தேவன் தாம் படைத்த படைப்புக்குத் தெரிந்து கொள்ளும் சுதந்திரத்தைக் கொடுத்திருக்கிறார். தேவன் மனிதனைத் தம்முடைய சாயலாகவே படைத்துள்ளார் என்பதைக் காட்டும் வழிகளில் இதுவும் ஒன்றாகும். ஓன்றைத் தெரிந்துக்கொள்வதற்கு நமக்கிருக்கும் சுதந்திரத்தில் அவர் குறுக்கிடமாட்டார். தேவன் நமக்கென வைத்திருக்கும் எல்லா ஆசீர்வாதங்களையும் விசுவாசித்து, உரிமைபாராட்டிக் கேட்கும் விசுவாசம் நமக்கு இருந்து, அவருடைய நன்மையும் பரிபூரணமுமான சித்தத்தை ஏற்றுக் கொண்டால், அப்பொழுது நம்முடைய ஆவிக்குரிய வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்கு அவர் நம்மை நடத்திச் செல்வார். அவருடைய ஆசீர்வாதங்களை நம்மீது பொழிந்து, நம் வாழ்க்கைக்கென அவர் கொண்டிருக்கும் சித்தத்தின் மையப் பகுதிக்கே நம்மை நடத்திச் செல்லக்கூடும்.

ஆனால், நாம் விசுவாசிக்காவிட்டால், நம்முடைய ஆவிக்குரிய ''வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட தேசத்தை''நாம் காணமாட்டோம். எதையும் நாமே ''தெரிந்து கொள்ளும்'' ஆற்றலுள்ளவர்களாக அவர் நம்மைப் படைத்திருக்கிறார். ஆகவே எதையும் செய்யும்படியாக நம்மை அவர் கட்டாயப்படுத்தமாட்டார். தேவன் ஒரு யானையைப் போல நம்மீது சாயலாம். நாம் மறுத்துத்தள்ள முடியாத அநேகக் காரியங்களை தேவன் நமக்குத் தருவதாக நம்முன் வைக்கலாம். சில சமயங்களில் நம்முடைய தெரிந்துகொள்ளுதல்களைப் பார்க்கும்போது,

நாம் செய்யக்கூடிய ஒரே புத்தியுள்ள காரியம் அவருக்கு நம்மை ஒப்புக் கொடுத்து அவருடைய சித்தத்தைச் செய்வது தான்.

புதிய ஏற்பாட்டில் எபிரெயர் மூன்றாம் நான்காம் அதிகாரங்களில், அவர்களுடைய அவிசுவாசத்தினால் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குள் அவர்கள் பிரவேசிக்கவில்லை எனக் கூறப்பட்டுள்ளது. மேகஸ்தம்பமும் அக்கினிஸ்தம்பமும் மக்களை வனாந்தரத்திலிருந்து நேரடியாக வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்கு நடத்திச் செல்லாததன் காரணம் அதுவே என நாம் கற்றுக்கொள்ளக் கூடும்.

அது என்ன?

எண்ணாகமப் புத்தகத்தில் நாம் காணும் சத்தியம் இறைச்சியும் மன்னாவும் பற்றிய சம்பவம் குறித்தது. இயற்கைக்கு அப்பாற்பட்ட விதமாக தேவன் தமது மக்களை மன்னாவினால் போஷித்தார். மன்னா என்றால் எபிரெய மொழியில் 'அது என்ன?' என்று பொருள். அது என்ன என்று அவர்களால் தீர்மானமாய்ச் சொல்லமுடியவில்லை. ஆகவே அவர்கள் அதை 'அது என்ன?' என்று அழைத்தார்கள். நாற்பது வருடங்களாக, தேவன் 'அது என்ன?' என்பதால் அவர்களை போஷித்தார்.

தேவனுடைய மக்கள் மோசேயிடம் ஓயாமல் முறுமுறுத்தார்கள் என்று சொல்லப்பட்டுள்ளது. எண்ணாகமம் 11:4-6 இப்படிச் சொல்லுகிறது.

''பின்பு அவர்களுக்குள் இருந்த பல ஜாதியான அந்நிய ஜனங்கள் மிகுந்த இச்சையுள்ளவர்களானார்கள்; இஸ்ரவேல் புத்திரரும் திரும்ப அழுது, நமக்கு இறைச்சியைப் புசிக்கக் கொடுப்பவர் யார்? நாம் எகிப்திலே கிரயமில்லாமல் சாப்பிட்ட மச்சங்களையும், வெள்ளரிக்காய் களையும், கொம்மட்டிக்காய்களையும், கீரைகளையும், வெண்காயங் களையும், வெள்ளைப் பூண்டுகளையும் நினைக்கிறோம். இப்பொழுது நம்முடைய உள்ளம் வாடிப்போகிறது; இந்த மன்னாவைத் தவிர, நம்முடைய கண்களுக்கு முன்பாக வேறொன்றும் இல்லையே என்று சொன்னார்கள்.''

இப்பகுதியில் எகிப்து என்பது உலகில் நமது பழைய பாவ ஜீவியத்திற்கு அடையாளமாயிருக்கிறது. 'எகிப்தி'லிருந்து விடுவிக்கப் பட்ட ஒருவர், திரும்பி ''எகிப்தின் வாழ்க்கைக்காக ஏங்குகிறேன்'' என்று சொல்லும் போது, அது தேவனுக்குத்ள துக்கம் தருகிறது. இப்பகுதியில் தேவன் மோசேயிடம் ''நீ ஜனங்களை நோக்கி: நாளைக்காக உங்களைப் பரிசுத்தம் பண்ணுங்கள்; நீங்கள் இறைச்சி சாப்பிடுவீர்கள்; எங்களுக்கு இறைச்சி சாப்பிடக் கொடுப்பவர் யார் என்றும், எகிப்திலே எங்களுக்கு சௌக்கியமாயிருந்தது என்றும், கர்த்தருடைய செவிகளை கேட்க அழுதீர்களே; ஆகையால் நீங்கள் சாப்பிடும்படி கர்த்தர் உங்களுக்கு இறைச்சி கொடுப்பார்... உங்களுக்குள்ளே இருக்கிற கர்த்தரை அசட்டை பண்ணி நாங்கள் ஏன் எகிப்திலிருந்து புறப்பட்டோம் என்று அவருக்கு முன்பாக அழுதீர்களே என்று சொல் என்றார்.'' கவனிக்க வேண்டிய செய்தி இது; இறைச்சியல்ல. அவர்கள் வேண்டிய அளவு தேவன் அவர்களுக்கு இறைச்சியைக் கொடுக்கப்போவதாகச் சொல்கிறார். ''நீங்கள் கர்த்தரை அசட்டை பண்ணி எகிப்திற்காக அழுதீர்களே'' என்றார். அது தான் முக்கியம். அவர்களுக்கு இறைச்சியை அனுப்பிய பிறகு, அவர் கொள்ளைநோயையும் அனுப்பினார். இந்த மக்கள் இறைச்சிக்காகவும் எகிப்திற்காகவும் இச்சித்ததாலேயே அவ்வாறு செய்தார்.

நமது இருதயத்தின் விருப்பங்களை தேவன் நமக்குத் தருவார் என வேதம் சொல்லுகிறது. அது நமக்கு ஒரு பெரிய ஆறுதலாகும். அதே சமயம் அது ஒரு பெரிய சவாலும் கூட. உன் இருதயத்தின் விருப்பங்களெல்லாம் ஆவிக்குரியவைகளின் பேரிலா அல்லது உன் இருதயத்தின் விருப்பங்களெல்லாம் எகிப்தின் பேரிலா?

தேவன் இஸ்ரவேலர் கேட்டதைக் கொடுத்தார்; ஆனால் அவர்கள் ஆத்துமாக்களிலோ இளைப்பை அனுப்பினார் (சங்கீதம் 106:15). விசுவாசிகள் என்று சொல்லிக்கொள்ளும் அநேகருடைய காரியமும் இப்படித்தான் இருக்கிறது. நமக்கு நாமே தெரிந்து கொள்ளும்படியாய் படைக்கப்பட்டவர்கள். நாம் எதைத் தெரிந்து கொள்கிறோமோ, அது நமக்குக் கிடைக்கும். எகிப்தின் வெள்ளைப் பூண்டுகளையும் வெங்காயத்தையும் தெரிந்து கொண்டால், நாம் கேட்டதை தேவன் தருவார். ஆனால் நம் ஆத்துமாக்களில் இளைப்பை அனுப்புவார். ஏதேன் தோட்டத்தில் தேவன் உரையாடலை ஆரம்பிக்கக் கேட்ட அதே கேள்வி இப்பொழுது நமக்குச் சவாலாகக் கேட்கப்படுகிறது. ''நீ எங்கே இருக்கிறாய்?'' நீ இன்னும் எகிப்தில் தான் இருக்கிறாயா? நீ வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தில் இருக்கிறாயா? எகிப்துக்கும் கானானுக்கும் இடையே சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருக்கிறாயா? கானானிலிருந்து கொண்டு இன்னும் எகிப்தின் காரியங்களுக்காக ஏங்கிக் கொண்டிருக்கிறாயா?

வேவுகாரர்கள் (அதிகாரம் 13)

தமக்குப் பிரியமில்லாவிட்டாலும் கூட தேவன் நமக்குப் பிரியமானவைகளை எப்படி அருளுகிறார் என்பதைக் காட்டும் சம்பவமாக, இஸ்ரவேலர் பன்னிரண்டு வேவுகாரர்களை அனுப்பியது அமைகிறது. கானான் தேசத்து நகரங்கள் பாதுகாக்கப்பட்டவையா இல்லையா எனச் சுற்றி உளவு பார்த்து வர வேவுகாரர்கள் அனுப்பப்பட்டனர். மக்கள் கொஞ்சப்பேரா, அதிகமானவர்களா, பலசாலிகளா, இல்லையா எனவும் மக்களை ஜெயிப்பது எவ்வளவு கடினம் எனவும் அறிந்து வர அனுப்பப்பட்டனர்.

பன்னிரண்டு வேவுகாரர்களும் திரும்பி வந்தனர். அந்த வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தின் செழிப்பைப் பற்றிப் புகழ்ந்து பேசினர். ஒரு பெரிய மரக்கொம்பில் கட்டி இருவர் தூக்கி வரவேண்டிய அளவுக்குப் பெரியதாயிருந்த திராட்சக்குலை ஒன்றைக் கொண்டு வந்தார்கள். அங்குள்ள மக்கள் இராட்சதர்கள், பலசாலிகளான யுத்த வீரர்கள், கானான் தேசத்துப் பட்டணங்கள் பெரிய அரணகளால் பாதுகாக்கப்பட்டுள்ளன. அந்தச் சுவர்கள் மேல் வீடுகள் கட்டியுள்ளனர். அந்த அளவுக்கு அவை தடிமனானவை என்றனர்.

பன்னிரண்டு பேரில் பத்து பேர் இராட்சதர்கள் பற்றிய அறிவில் நிபுணர்கள். ஒரு ஆவிக்குரிய மனிதர் இப்படிச் சொன்னார். ''மற்றவர்கள் இராட்சதர்களைப் பார்த்தார்கள். காலேப் கர்த்தரைப் பார்த்தான்!'' இந்தப் பன்னிரண்டு வேவுகாரர்களையும் இன்றைய மூப்பர்கள், தலைவர்கள், உதவிக்காரர்கள் முதலியோருக்கு ஒருவர் ஒப்பிட்டுச் சொன்னார்.

இரண்டு பேருக்குக் கானானுக்குள் பிரவேசிக்குமளவிற்கு விசுவாசம் இருந்தது. பத்து பேரோ இராட்சதர்களை மட்டுமே பார்த்தார்கள்.

கோட்டை கொத்தளங்களோடு கூடிய கானானின் பட்டணங்களின் பலம் பற்றிக் காலேபுக்குத் தெரிந்திருந்தது. ஆனால் அவன் பயப்படவில்லை. மோசேக்கு முன்னாக நின்ற காலேப் மக்களுக்கு தைரியம் சொன்னான். ''நாம் உடனே போய் அதைச் சுதந்தரித்துக் கொள்வோம்; நாம் அதை எளிதாய் ஜெயித்துக் கொள்ளலாம்,'' என்றான் (எண்ணாகமம் 13:30). காலேப், யோசுவா ஆகிய இருவருடைய விசுவாசத்தால் தேவன் அதிகம் கவரப்பட்டார். ஆகவே பத்து லட்ச முதல் முப்பது லட்சம் வரையுள்ள ஒரு முழு ஜனத் தொகையைக் காட்டிலும் இவ்விருவரையே விரும்பினார். ''நீங்களெல்லாரும் இந்த வனாந்தரத்தில் சாகப் போகிறீர்கள். காலேப் யோசுவா ஆகிய இருவரை மட்டும் நான் என்னுடன் வாக்குத்தத்தம் பண்ணப்பட தேசத்திற்கு எடுத்துச் செல்வேன். ஏனென்றால் அவர்கள் என்னை முழுவதுமாய்ப் பின்பற்றி விசுவாசித்தார்கள்'' என்று தேவன் கூறினார். தேவன் விசுவாசத்தை அதிகம் விலை மதிக்கிறார். விசுவாசமுள்ள இரு மனிதர் விசுவாசமற்ற லட்சக்கணக்கான மக்களைக் காட்டிலும் அதிக மதிப்புடையவர்கள்.

இந்தச் சம்பவத்தோடு தொடர்புள்ள இன்னொரு சம்பவம் இருக்கிறது. நாற்பத்தைந்து ஆண்டுகள் கழித்து, அவர்கள் யோர்தானைக் கடந்தபோது (யோசுவா 14) இஸ்ரவேல் புத்திரர் எபிரோனுக்கு வந்து சேர்ந்தார்கள். காலேப் தான் பார்த்த நகரங்களிலேயே எபிரோன் தான் பெரிய பட்டணம் என நினைத்தான். எபிரோனை ஜெயிக்க, தேவன் இஸ்ரவேலருக்கு பலம் தருவார் என அவன் விசுவாசித்தான். காலேபின் விசுவாசத்தை மோசே அதிகமாக மதித்ததால், எபிரோன் ஜெயிக்கப்பட்ட பிறகு அந்த எபிரோன் பட்டணம் காலேபுக்குச் சொந்தமாகும் என்று திட்டவட்டமாய் வாக்குக் கொடுத்தான்.

நாற்பது ஆண்டுகள் வனாந்தரத்தில் அலைந்து திரிந்தபின், காலேப் யோசுவாவின் முன் நின்றான். மோசே மரித்த பின் யோசுவா தான்

தலைவன் ஆனான். ஆகவே அவனிடம் மோசேயின் வார்த்தைகளை காலேப் ஞாபகப்படுத்தினான். காலேபுக்கு அப்பொழுது வயது எண்பத்தைந்து. ஆனால் தேவ ஒத்தாசையோடு அவனால் எபிரோனை ஜெயிக்க முடியும் என அவன் அறிந்திருந்தான்.

யோசுவா எபிரோனை காலேபுக்குக் கொடுத்தான். அவனும் அதை ஜெயித்தான். வனாந்தரத்தில் மற்ற இஸ்ரவேலர் தங்களைக் கட்டுப்படுத்த இயலாமல் நடந்து கொண்ட போது தேவன் அவர்களைக் கடிக்கும் சர்ப்பங்களை அனுப்ப வேண்டியதாயிற்று. காலேப் அந்த முறுமுறுப்புகளுக்கெல்லாம் தன்னை விலக்கிக் காத்துக் கொண்டான். அவன் தன் கண்களை வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திலே பதிய வைத்தான். அந்த தரிசனத்தை அவன் ஒருபோதும் இழக்கவில்லை.

முறுமுறுப்பவர்களும் சர்ப்பங்கள் கடித்தலும் (எண்ணாகமம் 21)

குறை கூறுவதையும் முறுமுறுப்பதையும் தேவன் வெறுக்கிறார். இஸ்ரவேல் புத்திரர் குறை கூறியபொழுது, அவர்களைக் கடிக்கும் படி தேவன் சர்ப்பங்களை அனுப்பினார். சர்ப்பங்கள் கடித்ததால் அநேகர் செத்துமடித்தார்கள். அப்பொழுது தேவன் மோசேயிடம் ஒரு வெண்கல சர்ப்பத்தை ஒரு கோலில் கட்டி பாளயத்தின் நடுவில் நட்டு வைக்கச் சொன்னார். இந்த நற்செய்தி பாளயம் முழுவதும் பரவியது. சர்ப்பத்தால் கடிபட்ட, குறைகூறிய மக்களில் யாரெல்லாம் பாளயத்தின் நடுவிலுள்ள வெண்கல சர்ப்பம் இருக்குமிடம் போய் அதை நோக்கிப் பார்த்தார்களோ அவர்கள் சுகமாகிப் பிழைத்தார்கள்.

சர்ப்பத்தால் கடிபட்ட குறைகூறிய மக்களில் அநேகர் தேவனை சந்தேகித்தனர் ''ஒரு வெண்கலத் துண்டை நோக்கிப் பார்ப்பது? எப்படி அது பாம்புக்கடியிலிருந்து சுகம் கொடுக்கும்''எனக் கேள்வி கேட்டார்கள். அவர்கள் உடல் வீங்கிச் செத்தார்கள். ஆனால் மற்றவர்களோ, மருத்துவ ரீதியாக அதற்கு அர்த்தம் இல்லாவிடினும், தங்களுக்கிருக்கும் ஒரே நம்பிக்கை தேவனே எனத் தீர்மானித்தார்கள். பாளயத்தின் நடுப் பகுதிக்குச் சிலர் தவழ்ந்து சென்றனர்; சிலரைத் தூக்கிக் கொண்டு போனார்கள் அல்லது இழுத்துக் கொண்டு

போனார்கள். அவர்கள் வெண்கல சர்ப்பத்தை நோக்கிப் பார்த்தார்கள். சுகமடைந்தார்கள்!

சுவிசேஷத்தில் இந்த உருவகத்தைப் பயன்படுத்தியதை இயேசுவானர் நிக்கோதேமு என்னும் ஒரு ரபியை மாலை வேளையில் சந்தித்துப் பேசியதில் காண்கிறோம். எருசலேமில் பிரபலமான இந்த ரபி இயேசுவானவர் சொல்வதைக் கேட்க வந்ததாக அவரிடம் சொன்னான். ஏனென்றால் அவன் கண்ட அவரின் செயல்கள் அவன் மனதில் ஆழப் பதிந்திருந்ததாகக் கூறினான். அப்பொழுது இயேசுவானவர் இந்த மகத்தான பழைய ஏற்பாட்டு அற்புதத்தை நிக்கோதேமுவுக்கு ஞாபகப்படுத்தினார். பின்னர் இந்த அற்புதத்தைத் தன்னைக் குறித்துச் சொல்லுவதற்குப் பயன்படுத்தினார். சர்ப்பமானது கோலிலே உயர்த்தப்பட்டதுபோல், இயேசுவானவரும் சிலுவையிலே உயர்த்தப் படவேண்டும் என நிக்கோதேமுவிடம் அவர் கூறினார். சாவுக்கேது வான சர்ப்பத்தின் கடியினால் அவதியுற்ற முறுமுறுப்பாளர்கள் காப்பாற்றப்பட்ட அதே விதமாக சிலுவையில் அறையப்பட்ட இயேசுவை விசுவாசத்துடன் நோக்கிப் பார்க்கும் அனைவரும் தங்கள் பாவப் பிரச்சினையிலிருந்து விடுவிக்கப்படுவார்கள். (யோவான் 3:14-16)

நோக்கிப்பார், வாழ்வடைவாய்

நீ விசுவாசத்துடன் நோக்கிப் பார்த்துள்ளாயா? சிலுவையிலே உயர்த்தப்பட்ட இயேசு கிறிஸ்துவை நீ நோக்கிப் பார்த்திருக்கிறாயா? அந்த சிலுவையிலே இயேசுவானவர் உனக்காகச் செய்த எல்லாவற்றின் மீதும் உன் விசுவாசம் மற்றும் நம்பிக்கையை வைத்திருக்கிறாயா? உன் பாவப் பிரச்சினைக்கு அவர் ஒருவரே தீர்வு. ஏனென்றால் அவர் உனக்காக சிலுவையில் மரித்த போது அவர் தேவனுடைய ஒரே குமாரனாயிருந்தார். அதன் பொருள் என்னவெனில் இயேசு கிறிஸ்து தேவன் தந்த ஒரே இரட்சகர். தீர்வு காண்பதற்கான ஒரே நம்பிக்கை உனக்கு அவர்தான். நித்திய மரணம் தரும் உன் பாவப் பிரச்சினையிலிருந்து இரட்சிக்கும் இரட்சகரும் அவரே.

அத்தியாயம்-6

ஒரு கன்மலை - ஒரு கோல் (அதிகாரம் 20)

நாம் மோசேயின் வாழ்க்கையைத் தொடர்ந்து பார்க்கும் பொழுது, அவர் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குள் பிரவேசிக்க அனுமதிக்கப்படவேயில்லை என்பது விசனமானதொரு காரியம் தான். கடைசியில் மோசேக்காக மக்கள் முழுவதையும் தேவன் இழந்து விடவில்லை. எண்ணாகமப் புத்தகத்தில் மோசேயின் பாவம் நமக்குப் புரியாத புதிர்களில் ஒன்று.

கர்த்தர் மோசேயிடம் பேசி, அவனுடைய கோலை எடுத்துக் கொண்டு, ஜனங்களை ஒன்றாகக் கூட்டச் சொன்னார். தேவன் அவனைக் கன்மலையிடம் <u>பேசச்</u> சொன்னார். அப்பொழுது அது மக்களுக்கும் மிருகங்களுக்கும் தண்ணீரைக் கொடுக்கும் என்றார். மோசே சந்தேகித்தாலும், மக்களைக் கூட்டினான். அவன் கன்மலையைக் கோலினால் இரண்டு முறை <u>அடித்தான்</u>. தண்ணீர் ஏராளமாய்ப் புறப்பட்டது. மக்களும் அவர்கள் மிருகங்களும் குடித்தார்கள். அதன்பின் கர்த்தர் மோசேயிடமும் ஆரோனிடமும், ‘‘இஸ்ரவேல் புத்திரரின் கண்களுக்கு முன்பாக என்னைப் பரிசுத்தம் பண்ணும்படி, நீங்கள் என்னை விசுவாசியாமற்போனபடியினால், இந்தச் சபையாருக்கு நான் கொடுத்த தேசத்துக்குள் நீங்கள் அவர்களைக் கொண்டு போவதில்லை என்றார்’’ (எண்ணாகமம் 20:12).

தேவனுடைய கடுமையான தண்டனையைப் பற்றி சிந்திக்கும் போது, இரண்டு விஷயங்களை நாம் கவனிக்க வேண்டும். முதலாவது, எது நியாயம், எது சரி என்று தேவனிடம் சொல்வதற்கு நாம் யார்? எது சரி, எது நியாயம் என்று வரையறுத்துக் கூறுபவர் தேவன் மட்டுமே. மோசே தனக்குக் கிடைத்த தண்டனையைப் பற்றி ஒரு போதும் குறைகூற வில்லை. உபாகமம் நமக்குச் சொல்வது என்னவென்றால் ஒரு நாள் மோசே தேவனிடம் இதைக் குறித்துப் பேசினான். ஆனால், தேவன் ‘‘இனி இதைப்பற்றி என்னிடம் பேசாதே’’ என்று சொன்னாராம். மோசே இதைப்பற்றித் திரும்ப தேவனிடம் பேசவில்லை.

இரண்டாவதாக, மக்களுக்கு தேவன் வைக்கும் மட்டத்தைக் காட்டிலும், தலைவர்களை உயர்ந்த மட்டத்தில் வைக்கிறார். நீ ஒரு சபையில் அங்கத்தினராகும்போது, சில குறிப்பிட்ட தரத்தில் வாழ வேண்டும். ஆனால் வேதவசனத்தின்படி, ஒரு சபை, அதன் தலைவரிடமிருந்து அதைவிட அதிகமாக எதிர்பார்க்கிறது. தலைமைப் பதவியை தேவன் மிகக் கண்டிப்பாகக் கண்காணிக்கிறார். மோசே தலைமைப் பதவியிலிருந்தான். மற்றவர்களுக்கு சிறிய பாவமாய் காணப்படக்கூடியது மோசேயைப் பொறுத்த மட்டில் அது சிறிய பாவமல்ல - ஏனெனில் அவன் மோசே! தேவனால் தலைமைப் பொறுப்பில் அமர்த்தப்பட்டவன்!

அவனுடைய பாவம் இது தான். முதலில் தேவன் ''கன்மலையிடம் பேசு,'' என்றார். அவன் கன்மலையிடம் பேசவில்லை; அவன் கன்மலையைக் கோலால் இருமுறை அடித்தான் அது கீழ்ப்படியாமையாகும்.

இன்னொரு பெரிய பாவத்தையும் செய்ததாக மோசேயின் மேல் தேவன் குற்றம் சாட்டினார். தேவன் எப்போதும் மோசேயோடிருந்து, அவரே மக்களை விடுதலையாக்குகிறார்; பெரிய அற்புதத்தை நிகழ்த்த தேவன் மனித உதவிக்கரமாக மோசேயைப் பயன்படுத்துவார் என தேவன் மோசேக்குக் கற்பித்திருந்தார். 'நான் ஒன்றுமில்லை, என்னில் ஒன்றுமில்லை' என்பதைக் கற்றுக்கொண்ட ஒருவர் மூலமாய் தேவன் என்ன செய்யக்கூடும் என்பதை மோசே ஏற்கனவே கற்றிருந்தான். ஆகவே அந்த மகத்தான யாத்திராகம அற்புதம் நடந்தது. நாற்பது வருடங்களாய் ஒரு வனாந்தரத்தின் பின் பகுதியிலே மோசே பின்வரும் சில ஆவிக்குரிய இரகசியங்களைக் கற்றுக் கொண்டிருந்தான்: ''நான் விடுவிக்கிறவன் அல்ல ஆனால் விடுவிக்கிறவர் தேவனே. அவர் என்னோடிருக்கிறார். நான் யாரையும் விடுவிக்க முடியாது. ஆனால் அவரால் முடியும். அவர் என்னோடிருக்கிறார்.'' என மோசேயால் சொல்ல முடிந்தது.

''உங்களுக்கு இந்தக் கன்மலையிலிருந்து நாங்கள் தண்ணீர் புறப்படப் பண்ணுவோமோ?'' என மோசே கேட்ட பொழுது, மக்கள் முன்பாக அவன் தேவனுக்கு மகிமையைச் செலுத்தவில்லை. தேவன் தான் இந்த அற்புதத்தைச் செய்கிறவர் என மக்களுக்கு த் தெளிவாகச் சொல்லவில்லை. அந்த அற்புதத்தின் மகிமையைத் தனக்கு எடுத்துக் கொண்டான். அது தான் மோசேயின் பாவத்தில் பயங்கரமானது.

இதை தேவனுடைய கண்ணோட்டத்தில் பார்ப்பதற்கு ஒரே ஒரு வழி இருக்கிறது. தேவன் வைத்திருக்கும் அளவுகள் அல்லது அளவுகோல்கள் பற்றி ஒருவருக்கே தெரியும் என நாம் விளங்கிக்கொள்வது தான் அந்த வழி. அந்த அளவுகளில் பலவற்றை நம்மோடு பகிரிந்து கொள்கிறார். ஆனால் ஒன்றை நினைவிலிறுத்திக் கொள். நீதியாய் நடக்க நமக்குக் கற்பிப்பவர் தேவனே, நாம் தேவனுக்குப் போதிப்பவர்கள் அல்ல. தேவனுடைய அளவுகளின் படி நாம் பார்த்தால், மோசேக்குக் கிடைத்த தண்டனை நியாயமானது, சரியானது. மோசே தேவனுடன் இசைந்து இதை ஒப்புக் கொண்டதாகவே தெரிகிறது. எரிகிற முட்செடியண்டை மோசே கற்றுக்கொண்ட ஆவிக்குரிய பாடங்களை எடுத்துக் காட்டுவதாக மோசேயின் கோல், மக்களின் யாத்திரைகால அற்புதங்களில் பயன்பட்டது. மோசே தன் கோலினால் கன்மலையை அடித்த பாவத்திலிருந்து நாம் வாழ்க்கைக்கெனச் சிறந்ததொரு சத்தியத்தைக் கற்றுக்கொள்ளலாம்.

களைத்துப் போன மோசே

மோசேயைக் குறித்த இன்னொரு முக்கியமான சம்பவம் எண்ணாகமம் பதினோராம் அதிகாரத்தில் காணப்படுகிறது. உடல் ரீதியாகவும், உணர்ச்சிகளிலும், மனதளவிலும் முற்றிலும் முடியாத ஒரு நிலைக்கு மக்கள் வருவதை ''எரிந்து சாம்பலாகிப்போன நிலை'' (Burn out) என்னும் அனுபவமாகப் பேசப்படுவதை அடிக்கடி கேட்கிறோம். மாபெரும் தேவ மனிதர்கள் கூட களைப்பாய் இருக்கிறார்கள். சில சமயங்களில் 'களைத்து ஓய்ந்துபோய்' விடுகிறார்கள். களைப்பாய் இருப்பதற்கும் களைத்து ஓய்ந்து போய், போதும் போதுமென்றாகி விடுகிறதற்கும் வேறுபாடு உள்ளது.

எடுத்துக்காட்டாக எண்ணாகமத்தில் மோசே இவ்விதமாகக் கர்த்தரிடம் பேசுகிறான்: ''இந்த ஜனங்களெல்லாரையும் நான்

ஒருவனாய்த் தாங்கக் கூடாது; எனக்கு இது மிஞ்சின பாரமாயிருக்கிறது. உம்முடைய கண்களிலே எனக்குக் கிருபை கிடைத்ததானால், இப்படி எனக்குச் செய்யாமல், என உபத்திரவத்தை நான் காணாதபடிக்கு இப்பொழுதே என்னைக் கொன்று போடும் என்று வேண்டிக் கொண்டான்''(எண்ணாகமம் 11:14,15).

நீ எப்பொழுதாவது இப்படி உணர்ந்திருக்கிறாயா? மாபெரும் தேவ மனிதர்களாகிய மோசே, எலியா, யோபு, தாவீது, அப்போஸ்தலனாகிய யோவான் மற்றும் பலர் தாங்கள் சாக விரும்புவதாக தேவனிடம் கூறுமளவிற்கு 'ஓய்ந்து ஒடிந்து'(Burn Out) போனார்கள். இப்படி ஓய்ந்து ஒடிந்து போவது அல்லது களைத்துப் போய் போதும் போதுமென்ற நிலைக்குள்ளாவது பக்தியுள்ள மக்களுக்கு ஏற்படுகிறது. உலகில் வாழ்ந்த மாபெரும் மனிதர்களாகிய மோசே, எலியா, யோனா, யோபு இன்னும் அநேகருக்கு இப்படி ஏற்பட்டிருக்கிறது. இந்தத் தேவ மனிதர்களுக்கு ரொம்பவுமே ஓய்ந்து ஒடிந்து போன நிலை ஏற்பட்ட பொழுது, அவர்கள் தேவனிடம் தவறான காரியத்தைக் கேட்டார்கள் - தங்கள் உயிர்களை எடுத்துக் கொள்ளுமாறு - தேவன் அவர்களை உயிரோடு விட்டு வைத்தார்; ஏனென்றால் தேவன் அவர்கள் இருதயத்தை அறிந்திருந்தார்.

இயற்கை சக்திக்கு அப்பாற்பட்ட வேலையைச் செய்யும் இந்த மிகப் பெரிய பாரத்தை தேவன் ஒருவரால் மட்டுமே சுமக்க முடியும் என மோசே ஏற்கனவே அறிந்திருந்தான். அவனது இந்த 'ஓய்ந்து ஒடிந்து போன'' (Burn Out) அனுபவத்தின் மூலமாக இன்னொரு முக்கிய பாடத்தையும் கற்றுக் கொண்டான். தேவனுடைய வேலை என்பது ஒரு குழுவாகச் செயல்படுதல் என்பதே அந்தப் பாடம். தேவன் அவன் மூலமாக வேலையைச் செய்கிறாரென்ற போதிலும் இஸ்ரவேலரை நியாயம் விசாரிக்கும் பாரத்தை அவன் ஒருவனாக சுமக்க முடியாது என்று விளங்கிக் கொண்டான். இந்த அறிவுக்கு அவனுடைய ''களைத்துப்போன ஓய்ந்து ஒடிந்து போன'' நிலை அவனைக் கொண்டு வந்த பொழுது, இந்த பாரத்தை சுமக்க அவனுக்கு உதவி செய்யும்படி தேவன் எழுபது பேரைக் கொடுத்தார். எழுபது பேரையும் தேவன் பரிசுத்த ஆவியினால் அபிஷேகித்தார். மோசேயின் தலைமையின் கீழ்

அவர்கள் ஆண்டார்கள். தலைமைப் பதவியை மோசேயிடமிருந்து தேவன் எடுக்காமல், வேலையைச் சிறப்பாகச் செய்யக்கூடிய பகுதிகளாகப் பிரித்து, அப்பகுதிகளைக் கவனிக்கும் படி அந்த எழுபது பேரைப் பணித்தார். 'தொழில் நிர்வாகத்தில்'பட்ட மேற்படிப்பு படித்தோர், ஒரு திறமையான சாதிக்கும் செயலாண்மையரின் ஐந்து படிகள் பற்றிக் கூறுகிறார்கள்: அவை பின்வருமாறு: பகுத்துப் பார்த்தல் அல்லது ஆராய்தல், இயங்கும் பாங்கில் ஒழுங்கு படுத்தல், அதிகாரம் அல்லது பொறுப்பை ஒப்படைத்தல், மேற்பார்வையிடுதல் பின்னர் உள்ளத்தில் வேதனைப்படுதல்!

'களைத்து ஓய்ந்து போனவனாய்' மோசே தேவனிடம் வந்த பொழுது, அவன் ஆத்துமா புதுப்பிக்கப்பட வேண்டுமென தேவன் கூறினார். அவன் ஆத்துமாவுக்கு இளைப்பாறுதளைத் தரும் நீதியின் பாதைகளை தேவன் மோசேக்குக் காட்டினார். தேவனால் மட்டுமே செய்யக்கூடிய வேலையை தேவனே செய்ய விட்டு விடுவது, தேவனுடைய மக்களால் செய்யப்படும் தேவனுடைய வேலை ஒரு குழுவின் செயல்பாடு ஆகும் - இவைகளே அந்த பாதைகள். தம்முடைய மக்கள் களைத்து ஓய்ந்துபோகும் போது இவ்விதமாகவே தேவன் தம் மக்களைப் புதுப்பிக்கிறார்.

பொறுமையற்ற உலகில் நாம் வாழ்கிறோம். அந்தந்த இமைப்பொழுதிலேயே ஒவ்வொன்றும் வேண்டும் என்கிறோம். பொதுவாகத் தேவன் எதையுமே உடனடியாகத் தருவதில்லை. மோசேயின் வாழ்க்கையில் அவன் புதுப்பிக்கப்படுதல் நடைமுறைக்கு ஒத்ததாயிருக்கிறது. சூழ்நிலையை உடனடியாக சரியாக்கிக் கொடுக்காமல், எவ்விதம் இயங்கும் பாங்கை ஒழுங்குபடுத்துவது என்றும் பாரத்தைப் பிறரும் சுமப்பதற்கு ஏற்ப அதிகாரம் அல்லது பொறுப்பை எவ்விதம் பகிர்ந்து கொடுப்பது என்றும் தேவன் அவனுக்குக் கற்பித்தார்.

மாபெரும் மனிதனாகிய மோசே போன்றோரும் கூட களைத்து ஓய்ந்து போகும் நிலைக்குள்ளாகக் கூடும் என்று நினைக்க ஆச்சரியமாய்த்தானிருக்கிறது. உன்னையும் என்னையும் போல மோசே நம்மைப் போன்றதொரு மனிதன் தான். அதனால் தான் அப்படி களைத்து

ஓய்ந்து போனான். மறுபடியும் பிறந்து இயேசுவின் சீடரானவுடனேயே மனித நிலையில் இருப்பதில்லை எனப் பலர் நினைக்கிறார்கள். மோசேயின் வாழ்க்கையைப் பார்த்தால் அது உண்மையன்று எனத் தெரிகிறது. மனித இனத்தின் பலவீனங்களின் எல்லைக்கே போகுமளவிற்கு நம்மைத் தள்ளுகிற இதே அழுத்தங்களோடும் மனபாரங்களோடும் வேதத்தில் நாம் காணும் மக்களும் போராடினார்கள். அவர்களின் மனிதத்தன்மையை தேவனுடைய ஆவியானவர் ஆட்கொண்டபோது மகத்தான காரியங்களைச் செய்தார்கள் என்பதால் அவர்கள் நமக்கு நல்ல முன்மாதிரிகளாகிறார்கள்.

வாழ்க்கையில் செயல்படுத்துதல்

மிகச் சாதாரணமான மக்கள், மூலம் மிக அசாதாரணமான காரியங்களைச் செய்வதில் தேவன் மகிழுகிறார், என்ற உண்மையை விளக்க, வேதாகம கதாபாத்திரங்களின் கதையில் மோசேயின் கதை யையும் சேர்த்துக்கொள்ளலாம். மோசே தேவனோடு கொண்டுள்ள அனுபவம் நமக்குப் பின்வரும் பாடத்தைக் கற்பிக்கிறது.

மகத்தான திறமை என்பது பயன்படக்கூடிய நிலையில் நம்மைக் காத்துக் கொள்வது என்ற பாடத்தை தேவன் பயன்படுத்தும் மக்கள் கற்றுக் கொள்ள வேண்டும். நமது மாபெரும் திறமை யாதெனில் தேவன் நம்மைப் பயன்படுத்தும் நிலையில் (கிடைக்கக்கூடிய நிலையில்) காத்துக் கொள்வதுதான். எண்ணாகமப் புத்தகத்தில் மோசேயின் மேன்மையையும், களைத்து ஓய்ந்த நிலையையும், மோசேயின் பாவத்தையும் காண்கிறோம். தேவன் மோசேயைப் பயன்படுத்த அவன் கிடைக்கக்கூடிய நிலையில் இருந்ததால் தேவன் மோசேயைப் பயன்படுத்தினார். உன்னையும் என்னையும் கூட தேவன் பயன்படுத்த விரும்புகிறார்: ஏனென்றால் நாம் அவருக்குக் கிடைக்கக்கூடிய நிலையி உள்ளோம். நீ உன்னை பயன்படுத்தும் படி, தேவனிடம் கொடுத்து விட்டாயா? அப்படி தேவன் உன்னைப் பயன்படுத்தத்தக்க விதத்தில் இருக்க உனக்கு விருப்பமா? அப்படியென்றால் தேவனுடைய விசேஷித்த தன்னார்வத்தொண்டு சங்கத்தில் சேர்ந்து, ''எது வென்றாலும், எங்கேயென்றாலும் எப்பொழுதென்றாலும் சரி''.

அதனால் எனக்கு என்ன நேர்ந்தாலும் சரி நான் கவலைப்படமாட்டேன். அது என்னை எங்கு கொண்டு சென்றாலும் கவலையில்லை. அதனால் எனக்கும் கவலையில்லை. நான் பயன்படுத்தப்பட இதோ ஆயத்த மாயிருக்கிறேன்'' என்று தேவனிடம் சொல்.

அத்தியாயம் 7
உபாகமம்
வளரும் பிள்ளைகள்

'உபாகமம்' என்றால் 'நியாயப் பிரமாணத்தைத் திரும்பக் கூறுதல் என்று பொருள். ஆவியானவரால் ஏவப்பட்டு எழுதப்பட்ட இந்த சட்ட புத்தகம், தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட மக்களின் இரண்டாம் தலைமுறையினருக்கும் பாடமாகக் கூடிய தேவனுடைய சட்டமாகவும் அமைந்துள்ளது.

இஸ்ரவேலர் யோர்தான் நதியைக் கடந்து, கானான் தேசத்திற்குள் பிரவேசிக்கு முன் மோசே பிரசங்கித்த மகத்தான பிரசங்கங்கள் பதிவான புத்தகம் உபாகமம். ஆரம்பப் பகுதி, உபாகமம் எதைப் பற்றியது என நாம் விளங்கிக் கொள்ள உதவுகிறது. ''யோர்தானுக்கு இக்கரையான வனாந்தரத்தின் சமமான வெளியிலே வந்த போது மோசே இஸ்ரவேலர் எல்லாரையும் நோக்கி... நாற்பதாம் வருஷம் பதினாறாம் மாதம் முதல் தேதியிலே,... தனக்குக் கர்த்தர் விதித்த யாவரையும் அவர்களுக்குச் சொன்னார்கள்''(உபாகமம் 1:2,4).

எண்ணாகமப் புத்தகத்தில் நாம் படித்தபடி இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்தில் நாற்பது வருடங்களாகப் பிரயாணம் பண்ணினார்கள். எகிப்திலுள்ள கோசேனிலிருந்து, சீனாய் மலை மட்டும் வந்து, பின்னர் காதேஸ் பர்னேயாவுக்கு வந்தார்கள். பின் கானாறுக்குள் செல்ல அவர்களுக்கு விசுவாசம் இல்லாததினால், முப்பத்தெட்டு ஆண்டுகள் வனாந்தரத்தில் சுற்றி அலைந்தார்கள். ஒரு தலைமுறையினர் முழுவதுமாக மடிந்து போனார்கள்!

கடைசியில், வனாந்தரத்தில் மரித்துப் போனவர்களுடைய பிள்ளைகளுக்குக் கானானுக்குள் பிரவேசிக்க விசுவாசம் இருந்தது. யோர்தான் நதியைக் கடந்து கானாறுக்குள் செல்ல அவர்கள் தீர்மானிக்கு முன், யோர்தான் நதிக்குக் கிழக்குப் பக்கத்தில் பாளயமிறங்கிருந்தார்கள். நியாயப் பிரமாணம் முதன் முதலில் கொடுக்கப்பட்ட போது வாழ்ந்தவர்களில் காலேப் மற்றும் யோசுவா தவிர, முழு தலைமுறையினரும் இறந்து விட்டார்கள. அவர்கள் கானானுக்குள் பிரவேசிக்குமுன், இவர்களுக்கும் இவர்கள் பெற்றோருக்கு மென,தேவன் சீனாய் மலையில் மோசேக்குக் கொடுத்த வசனங்களை இவர்கள் கேட்கவேண்டும் என விரும்பினார்கள். தேவனுடைய நியாயப் பிரமாணத்தை இவர்கள் தங்கள் பிள்ளைகளுக்குப் போதிப்பதாக, பயபக்தியுடன் வாக்குக் கொடுக்கும்படி ஆணையிடு வித்தான்.

சில சமயங்களில் விசுவாசிகள் பல ஆண்டுகளாய் சுற்றிச் சுற்றி வருகிறார்கள். கிறிஸ்துவுக்குள்ளாக வாழ்வதற்கென்று கிறிஸ்துவினால் இரட்சிக்கப்படும் மக்கள், தங்கள் ஆவிக்குரிய கானானுக்குள் செல்லத் தீர்மானிக்கின்றனர். அப்படி தீர்மானிக்கும் பொழுது தேவன் அவர்களுக்கென்று வைத்திருக்கும் எல்லாவற்றையும் அவரிடமிருந்து பெற்றுக் கொள்ள விரும்புகிறார்கள். கிறிஸ்துவில் தங்கள் புது வாழ்வை மிகவும் கருத்தோடு அவருக்கென அர்ப்பணிப்போடு தீர்மானிப்பவர் களுக்கென இப்புத்தகத்தில் பாடங்கள் நிரம்ப உள்ளன. நீ அந்த நிலையில் இருக்கிறாயென்றால், உபாகமப் புத்தகம் உனக்குரியது.

உபாகமப் புத்தகத்தின் இன்னொரு முக்கிய கருத்து என்னவெனில், தேவனுடைய வார்த்தை அவருடைய மக்களுக்கு நிஜமாகிப் போகிறது. மோசேயின் மகத்தான பிரசங்கங்கள் ஒன்றில், மரித்துப் போனவர்களுடைய பிள்ளைகள், தங்கள் பிள்ளைகளுக்கு தேவனுடைய வார்த்தையைக் கொடுப்பதில் கருத்தாயிருக்க வேண்டுமெனக் கட்டளையிட்டான்.

மோசேயின் மாபெரும் மகத்தான பிரசங்கம்

மோசே பிரசங்கித்தவைகளிலேயே மாபெரும் மகத்தாக பிரசங்கம் உபாகமம் 6:4-9ல் இருப்பதாக சிலர் நினைக்கிறார்கள். யூதர்களின்

விசுவாசத்தின் அடிப்படை அறிக்கை வேதத்தின் இப்பகுதி எனக் கருதப்பட்டது. அந்தப் பிரசங்கத்தின் மையக் கருத்து இங்கே தரப்பட்டுள்ளது.

''இஸ்ரவேலே, கேள்: நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர். நீ உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு பலத்தோடும் அன்பு கூருவாயாக. இன்று நான் உனக்குக் கட்டளையிடுகிற இந்த வார்த்தைகள் உன் இருதயத்தில் இருக்கக் கடவது. நீ அவைகளை உன் பிள்ளைகளுக்குக் கருத்தாகப் போதித்து, நீ உன் வீட்டில் உட்கார்ந்திருக்கிறபோதும், வழியில் நடக்கிறபோதும், படுத்துக் கொள்ளுகிறபோதும், எழுந்திருக்கிறபோதும் அவைகளை குறித்துப் பேசி, அவைகளை உன் கையின் மேல் அடையாளமாகக் கட்டிக் கொள்வாயாக; அவைகள் உன் கண்களுக்கு நடுவே ஞாபகக்குறியாய் இருக்கக்கடவது. அவைகளை உன் வீட்டு நிலைகளிலும், உன் வாசல்களிலும் எழுதுவாயாக''(உபாகமம் 6:4-9).

இந்தப் பிரசங்கம் இன்னும் நீண்டு கொண்டு போகிறது. ஆனால், அதன் மையக்கருத்து இது தான். உபாகமத்தின் மையக்கருத்தும் இது தான். யோர்தானைக் கடந்து கானானுக்குள் பிரவேசிப்பதற்கு முன் மோசே இந்த மக்களுக்குச் சொல்ல விரும்பிய செய்தி என்னவெனில், அவர்கள் முழுமையாகத் தேவனை நேசிக்கும் மக்களாக இருக்கும்படி தேவன் அவர்களை அழைத்தார் என்பதே. அவர் மீது அவர்கள் கொண்டுள்ள அன்பை வெளிப்படுத்த, அவர்கள் அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிய வேண்டும். அப்படி அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியவேண்டுமானால், அவருடைய வார்த்தையை அவர்கள் அறிந்திருக்க வேண்டும். அவர்களுடைய பிள்ளைகள் பின்னொரு நாளில் முழுமையாக தேவனை நேசிக்க வேண்டும் என தேவன் விரும்பினார். ஆகவே தான் தேவனை அவர்கள் முழுமையாக நேசிக்கவேண்டும், அவருடைய வார்த்தையை அறிந்து அதற்குக் கீழ்ப்படிய வேண்டும், அதன்பின் அந்த நற்காரியங்களைத் தங்கள் பிள்ளைகளுக்குச் சொல்ல வேண்டும் என மோசே அவர்களுக்குக் கட்டளையிட்டான்.

பிள்ளை வளர்ப்பின் நான்கு தூண்கள்

தங்களுடைய பிள்ளைகள் தேவனுடைய மக்களாக இருக்க அவர்களுக்கு எப்படிக் கற்பிப்பது என மோசே சொல்ல நொல்லுகிறான். மோசேயால் இங்கு விவரிக்கப்பட்ட போதனை நான்கு அடிப்படைத் தூண்களில் நிற்கிறது. முதல் தூண் வெளிப்பாடு: பிள்ளைகள் தேவனை நேசிக்க வேண்டுமானால், அவர்கள் கற்றலின் அடிப்படை தேவனுடைய வார்த்தையாக இருக்கவேண்டும். பின்னொரு இடத்தில் வேதம் இப்படிச் சொல்கிறது. ''பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழியிலே அவனை நடத்து; அவன் முதிர் வயதிலும் அதை விடாதிருப்பான் (நீதிமொழிகள் 22:6).

இந்தக் கல்வி முறையை ஆதாரமாகக் கொண்டுள்ள இரண்டாவது தூண், பொறுப்பை அடித்தளமாகக் கொண்டுள்ளது. பிள்ளைகளின் வளர்ப்புக்குப் பொறுப்பாயிருப்பது யார்? சில மக்கள் பிள்ளைகளின் படிப்புக்கு அரசாங்கம் தான் பொறுப்பு என எண்ணுகின்றனர். பிள்ளைகளுக்கு எதெல்லாம் தெரியவேண்டுமோ அதை அரசாங்கம் கற்றுக் கொடுக்கட்டும் என அரசாங்கப் பள்ளிகளையே அவர்கள் எதிர்பார்க்கின்றனர். தங்கள் பிள்ளைகளை ஒவ்வொரு வாரமும் ஞாயிறு பள்ளிக்குக் கூட்டிச் செல்கின்றனர். காரணம் தேவனையும் அவருடைய வார்ததையையும் நேசிக்க சபை போதிக்கும் என்று அவர்கள் நினைப்பது தான்.

மோசேயோ, பிள்ளைகளுக்குக் கல்வி தரும் பொறுப்பை முழுவதுமாக பெற்றோர் மேல் சுமத்தினார். தேவனுடைய வார்த்தை தகப்பன்மார் உள்ளங்களில் தங்கியிருக்க வேண்டுமென்றும், பின்னர் அவைகளைத் தங்கள் பிள்ளைகளுக்கு அவர்கள் போதிக்க வேண்டுமென்றும் கட்டளையிட்டார். மோசே ஆவியானவரால் ஏவப்பட்டவராய், தகப்பனே பிள்ளைகளுக்கு வேதவாக்கியங்களைப் போதிக்க வேண்டுமென தைரியமாய், வேண்டுமென்றே கட்டளையிட்டார். வேதவசனங்கள் திரும்பத் திரும்ப இதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது.

மோசேயால் கூறப்படும் கல்விமுறை பற்றிய மூன்றாவது முக்கியமான தூண் உறவு. '' நீ காலையில் அவர்களோடு எழுந்திருக்கும்போதும், வீட்டில் அவர்களோடு உட்கார்ந்திருக்கும் போதும், அவர்களோடு வழியிலே நடக்கும்போதும், இரவிலே அவர்களோடு, படுத்திருக்கும்போதும் தேவனுடைய வார்த்தைகளை அவர்களுக்குப் போதிக்க வேண்டும்,'' என மோசே பிரசங்கித்தார். இது நடைமுறைக்கு ஒவ்வாதது என அநேக தகப்பன்மார் நினைக்கிறார்கள். ஏனென்றால் பிள்ளைகள் விழிக்கும்போதும் அவர்கள் வீட்டில் இருப்பதில்லை, தூங்கப்போகும்போதும் அவர்கள் வீட்டில் இருப்பதில்லை.

வேதவாக்கியத்தின் வெளிச்சதில் உங்களின் தனிப்பட்ட கலாச்சாரத்தைக் காணவேண்டுமே தவிர, உங்களின் கலாச்சாரத்திற்கேற்ப வேதவாக்கியத்திற்கு விளக்கம் கொடுக்கக் கூடாது. உங்கள் வேலையைச் செய்வதற்கு நீங்கள் வைத்திருக்கிற ஒழுங்கின்படி வேதாகமம் தரும் வெளிச்சத்தின்படி உங்களுடைய வேலையை ஒழுங்குபடுத்த வேண்டும். உங்கள் பிள்ளைகளோடு நீங்கள் கொண்டிருக்கும் தொடர்பு, உங்கள் குமுடும்பக் கலாச்சாரம் சிறப்பாக அமையச் செய்யும் என்று மோசே கூறினார். மோசேயின் ஆலோசனைகளின்படி, உங்கள் பிள்ளைகளோடு நல்ல உறவு வைத்துக் கொள்ள வேண்டும். கல்வி முறையில் இந்த உறவு அல்லது தொடர்பு என்பது முக்கியமான பகுதி ஆகும்.

பிள்ளைகளை வளர்ப்பதில் முக்கியமான நாலாவது தூண் மெய்மை (நிஜத்தன்மை) ஆகும். மோசே சொன்னதைக் கவனியுங்கள் ''இந்த வார்த்தைகள் உன் இருதயத்தில் தங்கட்டும். நீ தேவனை உன் முழு இருதயத்தோடும் நேசி, அதன்பின் இந்த வார்த்தைகளை கவனமாய் உன் பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடு.'' இந்த மெய்மையைத் தவற விட்டு விடாதீர்கள். நாம் எப்படி வாழுகிறோம் என்பதிலிருந்து நம் பிள்ளைகள் அதிகம் கற்றுக் கொள்கிறார்களே தவிர நாம் சொல்வதிலிருந்து அல்ல. இந்த சத்தியங்களை நமது பிள்ளைகளுக்குச் சரியாகச் சொல்லிக் கொடுக்கும் முன்பாக அவைகளை நம்முடைய வாழ்க்கையில் நிஜமாக்க வேண்டும்.

‘‘உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்’’ (மத்தேயு.6:21) என இயேசுவானவர் சொல்லுகிறார். ‘‘உங்கள் பொக்கிஷங்களை எனக்குக் காட்டுங்கள், அப்பொழுது நீங்கள் எதை விலைமதிக்கிறீர்கள் என்று காட்டுவீர்கள். நீங்கள் விலைமதிக்கும் பொருட்களைக் காட்டுங்கள். அப்பொழுது உங்கள் இருதயம் எங்கே இருக்கிறது எனக் காட்டுவீர்கள்’’. இன்னும் தெளிவாகச் செல்ல வேண்டுமானால் உங்கள் பணத்தை எங்கு, எப்படி செலவு செய்கிறீர்கள், உங்கள் நேரத்தையும், சக்தியையும் எப்படிச் செலவழிக்கிறீர்கள் என்று எனக்குக் காட்டுங்கள். அப்பொழுது உங்கள் இருதயம் எங்கே இருக்கிறது எனக் காட்டுவீர்கள். நாம் எப்படி வாழ்கிறோம் என்பதிலிருந்து தான் நம் பிள்ளைகள் அதிகமாகக் கற்றுக் கொள்கிறார்களே தவிர, நம்முடைய குடும்ப மரியாதை மதிப்பை நாம் கற்றுக் கொடுப்பதைக் கவனிப்பதனால் அல்ல. உண்மையில் நாம் விலைமதிக்கும் பண்புகள் மூலம் நாம் பிள்ளைகளுக்குப் போதிக்கிறோமே தவிர, அவைகளைப் பற்றிய சொற்பொழிவுகள் மூலமாக அல்ல.

பிள்ளைகள் வளர்ப்பு பற்றி மோசே கொடுத்துள்ள மகத்தான திட்டம் சார்ந்த நான்கு அடிப்படைத் தூண்கள் எவையென்றால், தேவனுடைய வார்த்தையில் வெளிப்பாடு, பெற்றோராக நமது பொறுப்பு, நமது பிள்ளைகளுடன் சரியான உறவு, மற்றும் நாம் மதித்து நடப்பவற்றை நமது வாழ்க்கையில் கடைபிடிக்க வேண்டும் - மெய்மை.

அத்தியாயம் 8

கடந்தகால அற்புதங்களை நினைவுகூறல்

உபாகமப் புத்தகம் முழுவதும் தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிவதின் முக்கியத்துவத்தை மிகவும் அழுத்தமாக எடுத்துக் கூறுகிறது. தேவனுடைய பிரமாணங்களுக்கு இஸ்ரவேல் புத்திரர் கீழ்ப்படிந்தபோது, தேவன் அவர்களை ஆசீர்வதித்தார். அவர்கள் தேவனுடைய பிரமாணங்களுக்குக் கீழ்ப்படியாதபோது, அவர்கள் தேவனுடைய ஆசீர்வாதங்களை அனுபவிக்கவில்லை. மிகவும் திறமையாக மோசே அதைச் சுட்டிக் காட்டுகிறார். அதன்பின், அவர்கள் தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியவேண்டும் எனப் பிரசங்கிக்கிறார். இந்தப் புத்தகத்தின் முக்கியமான வார்த்தைகளுள் ஒன்று ‘‘கீழ்ப்படிய வேண்டும்’’ என்பதே.

இந்த எபிரெயர்களுடைய பெற்றோர்களின் வாழ்க்கையில் தேவன் எவ்விதம் கிரியை செய்தார் என்பதையும், அவர்களுக்கு தேவன் செய்த அற்புதங்களையும், அவர்கள் நினைவுகூரவேண்டும் என்பதே உபாகமத்தில் காணப்படும் மோசேயின் முதல் பிரசங்கத்தின் முக்கிய நோக்கமாயிருந்தது. வனாந்தரப் பயணத்தின்போது, இந்த எபிரெயர்களின் பெற்றோருக்கு தேவன் செய்த அற்புதங்கள், இந்தத் தலைமுறையின் வாழ்க்கையில் ஆழமானதும், நிலைத்திருக்கக் கூடியதுமான பாதிப்பை ஏற்படுத்தும்; மேலும் இவர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு அந்த அற்புதங்களைப் பற்றிச் சொல்வார்கள் என மோசே நம்பினார்.

தேவனோடுள்ள உடன்படிக்கையை அவர்கள் ஒருபோதும் முறிக்கக் கூடாது என்றும் மோசே ஆணித்தரமாகப் பிரசங்கித்தார். உடன்படிக்கை என்பது தேவனுக்கும் அவருடைய மக்களுக்கும் இடையேயான ஒரு ஒப்பந்தம். அந்த ஒப்பந்தத்தின் நிபந்தனைகள் கூறப்பட்டுள்ளன. மக்கள் ஒப்பந்த்தின் நிபந்தனைகளைக் கைக் கொள்ளாவிடில், ஒப்பந்தம் இல்லையென்றாகிவிடுகிறது. அவர்கள் கீழ்ப்படியாவிடில், அவர்களை ஆசீர்வதிக்க வேண்டிய பொறுப்பு தேவனுக்குக் கிடையாது.

ஐந்தாம் அதிகாரம் பத்துக் கற்பனைகளின் மறுபதிப்பாகும். யாத்திராகமம் இருபதாம் அதிகாரத்தில் கூறப்பட்டுள்ள பத்து கற்பனைகளையும், உபாகமத்திலுள்ள பத்து கற்பனைகளின் இந்த மறுபதிப்பையும் ஒப்பிட்டுப் பாருங்கள். நீங்கள் பத்துக் கற்பனைகளின்

இந்த இரு பதிவுகளையும் கவனமாக ஒப்பிட்டுப்பார்த்தால், தேவனுடைய சட்டங்களைப் பற்றிய ஆழ்ந்த அறிவைப் பெற்றுக்கொள்வீர்கள். கற்பனைகளை இப்படித் திரும்பச் சொல்லுவதன் மூலம், எபிரெயர்கள் தங்கள் இருதயங்களில் தேவன் கூறியவற்றை வைத்துக்கொண்டு, அவருடைய கற்பனைகளுக்குக் கீழ்ப்படியவேண்டும் என்று மோசே கூறுகிறார். இப்படி அவர்கள் செய்தால், அவர்களுக்கும், வருங்காலத்தில் அவர்கள் பிள்ளைகளுக்கும், பின் வரும் அனைத்துத் தலைமுறைகளுக்கும், எல்லாம் நலமாக நடக்கும்.

''பின்னும் மோசே, லேவியராகிய ஆசாரியர்களும் கூட இருக்கையில், இஸ்ரவேலர் எல்லாரையும் நோக்கி: இஸ்ரவேலே, கவனித்துக் கேள்... இந்நாளிலே தேவனாகிய கர்த்தருடைய சத்தத்துக்குக் கீழ்ப்படிந்து, இன்று நான் உனக்கு விதிக்கிற அவருடைய கற்பனைகளின்படியும் அவருடைய கட்டளைகளின்படியும் செய்வாயாக'' என்று சொன்னான். உபாகமம் 27 (9,10)

''உங்கள் தேவனாகிய கர்த்தரின் கட்டளைகள் அனைத்திற்கும் நீங்கள் கீழ்ப்படிய வேண்டும். அவருடைய அறிவுரைகளை முற்றிலுமாய், ஒன்றுவிடாமல் பின்பற்றி, அவர் உங்களுக்கென வகுத்து வைத்துள்ள முழு வழியிலும் கடைசி வரை செல்ல வேண்டும். அப்பொழுது தான் நீங்கள் நீண்ட நாள் வாழ்வீர்கள்; செழிப்பாக வாழ்வீர்கள்'' (உபாகமம் 27:9-11) என உபாகமப் புத்தகத்தில் மோசே மக்களுக்குப் போதித்துள்ளார்.

யூதர்களின் விசுவாச அறிக்கையின் ஆதாரமாக, ஆறாம் அதிகாரத்திலுள்ள, மோசேயின் மாபெரும் பிரசங்கம் அமைந்துள்ளது. இந்த விசுவாச அறிக்கை 'ஷெமா'(The Shema) என்றழைக்கப்படுகிறது. எபிரெய மொழியில் இதன் பொருள் 'கேள்' என்பதாகும். இந்தப் பிரசங்கம் 'இஸ்ரவேலே, கேள்' என்று துவங்குகிறது. தேவனுடைய மக்களின் மூன்றாம் தலைமுறையினராகிய தங்கள் தங்கள் பிள்ளைகளுக்குத் தேவனுடைய வார்த்தையைச் சொல்லும்படி

அழைப்புவிடுவதே இந்தப் பிரசங்கத்தின் நோக்கமாகும். மோசேயின் இந்த அழகான பிசங்கத்தில், பெற்றோர் பிள்ளைகளை வளர்ப்பதற்கான வரைபடத்திட்டத்தைக் காண்கிறோம்.

உபாகமம் எட்டாவது அதிகாரத்தில் பேச்சு வன்மைமிக்க மோசேயின் சிறந்ததொரு பிரசங்கம் உள்ளது. தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியாதவன் முக்கியத்துவத்தைக் காட்டும் பிரசங்கம் இது. தேவனுடைய வார்த்தையை நாம் எவ்வாறு கற்றுக்கொள்ளலாம் என்றும் இங்கு மோசே நமக்குக் காட்டுகிறார். இந்த மாபெரும் பிரசங்கம், தேவனுடைய வார்த்தையின் நோக்கங்களைக் குறித்து நமக்குக் கூறுகிறது. நாம் எப்படி வாழவேண்டுமென்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டுமன தேவன் விரும்புவதால் தேவன் நம்மைச் சிருஷ்டித்தார். நாம் எங்ஙனம் ஒரு நிறை வாழ்வு வாழ முடியும் என்பதை அவர் அறிவார். ''நான் அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும் அது பரிபூரணப்படவும் வந்தேன்'', என்று இயேசுவானவர் கூறினார் (யோவான் 10:10). இந்தச் செய்தியில் நாம் எப்படி அந்தப் பரிபூரண ஜீவனுக்குள் செல்வது என்று கூறுகிறார். (உபாகமம் 8:1-14)

தேவனுடைய வார்த்தை முழுவதும் நம் வாழ்க்கையைப் பற்றியதே என மோசே பிரசங்கிக்கிறார். நீங்கள் தேவனுடைய வார்த்தையைப் புரிந்து கொள்ளவேண்டுமெனில், அதை ஆழ்ந்து படிக்கக் குறைந்தது இரண்டு வழிகள் உள்ளன. ஒரு பல்கலைக் கழகம் அல்லது ஆயர் பயிற்சிக் கல்லூரி அல்லது வேதாகமக் கல்லூரிக்கு நீங்கள் செல்லலாம். நீங்களே தேவனுடைய வார்த்தையைக் கற்றுக் கொள்வதும் சாத்தியமானதே. ஆனால் மோசேயின் கூற்றுப்படி தேவனுடைய வார்த்தையைக் கற்றுக் கொள்ளும் வழி அது மட்டுமன்று. தேவனுடைய வார்த்தை முழுவதுமே வாழ்க்கையைப் பற்றியது என்றால், தேவனுடைய வார்த்தையைக் கற்றுக் கொள்ளும் இன்னொரு வழி, வாழ்க்கையை ஆழ்ந்து படிப்பதாகும். வாழ்க்கையைப் பற்றிய ஆழ்ந்த அறிவை தேவ வார்த்தை கொடுக்கிறது; தேவ வார்த்தையைப் பற்றிய ஆழ்ந்த அறிவை வாழ்க்கை தருகிறது.

நாம் பசியாயிருக்கவும் வாழ்க்கைப் புயலில் அடிபட்டு அவதியுறவும் தேவன் நம்மை அனுமதிக்கும்போது, நாம் அவரிடம் திரும்புகிறோம்; நம்மைப்படைக்கும்போது, நாம் வாழவேண்டிய வாழ்க்கையை அவர் திட்டம் பண்ணியபடி வாழத் தேவையான எல்லாவற்றிற்கும், நமது வாழ்க்கைக்கும் அவரே ஊற்றும் காரணருமாயிருக்கிறார் என விளங்கிக் கொள்கிறோம். நம் வனாந்தர அலைச்சல்கள் மற்றும் வாழ்க்கையின் கடினமான அநுபவங்களால் மட்டுமே ''மனிதன் அப்பத்தினால் மட்டுமே பிழைப்பதில்லை'', என்று தேவன் நம்மைப் புரிந்துகொள்ள வைக்கிறர் தேவன் மனிதனுக்குத் தந்தருளின ஒவ்வொரு வார்த்தைக்கும் கீழ்ப்படிவதினா லேயே மனிதன் வாழ்கிறான். இஸ்ரவேல் புத்திரர் தேவனுடைய வார்த்தையை ஆயர் பயிற்சிக் கல்லூரியிலோ, ஜெப ஆலயத்திலோ கற்கவில்லை. நிஜமான வாழ்க்கையில் ஏற்பட்ட அநுபவங்களின் வாயிலாக அவர்கள் தேவனுடைய வார்த்தையைக் கற்றுக் கொண்டார்கள்.

உபாகமம் எட்டாம் அதிகாரத்தினின்று நாம் கற்றுக் கொள்ள வேண்டிய இன்னொரு பாடம் என்னவெனில் செல்வச் செழிப்பினால் வரும் ஆபத்துகளினின்று (படுகுழிகளினின்று) நம்மைக் காத்துக்கொள்ள வேண்டும் எனன்பதாகும். செல்வச் செழிப்பினால் ஆசீர்வதிக்கப்படுவது ஒரு சவால் என்பதை எப்போதாவது உணர்ந்திருக்கிறீர்களா? இந்தத் தெரிந்து கொள்ளப்பட்ட மக்கள், தேவனுடைய கடினமான சிட்சையின் மூலமாகத் தேவனுடைய வார்த்தையைக் கற்றுக் கொண்டார்கள். அவர்கள் தங்களுடைய கீழ்ப்படியாமைக்காகத் தண்டிக்கப்பட்ட பொழுது, தேவனுடைய வார்த்தையே வாழ்க்கைக்கான தீர்வைக் கொடுக்கக் கூடியது என்று கற்றுக் கொண்டார்கள். வாழ்க்கையின் துன்ப வேளைகளில் கற்றுக் கொண்டவற்றை, தேவன் அவர்களை அபரிமிதமாக ஆசீர்வதிக்கும் போது பயன்படுத்த வேண்டும் என மோசே இப்பொழுது அவர்களை எச்சரிக்கிறார். ''உங்கள் சோதனைகளிலும், பரீட்சிக்கப்பட்ட வேளைகளிலும் கற்றுக்கொண்ட பாடங்களை ஒருபோதும் மறந்து

போகாதீர்கள். செல்வச் செழிப்பாயிருக்கப் போகும் இடத்தை நீங்கள் அடைந்ததும், அங்கு தான் நீங்கள் விழிப்புடன் இருக்க வேண்டும்''. இதே செய்தியைப் புதிய ஏற்பாட்டில் காண்கிறோம். '' தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கை யாயிருக்கக் கடவன்'' (1 கொரி 10:12).

தேவனுடைய வார்த்தை பற்றிய மாபெரும் பிரசங்கத்திற்கு அடுத்ததாகத் தேவனுடைய கிருபையைப் பற்றிய பெரும் பிரசங்கத்தை மோசே தொடருகிறார். அவர்களிடம் திட்டவட்டமாக அவர்கள் தேவனுடைய தயவை நல்லவர்கள் என்பதனால் சம்பாதித்துப் பெற்றுக் கொண்டு தேவனால் தெரிந்து கொள்ளப்படவில்லை என நான்கு முறை கூறுகிறார். ''உன் நீதியினிமித்தம் உன் நல்ல தேசத்தைச் சுதந்தரிக்கக் கொடார் என்பதை அறியக் கடவாய்; நீ வணங்காக்கழுத்துள்ள ஜனம்'' (உபாகமம் 9:4-6).

தேவனுடைய கிருபையைக் குறித்த அழகானதொரு சித்திரம் இது. நாம் பெற்றுக்கொள்ளத தகுதியான தண்டனையினின்று தேவனுடைய இரக்கம் நம்மைப் பாதுகாக்கிறது. தேவனுடைய கிருபையோ, தேவ தயவையும் ஆசீர்வாதங்களையும் பெற நமக்குத் தகுதியில்லாவிடினும், அவைகளை நம்மீது ஏராளமாய்ப் பொழிகிறது. நாம் நல்லவர்கள் என்பதனால் தேவன் நம்மை ஆசீர்வதிப்பதில்லை. அவர் நல்லவராயிருப்பதனால், அவர் நம்மை நேசிப்பதினால் தேவன் நம்மை ஆசீர்வதிக்கிறார். 'கிருபை'யின் பொருள் அதுவே.

உபாகமம் ஒன்பதாம் அதிகாரத்திலுள்ள இந்தப் பிரசங்கத்தில் தேவனுடைய கிருபையின் தெளிவான நேர்மையான விளக்கத்தை மோசே தருகிறார். வேதாகமம் முழுவதிலுமே கிருபைக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளதைக் காண்பீர்கள். ஏனென்றால் இரட்சிப்பின் மூல காரணமாகக் கிரியை செய்யும் தேவனுடைய செயல்திறனுள்ள குணாதிசயம் தேவகிருபையே. நாம் செய்யும் நல்ல செயலினால் நாம் சம்பாதித்துப் பெறுவதல்ல தேவனுடைய கிருபை.

அத்தியாயம் 9

மோசே நிகழ்த்திய சிறந்த அருட்செய்திகளில் இன்னும் சில

தேவனுடைய கிருபையைக் குறித்து மோசே நிகழ்த்திய சிறந்தொரு உரையை ஒன்பதாம் அதிகாரத்தில் கண்டோம். இப்பொழுது, பத்தாவது அதிகாரத்தில் தேவகிருபைக்கு நமது பிரதிகிரியை பற்றிப் படிக்க ஆயத்தமாயுள்ளோம்.

''இப்பொழுதும் இஸ்ரவேலே, நீ உன் தேவனாகிய கர்த்தருக்குப் பயந்து, அவர் வழிகளிலெல்லாம் நடந்து, அவரிடத்தில் அன்புகூர்ந்து, உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் தேவனாகிய கர்த்தரைச் சேவித்து, நான் இன்று உனக்குக் கற்பிக்கிற கர்த்தருடைய கற்பனைகளையும் அவருடைய கட்டளைகளையும் உனக்கு நன்மையுண்டாகும்படி கைக்கொள்ள வேண்டும் என்பதையே அல்லாமல், வேறே எதை உன் தேவனாகிய கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார். இதோ, வானங்களும், வானாதிவானங்களும், பூமியும் அதிலுள்ள யாவும், உன் தேவனாகிய கர்த்தருடையவைகள். ஆனாலும் கர்த்தர் உன் பிதாக்கள் மேல் அன்புகூரும் பொருட்டு அவர்களிடத்தில் பிரியம் வைத்து, அவர்களுக்குப் பின் அவர்களுடைய சந்ததியாகிய உங்களை, இந்நாளில் இருக்கிறபடியே, சகல ஜாதிகளுக்குள்ளும் தமக்கென்று தெரிந்துகொண்டார். ஆகையால் நீங்கள் இனி உங்கள் பிடரியைக் கடினப்படுத்தாமல், உங்கள் இருதயத்தின் நுனித்தோலை விருத்தசேதனம் பண்ணுங்கள்'' (உபாகமம் 10:12-16).

இங்கு மோசே அழுத்தமாகக் கூறுவது யாதெனில், நாம் தேவகிருபைக்கு எவ்வாறு பதிலளிக்கிறோம் என்பதுதான். நாம் தோற்றுப்போகும்போது கூட அல்லது தவறு செய்யும்போதும்கூட தேவன் நம்மை நேசிக்கிறார். நம்முடைய செயலினால் அவருடைய அன்பைப் பெற்றுக் கொள்ளவோ இழந்து விடவோ முடியாது. ஆகவே நாம் செய்யும் எந்தச் செயலினாலும் அவருடைய அன்பைச் சம்பாதிக்க முடியாது.

நீ செய்யும் எந்தக் காரியமும், தேவன் உன்னை நேசிப்பதிலிருந்து அவரைத் தடுக்கவோ நிறுத்தவோ முடியாது. தேவனுடைய நிபந்தனையற்ற அன்பு தேவனுடைய இரக்கத்தையும் கிருபையையும் வளர்ந்தோங்கவும் பெருகவும் செய்கிறது. 'கிருபை' என்ற பதத்தின் பொருள் அதுதான். கிருபை இருபுறமும் கருக்குள்ள பட்டயம். அது இரு புறமும் வெட்டுகிறது. தேவனுடைய அன்பும் அவருடைய ஆசீர்வாதமும், நாம் எவ்வளவு நன்றாகச் செயல்படுகிறோம் என்பதைப் பொறுத்ததன்று என்று கிருபை முதலில் கூறுகிறது. தேவனுடைய குணாதிசத்தையும், ஆழ்ந்த தத்துவத்தையும் வெளிப்படுத்துவன வாகிய கிருபை, இரக்கம் மற்றும் அன்பு என்ற பதங்களை நீங்கள் புரிந்துகொள்ளும்போது, 'தேவனுடைய அன்பைச் சம்பாதிக்க முயற்சி செய்ய வேண்டுமே' எனக் கவலைப்படத் தேவையில்லை. எப்படியிருந்தாலும் அவர் உங்களை நேசிக்கத்தான் போகிறார். ஏனெனில் அவருடைய இரக்கம், கிருபை மற்றும் அன்பின் சாரமே அது தான்!

உங்களுடைய முரண்பாடான அல்லது தவறான செயலால், தேவனுடைய இரக்கம், கிருபை அல்லது அன்பை நீங்கள் இழந்துவிட முடியாது. நீங்கள் நல்லவர்களாயிருப்பதினால் தேவன் உங்களை நேசிப்பதில்லை. நீங்கள் கெட்டவர்களாயிருப்பதினால், உங்களை நேசிப்பதை அவர் நிறுத்தமாட்டார். தேவன் உங்களை நேசிக்கிறார் - அவ்வளவு தான். நீங்கள் நல்லவர்களாயிருக்கும்பொழுது, செய்ய வேண்டிய காரியங்களை செய்யும் பொழுதும் இயேசுவானவர் உங்களை நேசிக்கிறார். நீங்கள் கெட்டவர்களாயிருப்பது அவரை மிகவும் துக்கப்படுத்தினாலும் கூட, நீங்கள் கெட்டவர்களாயிருக்கும் போதும் இயேசுவானவர் உங்களை நேசிக்கிறார். இயேசு உங்களை நேசிக்கிறார் - இதுவே முழு வேதாகமத்தின் செய்தி, உபாகமத்தின் செய்தியும் அதுவே.

தேவனுடைய இரக்கம், கிருபை மற்றும் இரக்கத்திற்கு நீங்கள் எவ்விதம் பிரதிகிரியை செய்கிறீர்கள்? அதையே இன்னொரு விதத்தில்

கேட்கவேண்டுமென்றால், ''நீங்கள் தேவனை எவ்வளவு நேசிக்கிறீர்கள்?'' முன்னொரு நூற்றாண்டில் வாழ்ந்த தேவபக்தியுள்ள ஒரு பெண், ''நான் பரிசுத்த ஆவியானவரை துக்கப்படுத்துவதைக் காட்டிலும், நரகத்திற்கே போவதையே விரும்புவேன்'', என்றாராம்.

என்னவாயினும், நம்மை நேசிக்கும் இந்த தேவனை நாம் பிரியப்படுத்த விரும்ப வேண்டும். நாம் அவரை நேசிப்பதினால், இந்த தேவனை நாம் ஒருக்காலும் வேதனைப்படுத்த விரும்பக் கூடாது. அவர் வெறுக்கும் காரியங்களை அகற்றி நம் வாழ்க்கையை சுத்திகரிக்கவும், அவரை சேவிக்கவும், அன்பும் நன்றியும் நிறைந்த ஆராதனையினால் அவருடைய அன்புக்கான நம் பதிலை வெளிப்படுத்தவும், நமது உள்ளன்பு நம்மை ஊக்கப்படுத்த வேண்டும்.

தேவனுடைய கிருபை மற்றும் இரட்சிப்பைப் பற்றி நமக்கு அதிகமாகக் கூறியபின் பவுல் அப்போஸ்தலன், ''தேவனுடைய கிருபையை நீங்கள் விருதாவாய்ப் பெறாதபடிக்கு நாங்கள் உங்களுக்கு புத்திசொல்லுகிறோம்'' (II கொரி 6:1)என்று கூறுகிறார். தேவனுடைய நாமத்தை வீணிலே வழங்குவது பாவம் என்பது போல், தேவனுடய கிருபையை விருதாவாய்ப் பெறுவதும் பாவமே. தேவன் நம்மை நேசித்து, தம்முடைய ஆசீர்வாதங்களை தமது கிருபையினால் அபரிமிதமாய்ப் பொழிந்தருளும்போது, அந்தக் கிருபையினால் நாம் எதுவுமே செய்யாவிடில், தேவனுடைய நாமத்தை வீணிலே வழங்கும் பாவத்தைத் தான் நாம் செய்கிறோம். பத்தாவது அதிகாரத்திலுள்ள மோசேயின் பிரசங்கம், நாம் தேவகிருபையை ஒருபோதும் விருதாவாய்ப்பெறக் கூடாதென எச்சரிக்கிறது.

இதைத் தொடர்ந்து, விசுவாசதுரோகம் என்பதைப் பற்றி 13ம் அதிகாரத்தில் பிரசங்கம் காணப்படுகிறது. விசுவாசதுரோகம் என்றால், ''ஒருவர் தேவனோடு இருக்கவேண்டும் என்று எடுத்த தீர்மானத்தினின்று வீழ்ச்சியடைதல் அல்லது அதற்காக நிற்றல்''. இந்த மக்களிடம், அவர்கள் மகன், மகள், மனைவி அல்லது ஆப்த நண்பன் அவர்களை தேவனிடமிருந்து விலகப்பண்ணினால் அவர்கள்

சாகடிக்கப்பட வேண்டும்; இரக்கம் காட்டக் கூடாது என மோசே கூறினார். விசுவாசதுரோகமுள்ள ஒரு பட்டணம் இருந்தால் அதை அழித்துவிடவேண்டும். இது மிகமிகக் கண்டிப்பானதாகத் தெரிகிறது தான். ஆனால் விசுவாசத்துரோகத்தின் முடிவுகளைக் காணும்போது பாபிலோனிய சிறையிருப்பு - அசீரிய சிறையிருப்பு - விசுவாசது ரோகத்தை எப்படிக் கையாளவேண்டும் என்பதில் தேவன் கண்டிப்பும் கடினமுமாக இருந்ததன் காரணம் நமக்குத் தெரியும்.

தசமபாகம் செலுத்துவதைப் பற்றியும் மோசே பிரசங்கித்தார் (14:22-28). 'தசம்' என்றால் 'பத்து எனப் பொருள். நம்மிடம் ஒவ்வொன்றிலும் பத்தில் ஒரு பாகத்தை தேவனுக்குக் கொடுக்கும்படிக் கட்டளையிடப்பட்டுள்ளோம். தசமபாகம் தருதல் என்பது வாழ்க்கையில் நாம் எப்போதும் தேவனுக்கு முதலிடம் கொடுக்க வேண்டும் என்பதைக் கற்பிக்கிறது. நம்முடைய வருமானத்தில் பத்து சதவீதம் தேவனுக்குத் தேவைப்படுவதில்லை. தேவன் 'தசமபாகம்' விதியை ஒரு கட்டளையாகவே வைத்தார். ஏனெனில், நம்முடைய அர்ப்பணிப்பை அளக்கும் ஒரு அளவாக அது இருக்கிறது. தெரிந்து கொள்ளப்பட்ட மக்களின் தேவைகளை தேவன் சந்தித்து நிறைவேற்றுகிறபொழுது, அவர்கள் சம்பாதிக்கிறதில் அல்லது பெற்றுக்கொள்ளுவதில் பத்தில் ஒரு பங்கு என்பதை நாம் விளங்கிக் கொள்ளும்போது, தசமபாகத்தின் மூலம் முக்கியமான சத்தியத்தை தேவன் நமக்குப் போதிக்கிறார். நம்முடைய வாழ்க்கையில் தேவன் முதலிடம் வகிக்கிறாரா இல்லையா என்பது தேவனுக்குத் தெரியும். ஆனால் நமக்குத் தான் சில சமயங்களில் அது தெரிவதில்லை. ஆகவே தான் நாம் பெற்றுக்கொள்ளும் அனைத்திலும் முதலாவதாகப் பத்தில் ஒரு பங்கை தேவனுக்குக் கொடுப்பதன் மூலம், நமது முன்னுரிமைகளிலெல்லாம் தேவனுக்கு முதலிடம் கொடுப்பதைக் காட்டவேண்டுமென தேவன் கட்டளையிட்டார்.

தேவன் முதல் பத்திலொரு பங்கைக் கேட்கிறார். எபிரெயர்கள் கானான் தேசத்திற்குள் சென்றபொழுது அவர்கள் வெற்றிகொண்ட முதல் பட்டணம் எரிகோ. அதில் கொள்ளையிடப்பட்டவை

அனைத்தும் தேவனுக்கென்று ஆயிற்று, ஏனென்றால் அவர்கள் வெற்றிகொண்ட முதல் பட்டணம் அது. வேதாகமத்திலுள்ள புத்தகங்கள், அதிகாரங்கள் மற்றும் வசனங்கள் அனைத்தின் சாரத்தையும் இரண்டு வார்த்தைகள் விளக்குகின்றன. 'தேவனே முதல்!'' என்பது தான் அந்த இரு வார்த்தைகள். தேவனை முதலாவதாக வைப்பது எளிதன்று. அதே சமயத்தில் தேவனை முதலாவதாக வைப்பது சிக்கலானதுமன்று. எளியனவற்றையும் நாம் சிக்கலாக்குகிறோம். தேவனோ சிக்கலானதை எளிதானதாக்குகிறார். நாம் தேவனை முதலாவதாக வைக்க விரும்புவதில்லை. ஆகவே, தான் தேவனுக்கு முதலிடம் கொடுப்பதென்றால் என்ன என்பதைச் சிக்கலாக்குகிறோம். நம்மிடமே நாம் யதார்த்தமாய், (உண்மையாய்) இருக்க தசமபாகம் கொடுக்கும் பழக்கம் உதவுகிறது. எந்த அளவுக்கு நம் வாழ்வில் தேவன் முதலிடம் வகிக்கிறார் என அளவிடவும் இப்பழக்கம் உதவுகிறது.

உபாகமம் பதினைந்தாம் அதிகாரத்தில், ஏழை எளியவர்களுக்கு தர்மசகாயம் செய்வதன் முக்கியத்துமுவம் பற்றி மோசே பிரசங்கம் செய்கிறார். மோசேயின் நியாயப்பிரமாணத்திலும், பழைய ஏற்பாட்டிலும் தர்மசகாயம் பற்றி மிகவும் அழுத்தமாகக் கூறப் பட்டுள்ளது. தேவனுடைய மக்களின் தசமபாகம் எவ்வாறு பிரித்தளிக்கப்பட வேண்டுமென்ற பல்வேறு வழிகளை மோசே கட்டளையாகக் கொடுத்திருக்கிறார். அது லேவியருக்குக் கொடுக்கப்பட வேண்டும் - சபை ஆயர்களுக்கு பணம் கொடுக்கப்படவேண்டும் என்பதற்கான வேத ஆதாரம் இது. துன்புறும் அயல்நாட்டினனுக்குக் கொடுக்கப்பட வேண்டும். அவர்கள் மத்தியிலுள்ள விதவைகளுக்கும் அநாதைகளுக்கும், இஸ்ரவேல் புத்திரர் தர்மசகாயம் செய்யும்படியாகக் கட்டளை பெற்றார்கள்.

தெரிந்து கொள்ளப்பட்ட மக்களிடம் தர்மசகாயம் பற்றிப் பேசியபோது, ''நீ வணங்காக் கழுத்துள்ள ஜனம்,'' என்று மோசே கூறினார். தேவையிலுள்ள மக்களோடு தங்களுக்குள்ளதைப் பகிர்ந்துகொள்ள வேண்டியிருப்பதைப் பற்றி அவர்கள் குறை

கூறக்கூடாதெனவும் எச்சரித்தார் (15:1-11). அவர்கள் மத்தியில் ஏழை மக்கள் எப்போதும் இருப்பார்களாகையால் இந்தக் கட்டளை தேவையாகிறது எனப் பிசங்கிக்கிறார்.

ஒரு பெரும் பிரசங்கியாக மோசே தீர்க்கத்தரிசனமாக தேவனுடைய வார்த்தையைப் பிரசங்கிக்கும்போதும் பின்வரும் காரியங்களை முன்னுரைத்தார். இஸ்ரவேல் மக்களுக்கு அரசன் இல்லை; இன்னும் ஐநூறு ஆண்டுகளுக்கு அரசன் இருக்கப்போவதும் இல்லை. நாம் I சாமுவேலைப் படிக்கும்போது, தங்கள் முதல் அரசனுக்கு முடி சூட்டிய விவரங்களைப் பார்ப்போம். ஆனால் மோசே, இஸ்ரவேல் புத்திரரின் விருப்பத்திற்கேற்ப ஒரு நாளில் தேவன் அவர்களுக்கென ஒரு அரசனைத் தருவார் எனக் கூறினார். பின்னர் அவர் தீர்க்கதரிசனமாக, நியாயப்பிரமாணப் புத்தகங்களில் ஒரு பிரமாணத்தை எழுதி வைத்தார். அதாவது, அவர்களுக்கு இராஜா என்று ஏற்படும்பொழுது அவன் லேவியர் வைத்துள்ள நியாயப்பிரமாண புத்தகத்திலிருந்து கற்பனைகளைப் பிரதி எடுத்து தினந்தோறும் அதை வாசிக்க வேண்டும். அக் கற்பனைகளை மதிக்கக் கற்றுக்கொண்டு அவைகளுக்குக் கீழ்ப்படியவேண்டும். இப்படி ஒழுங்காக தேவனுடைய வார்த்தையை வாசிப்பது, அவன் பிறரைக் காட்டிலும் நல்லவன் மேலானவன் என்ற எண்ணம் வராமல் தடுத்து விடும்; தேவனுடைய கற்பனைகளை விட்டு விலகிப் போகாமல் இருக்கவும், நீண்ட காலம் அரசன் நல்லாட்சி புரியவும் உதவும்.

தாவீதின் முதலாம் சங்கீதத்தில் பாக்கியவானான மனிதனைப் பற்றிக் கூறுகையில், அவன் இரவும் பகலும் தேவனுடைய வேதத்தில் தியானமாயிருப்பான் என்கிறார். மேலும் இந்த மனிதன் தேவனுடைய வார்த்தையில் பிரியமாயிருந்து, அவர் வார்த்தையிலுள்ள ஆலோசனையின்படி நடப்பதால், பெறும் ஆசீர்வாதங்க ளெல்லாவற்றையும் பட்டியலிடுகிறார். தாவீது இரண்டாவது அரசனாக ஆனதால் மோசேயின் இந்த தீர்க்கதரிசனமான கட்டளைக்குக் கீழ்ப்படிய வேண்டியதாயிற்று. முதலாம் சங்கீதத்தில் பாக்கியவானான மனிதனுக்கு சொல்லப்பட்ட ஆசீர்வாதங்கள் தாவீதின் ஆவிக்குரிய

சுயசரிதை போல் இருக்கிறது. இந்தக் கட்டளையைக் கொடுப்பதற்கு மோசே தரும் காரணங்களனைத்தும் தாவீதின் வாழ்க்கையில் நிறைவேறலாயிற்று.

உபாகமம் பதினெட்டாம் அதிகாரத்தில், பிசாசின் உதவி தேடும் பழக்கங்களுக் கெதிராக மோசே கடுமையான பிரசங்கம் ஒன்றை நிகழ்த்துகிறார். குறி சொல்லுகிறவன் அஞ்சனம் பார்க்கிறவன் போன்றவர்களை தேவன் விரும்புவதில்லை என மிகத் தெளிவாகவும், கடுமையான வார்த்தைகளாலும் மோசே தெரிவிக்கிறார்.

‘‘குறி சொல்லுகிறவனும், நாள் பார்க்கிறவனும், அஞ்சனம் பார்க்கிறவனும், சூனியக்காரனும், மந்திரவாதியும், சன்னதைக்காரனும், மாயவித்தைக்காரனும் செத்தவர்களிடத்தில் குறிகேட்கிறவனும் உங்களுக்குள்ளே இருக்க வேண்டாம். இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவன் எவனும் கர்த்தருக்கு அருவருப்பானவன். இப்படிப்பட்ட அருவருப்புகளின் நிமித்தம் உன் தேவனாகிய கர்த்தர் அவர்களை உன் முன்னின்று துரத்தி விடுகிறார். நீ துரத்திவிடப் போகிற இந்த ஜாதிகள் நாள் பார்க்கிறவர்களுக்கும், குறி சொல்லுகிறவர்களுக்கும் செவி கொடுக்கிறார்கள்; நீ அப்படிச் செய்கிறதற்கு உன் தேவனாகிய கர்த்தர் உத்தரவுகொடார் (18:9-14).

மனிதனது கற்பனைகளுக் கெட்டாத அநேகக் காரியங்கள் வானத்துக்கும் பூமிக்குமிடையே உள்ளன என்று ஒருவர் சொல்லியிருக்கிறார். இந்த ஆவிகள் இருப்பதை வேத வாக்கியங்கள் மறுக்கவில்லை என்பதைக் கவனி. அவைகளை விட்டு விலகியிருக்க வேண்டுமென வேதம் நம்மை எச்சரிக்கிறது. ஆவிகளின் உலகிலுள்ள, பரிசுத்தமற்ற, தேவனுடையவையல்லாத ஆவிகள் உள்ளன. குறி சொல்லுதல், மந்திரவாதம் போன்ற காரியங்களில் நீ ஈடுபடும் போது, தேவனுடையதல்லாத ஒரு ஆவியோடு செயல்படுகிறாய். ஆகவே, தேவனுடையவையல்லாத இந்த பாதாளத்தின் ஆவிகளோடு அவருடைய மக்கள் ஈடுபாடு கொள்வதை, தேவன், மோசேயின் மூலம் வன்மையாகத் தடுக்கிறார். இதற்கான தேவனுடைய அடிப்படைக் காரணம் என்னவெனில் பரலோகத்திலுள்ள ஆவிகளின் உலகுக்குள்

நம்மை வழிநடத்திச் செல்ல தேவனுடைய பரிசுத்த ஆவியானவர் நமக்கு இருக்கிறார். ஆகவே, மோசமான ஆவி உலகோடு தொடர்புடையவர்களை, நம்மை வழிநடத்த, வழிகாட்ட மற்றும் எவ்விதத்திலாயினும் பலவான்களாக்கக் கேட்டபது பாவமாகும்.

மேசியா என்னும் தீர்க்கத்தரிசியைப் பற்றியும் ஒரு பிரசங்கம் உபாகமப் புத்தகத்திலுள்ளது. ‘‘ஒரு நாள் ஒரு தீர்க்கத்தரிசி உலகிற்கு வரப்போகிறார். சீனாய் மலையில் தேவன் நியாயப்பிரமாணத்தை அருளினபோது, நீங்கள் அவரிடம் என் மூலமாய்,’’ தேவன் எங்களிடம் பேச வேண்டாம். தேவனுடைய சத்தத்தைக் கேட்க எங்களுக்கு பெலனில்லை என்றீர்கள்’’ (18:15-17) என மோசே கூறினார். இஸ்ரவேல் மக்களின் ஜெபத்தை தேவன் கேட்டதாக மோசே கூறியதோடு, தேவன் உலகில் அவர் அனுப்பப் போகும் தீர்க்கத்தரிசி மூலமாய்ப் பேசுவார் என்றும் சொன்னார்.

தேவன் அற்புதமான விதமாய் வார்த்தையை எழுதிக் கொடுத்தார். எழுத்து மூலமாய் மட்டுமல்ல, அவர்களோடு பேசவும் விரும்பினார். அவர்கள் மேல் அவர் கொண்டுள்ள இரக்கம் மற்றும் அன்பின் நிமித்தமாக ஒரு விசேஷித்த தீர்க்கதரிசியின் மூலம் தேவன் அவர்களோடு பேசுவதாகச் சொன்னார். அந்த தீர்க்கதரிசியே, மேசியா ஆவார். அவர் அவர்களுடைய தீர்க்கதரிசியும் ஆசாரியனும் ராஜனுமாவார்.

பத்தொன்பதாம் அதிகாரத்தில் மரண தணட்னையைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது. குற்றம் செய்தவனுக்கும், அவனுக்குக் கொடுக்கப்படும் மரண தண்டனைக்கும் முக்கியத்துவம் கொடுத்து எழுதப்படவில்லை. குற்றவாளியினால் பாதிக்கப்பட்டவனுக்காகவே மோசே ஆவியினால் ஏவப்பட்டு மரண தண்டனையைப் பற்றி எழுதுகிறார். மரண தண்டனை, பொல்லாப்பை இஸ்ரவேலிலிருந்து அகற்றி சுத்திகரிக்கும் என வேதம் சொல்கிறது.

இருபதாம் அதிகாரத்தில் விசுவாசத்தைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது. இஸ்ரவேலரை மேற்கொண்ட மீதியானியருக்கு விரோதமாகக்

கிதியோன் சேனையை நடத்திச் செல்லும்போது இப்பகுதியை உபயோகித்தான் (நியாயாதிபதிகள் 7:1-7).

''உன்னிலும் பெரிய சேனைகளோடு நீ போரிடும்போது, தேவன் உன்னோடிருக்கிறார் என்பது தான் உன் ஒரே நம்பிக்கை என்பதை நினைவில் கொள். உன்னை விடப் பெரிய சேனைகளைத் தாக்கும்போது உனக்கு வேண்டியது விசுவாசம் தான்'' (உபாகமம் 20:6-8).

உபாகமம் புத்தகத்தில் 'கிருபை' என்னும் கருத்து அடிக்கடி காட்டப்படுவதைப் பார்க்கிறோம். 'மீட்பு' என்னும் கருத்தையும் அங்கே காண்கிறோம். உபாகமம் 25ல் காணப்படும் மீட்கும் சுதந்தரவாளியைப் பற்றிய பிரமாணம் நம்முடைய இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவை அழகாகச் சித்தரிக்கிறது. முதல்முறையாக 'மீட்பவன்' 'மீட்பு' என்ற வார்த்தைகளைப் பார்க்கும்போது, அவை நீதி மற்றும் நியாயம் சார்ந்த பதங்களாகப் பயன்படுகின்றன. இந்த 'மீட்பு' என்ற பதத்தை விளங்கிக் கொண்டால், பழைய ஏற்பாடும் புதிய ஏற்பாடும் இயேசு கிறிஸ்துவிலுள்ள சிலுவை மரணத்தைப் பற்றிக் கூறும் கருத்திலுள்ள 'மீட்பைப்' புரிந்து கொள்ளலாம். மீட்கும் சுதந்ரவாளியைப் பற்றி 25ம் அதிகாரத்தில் கூறும் பகுதி 'ரூத்' புத்தகத்தில் கையாளப்படும் மீட்கும் சுதந்தாவாளியைப் பற்றிய கொள்கையை விளக்குகிறது.

உபாகமம், லேவியராகமம் மற்றும் யோசுவா ஆகிய புத்தகங்களின் முடிவில், தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்ற கட்டளையை நீ காணலாம். இதுவே உபாகமத்தின் பிரதான செய்தி. உலகில் செய்யப்பட்ட பெரிய பெரிய பிரசங்கங்களை உபாகமத்தின் கடைசி அதிகாரங்களில் காணலாம். எபிரெய மக்கள் தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்தால், அவர்களுக்கு வரக் கூடிய ஆசீர்வாதத்தைப் பற்றியும், கீழ்ப்படியாவிடில் அதற்கு மாறாகக் கிடைப்பது பற்றியும் மோசே இந்த அதிகாரங்களில் கூறுகிறார். இந்த சிறந்த பிரசங்கத்தின் முடிவாக, மோசே, ''இதோ, ஜீவனையும், நன்மையையும், மரணத்தையும், தீமையையும் இன்று உனக்கு முன்னே வைத்தேன். நீயும் உன் சந்ததியும் பிழைக்கும்படிக்கு, நீ ஜீவனைத் தெரிந்து கொள்வாயாக'' (உபாகமம் 30:19)எனக் கூறுகிறார்.

அத்தியாயம் 10

யோசுவாவின் புத்தகம்

உங்கள் உடைமைகளைக் காத்துக் கொள்ளுங்கள்

ஒருவகையில் பார்க்கப் போனால் யோசுவாவின் புத்தகம் எண்ணாகமப் புத்தகத்திற்கு எதிர்மாறானது. எபிரெய மக்கள் தங்கள் அவிசுவாசத்தின் விளைவாக மடிந்ததைப் பற்றிச் சொல்லும் அவிசுவாசம் பற்றிய விவரம் தருவது எண்ணாகமம். யோசுவாவின் புத்தகம் முழுவதும் விசுவாசத்தைப் பற்றியது; ஜெபிக்கிற விசுவாசம்; தேவன் தமது மக்களுக்கென சித்தம் கொண்டிருக்கும் அனைத்தையும் பெற்றுக்கொண்டு பற்றிக் கொள்ளும் விசுவாசம்.

யாத்திராகமம் புத்தகத்தைப் படிக்கும்போது யாத்திராகமம் என்றால் கொடூரமான எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து 'வெளியே வருவது' என்று பொருள் எனப் பார்த்தோம். முதல் சரித்திர புத்தகத்தைக் கானான் எனும் வாக்குத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குள் செல்லும் வழி என்னவெனில் தேசத்திற்குள் போங்கள், ''உங்கள் உடைமைகளைப் பற்றிக் கொள்ளுங்கள்'', என்பது.

யோசுவா என்ற பெயர் இயேசு என்ற பெயரைப் போன்றதே. கிரேக்க மொழியில் இயேசு என்றும், யோசுவா என்று எபிரெய மொழியிலும் சொல்லப்படுகிறது. இப் பெயரின் பொருள் என்னவெனில் 'யெகோவா இரட்சிக்கிறார்' அல்லது 'இரட்சகர்'. அவனுடைய பெயரிலேயே இந்தப் பெரிய தலைவன் கிறிஸ்துவைப் போன்றிருக்கிறான். ஏனென்றால் அவன் தனது மக்களை ஆவிக்குரிய ஆசீர்வாதங்களாகிய வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குள் அழைத்துச் செல்கிறான்.

நமது ஆவிக்குரிய எகிப்திலிருந்து இரட்சிப்படைவதற்கு முக்கியமான வார்த்தை 'விசுவாசி' என்பது. தேவனுடைய ஆவிக்குரிய ஆசீர்வாதம் எனும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குள் செல்வதற்கு முக்கிய வார்த்தை'கீழ்ப்படி' என்பது. கீழ்ப்படிதலைப் பற்றிப் பேசுகிறோமென்றால் 'விசுவாசத்தைப் பற்றிப் பேசுகிறோம்.

விசுவாசம் என்னும் வார்த்தையின் பொருள் 'அர்ப்பணிப்பு' 'கீழ்ப்படியும் அர்ப்பணிப்பு'.

யாத்திராகமக் காலத்தின்போது யோசுவாவின் வயது நாற்பது. வனாந்தர அலைச்சல்களுக்குப்பின்பு யோசுவாவும் காலேபும் மட்டும் தான் உயிரோடிருந்தார்கள்; ஏனென்றால் அவர்கள் கானானுக்கு வேவுகாரர்களாக அனுப்பப்பட்டபோது நல்ல செய்தியைக் கொண்டுவந்தார்கள் என்பதை நினையுங்கள். ஒரு மகத்தான பலனைப் பெற அவர்கள் விசுவாசம் தகுதியுள்ளதென தேவன் கண்டார். மக்களைக் கானானுக்குள் நடத்திச் செல்லவும், அவர்களை எதிர்த்த ஏழு பெரிய தேசங்களை ஜெயிக்கவும் யோசுவா கட்டளை பெற்றபோது அவனுக்கு வயது எண்பது. அவன் தேவனிடமிருந்து நேரடியாகக் கட்டளை பெறவில்லை. ஆனால் தேவனையும் யோசுவாவையும் அறிந்த தேவமனிதனாகிய மோசேயிடமிருந்து கட்டளை பெற்றான்.

மோசேக்கும் யோசுவாவுக்குமிடையே இருந்த உறவு, பவுலுக்கும் தீமோத்தேயுவுக்குமிடையே இருந்த உறவைப் போன்றது. தேவனுடைய ஊழியத்தில் தலைவர்களை ஆயத்தம் செய்வதற்கு இது மிக முக்கியமானது. (IIதீமோத்தேயு 2:2) யோசுவா மரிக்கும்போது அவனது வயது நூற்றிப் பத்து. அவன் பலசாலியான, உண்மையும் மிகப் பெரிய விசுவாசமுமுள்ள மனிதன்.

ஒரு தீர்க்கதரிசி, ஆசாரியன், தலைவன் மூலம் தேவன் கிரியை செய்கிறதை நோக்கும்போது, யோசுவாவின் தலைமை காலத்தில் முக்கியமானதொரு மாற்றம் வருவதைக் காண்கிறோம். எரிகிற முட்செடியின் முன் தேவனிடமிருந்து நேரடியாக ஆணை பெற்றதுபோல், சீனாய் மலையில் மோசே தேவனிடமிருந்து நேரடியாக தேவ வார்த்தையைப் பெற்றார். ஆனால் எழுதப்பட்ட வார்த்தையை - ஏற்கனவே தேவனால் மோசேக்குக் கொடுக்கப்பட்ட வார்த்தையை தியானிக்கும்படி யோசுவாவுக்கு கூறப்பட்டிருப்பதை நாம் இப்பொழுது வாசிக்கிறோம். அவனுக்குப்பின் வரப்போகும் ராஜாக்களைப் போல, யோசுவா தேவனுடைய வார்த்தையைப் பற்றி இரவும் பகலும் சிந்தித்து,

தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டும் என யேசுவாவுக்கு ஆணை கொடுக்கப்பட்டது.

எபிரெயர்கள் யோர்தான் நதியைக் கடந்து கானானுக்குள் பிரவேசிக்கப் போகும் நேரத்தில் அவர்களுக்கு இப்படிச் சொல்லப்பட்டது. ''நான் மோசேக்குச் சொன்னபடி உங்கள் காலடி மிதிக்கும் எவ்விடத்தையும் உங்களுக்குக் கொடுத்தேன்''(யோசுவா 1:3). முழு தேசமும் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்தது. அது அவர்களுக்கு சொந்தமாயிற்று. ஆனால் அவர்கள் உடைமை ஆகவில்லை. உடைமையாவதன் சட்டம் என்னவெனில் கானானில் உங்கள் கால் மிதிக்கும் ஒவ்வொரு சதுரமீட்டர் நிலமும் நான் உங்களுக்குக் கொடுத்திருக்கிறேன் - அதற்கு அதிகமாகவுமல்ல, குறைவாகவுமல்ல.

நமது ஆவிக்குரிய ஆசீர்வாதங்களின் காரியத்திலும் இதே வழி தான். இன்று அநேக ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் நமக்குக் கிடைக்கும் நிலையில் உள்ளன: ஜெபம், வேதவசனம், ஐக்கியம், ஆராதனை - ஒவ்வொரு விசுவாசிக்கும் இவையெல்லாவற்றையும் தேவன் தருகிறார். சில விசுவாசிகள் இவைகளைத் தங்கள் உடைமைகளாக்கிக் கொள்கிறார்கள்; சிலர் அப்படிச் செய்வதில்லை. இதன் ரகசியம் செயல்பூர்வமானது தான். உன் பாதங்களை அவற்றில் பதிக்க வேண்டும். ஜெபிப்பதினால் ஜெபத்தை உன் உடைமையாக்குகிறாய் ஆராதிப்பதால் அதை உன் உடைமையாக்குகிறாய் வேதத்தை நீ வாசித்து, விளங்கிக் கொண்டு, உன் வாழ்க்கையில் அதை அப்பியாசிக்கும் போது வேதத்தை உன் உடைமையாக்கிக் கொள்கிறாய். ஒவ்வொரு அடியாக உன் ஆவிக்குரிய உடைமைகளை உன் உடைமையாக்கிக் கொள்கிறாய்.

அநேக பண்டிதர்கள், புதிய ஏற்பாட்டுக்கு 'எபேசியர்' நிருபம் எப்படியோ, அப்படி பழைய ஏற்பாட்டுக்கு யோசுவாவின் புத்தகம் இருக்கிறது என்கிறார்கள். கிறிஸ்துவில் நமக்கு இருக்கும் எல்லா ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைப் பற்றிக் கூறுவதோடு நாம் கிறிஸ்துவுக்குள் பிரவேசித்து, அனைத்து ஆவிக்குரிய ஆசீர்வாதங்

களை உடமையாக்கிக் கொள்வதைப் பற்றியும் எபேசியர் நிருபம் கூறுகிறது.

யோசுவாவின் புத்தகத்தில் முக்கிய வசனம் யோசுவா 1:3. எபேசியாவில் முக்கிய வசனம் எபேசியர் 1:3. அது யோசுவா புத்தகத்தில் முக்கிய வசனத்தைப் போலவே உள்ளது. '' நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம்; அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களில் ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத் தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார்'' (எபேசியர் 1:3). அவர் நமக்குத் தந்திருக்கிற எல்லா ஆவிக்குரிய ஆசீர்வாதங்களுக்கான உரிமைப் பத்திரத்தை தேவன் நமக்குக் கொடுத்திருக்கிறார். ஆனால் நாம் அவைகள் இருக்கும் இடத்துக்கு வந்து, அவைகளை உடைமைகளாக்கிக் கொள்ள வேண்டும்.

யோசுவாவின் புத்தகத்தில் அந்த ஆசீர்வாதங்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தில் உள்ளன. எபேசியரின் புத்தகத்தில் அவை கிறிஸ்துவினுள் இருக்கின்றன. நாம் இந்த ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை நமக்கு உரியதாக்கிக் கொள்ள வேண்டுமானால் கிறிஸ்துவுக்குள் ஜீவிப்பதால் அவைகளைக் கண்டு கொள்ள வேண்டும். உன்னத இடத்திற்கு நாம் வரவேண்டும்; ஏனெனில் அங்கு தான் அவைகளைல்லாம் இருக்கின்றன. வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசமாகிய தேவனுடைய ஆசீர்வாதத்துக்குள் விசுவாசத்தினால் நாம் பிரவேசிக்க முடியும் என யோசுவாவின் புத்தகம் நமக்குப் போதிக்கிறது. ஆவியானவரால் ஏவப்பட்டு எபேசியருக்கு பவுல் எழுதிய நிருபத்திலும் அதையே தான் நமக்குக் கூறுகிறார்.

பிற புதிய ஏற்பாட்டு ஆக்கியோர்களும் ஆவிக்குரிய ''வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தைப் பற்றி எழுதியிருக் கிறார்கள். ஆவிக்குரிய உடைமைகளை நாம் எங்கு எப்படிப் பெறுவது என பேதுரு கூறுவதைக் கேளுங்கள். ''தம்முடைய மகிமையினாலும் காருணியத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும், அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளினது'' (IIபேதுரு 1:3).

பேதுரு கல்வி கற்ற ஒரு மனிதரல்ல. அவரால் வாசிக்கவோ எழுதவோ முடியாது (II பேதுரு 5:12; அப்போஸ்தலர் 4:13). அவர் முக்கியப்படுத்தியதெல்லாம் தேவனை அறிய வேண்டும் என்பதே, பேதுரு ஒரு கல்விமானல்ல; ஆனால் அவர் ஒரு ஆவிக்குரிய பெரியவர். அவர் தேவனை அறிந்திருக்கிறார். எல்லா ஆவிக்குரிய ஆசீர்வாதங்களுக்கும் தேவனே ஊற்றும் காரணமுமாயிருக்கிறவர் என்று பேதுரு கூறுகிறார். தேவபக்தியுள்ள வாழ்க்கை வாழ்வதற்கான எல்லாவற்றையும் தேவன் ஏற்கனவே நமக்குத் தந்திருக்கிறார். அவரோடு தொடர்பு கொண்டு நாம் உரிமை பாராட்டி ஆவிக்குரிய உடைமைகளை அவரிடமிருந்து நாம் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பது பேதுருவின் கூற்று.

நமக்குத் தேவையான ஒவ்வொரு ஆவிக்குரிய ஆசீர்வாதமும் நம்முடையது என்று சொல்லும் உரிமைப் பத்திரத்தை உடையவர்களாய் நாம் இருக்க வேண்டும் என்ற கருத்துக்குப் புதிய ஏற்பாட்டின் இரு பெரும் தலைவர்களும் யோசுவாவும் இசைந்து போகிறார்கள். ஆனால் அந்த ஆவிக்குரிய ஆசீர்வாத்ஙகளை, கிறிஸதுவோடும் தேவனோடும் நாம் கொண்டுள்ள உறவின் மூலம் ஒவ்வொன்றாய் அடைய வேண்டும்.

யோசுவா, எல்லாம் நம்முடையது என்கிறார், பேதுரு எல்லாம் நம்முடையது என்கிறார், பவுலும் எல்லாம் நம்முடையது என்கிறார். அப்படியென்றால் நாம் ஏன் எல்லாவற்றையும் நமதாக்கிக் கொள்வதில்லை? தேவன் நமக்கு அருளியிருக்கும் எல்லாவற்றிற்கும், அவற்றை நமது உடைமையாக்கிக் கொள்வதற்கான நம் சக்தி அல்லது திறமைக்குமிடையே உள்ள இடைவெளியில் பாலமாக அமைவது விசுவாசம் என்பதை நாம் புரிந்து கொள்ளவில்லை என இந்த மூன்று மாபெரும் தேவமனிதர்களும் ஒத்த கருத்துடையவர்களாயிருக் கிறார்கள். யோசுவாவின் புத்தகத்தை தேவன் நமக்குத் தந்திருக்கும் காரணங்களில் இதுவும் ஒன்றாகும்.

யோசுவாவின் புத்தகத்தில் விசுவாசத்திற்குப் பதினாறு எடுத்துக் காட்டுகள் உள்ளன. விசுவாசத்தைப் பற்றி நாம் அறிந்து கொள்ள

வேண்டும் என தேவன் விரும்பியபொழுது ஆதியாகமத்தில் ஆபிரகாமைப் பற்றிய பன்னிரண்டு அதிகாரங்களைத் தந்தார். விசுவாசம் தேவனுக்கு மிக முக்கியமானதாக இருந்திருக்க வேண்டும். ஏனென்றால் முழு யோசுவாவின் புத்தகத்தின் நோக்கமே அவர் நமக்கு அருளியுள்ள ஆவிக்குரிய ஆசீர்வாதங்களுக்குள் நாம் எப்படி நடந்து விசுவாசத்தில் செல்வது என்று நமக்குக் காட்டுவது தான்.

யோசுவாவின் புத்தகம் கானான் தேசத்தைப் பற்றியது. இந்தக் கானான் தேசத்திற்குள் நாம் பிரவேசிக்க வேண்டும். ஒவ்வொரு பட்டணமாக ஜெயிக்கப்பட வேண்டும், ஒவ்வொரு தேசமாக ஜெயிக்கப்பட வேண்டும். யோசுவாவின் புத்தகம் கூறும் ஆவிக்குரிய, தியானத்துக்குரிய செய்தி ஒரு புவியியல் சார்ந்த இடத்தைப் பற்றியது அன்று. உங்கள் ஆவிக்குரிய உடைமைகளை விசுவாசத்தினால் உங்களுடையவைகளாக ஆக்கிக் கொள்ளுதல் ஆகும்.

இந்த விசேஷித்த மக்களின் இரட்சிப்பின் நோக்கத்தைக் கானான் தேசம் படம் பிடித்துக் காட்டுகிறது. 'இரட்சிப்பு' என்ற பதம் 'விடுதலை' எனப் பொருள் கொள்வதால் அவர்கள் எகிப்திலிருந்து விடுதலை பெற்றது நமது இரட்சிப்புக்கு உருவகமாக அமைகிறது. இயேசு கிறிஸ்து தேவனுடைய ஏக சுதனும் நமது ஒரே இரட்சகருமாய் இருக்கிறாரென விசுவாசிப்பதால் நமக்கு இரட்சிப்பு கிடைக்கிறது. நம்முடைய விசுவாசத்தை அவர் மீது வைக்கும்பொழுது, நம்முடைய பாவங்களிலிருந்து நம்மை விடுவிக்கிறார் அல்லது ஆவிக்குரிய எகிப்திலிருந்து நம்மை விடுவிக்கிறார். தங்கள் எகிப்திய வாழ்க்கையிலிருந்து இரட்சிக்கப்பட்ட அனுபவத்தைப் பெற்ற மக்களுக்கென்று தேவன் திட்டம் பண்ணியுள்ள வாழ்க்கைத் தரத்தைச் சித்தரிப்பது கானானுக்குள் பிரவேசிப்பதும், அதை ஜெயிப்பதும்.

விசுவாசத்தின் மூலம் கிருபையினாலே தேவன் நம்மை இரட்சிப்பதாக பவுல் அப்போஸ்தலன் கூறுகிறார். நம்முடைய இரட்சிப்பு ஏதோ நம் சுய சாதனையினால் உண்டானதல்ல எனப் பவுல் கூறுகிறார். அது தேவனுடைய ஈவு, நம்முடைய நற்கிரியைகளின்

விளைவு அல்ல. இருப்பினும், தேவன் நமக்கென்று செய்த முன் தீர்மானத்தின்படி நற்கிரியைகளை செய்வதற்கென நாம் இரட்சிக்கப்பட்டிருப்பதாக பவுல் எழுதுகிறார். அந்த நற்கிரியைகளில், இவ்வுலக வாழ்வில் நமது இரட்சிப்பின் நோக்கமாக இருக்கிறது. நமது அன்பின் தேவன் ஒவ்வொரு சதுர அடியாக நாம் நமதாக்கிக் கொள்ள விரும்பும் ஆவிக்குரிய வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தின் ஒரு பகுதியாக அவைகள் (நற்கிரியைகள்) இருக்கின்றன.

இரட்சிப்பு என்பது மோட்சத்துக்குப் போகும் ஒரு வழிப் பயணச்சீட்டு என்று மட்டும் கூறமுடியாது, அதற்கும் மேலானது. நம்முடைய இரட்சிப்புக்கு நிகழ்கால நோக்கம் ஒன்றுண்டு. இங்கே பூமியில் நமது ஆவிக்குரிய ''கானான்''. நம்முடைய ஆவிக்குரிய உடைமைகள் நம்மிடம் இல்லாததற்கான காரணம், அவைகளை எப்படி நமதாக்கிக் கொள்ளலாம் என நமக்குத் தெரியாமல் இருப்பதாக இருக்கலாம். நமது ஆவிக்குரிய உடைமைகளை நமதாக்கிக் கொள்ளத் தேவையான தரமான விசுவாசத்தை நமக்குக் காட்டுவதற்காகப் பழைய ஏற்பாட்டின் இந்த முதல் சரித்திர புத்தகத்தை தேவன் நமக்குத் தந்திருக்கிறார்.

அத்தியாயம் 11

விசுவாசத்தின் ஒரு பரந்த காட்சி

கானானை ஜெயித்தது பற்றிய வரலாற்றுக் குறிப்புகள் அடங்கிய புத்தகம் யோசுவாவின் புத்தகம். இந்தப் பதிவேட்டை நாம் படிக்கும்போது 'விசுவாசத்தின் பரந்த காட்சி' ஒன்றை நாம் பார்ப்போம். நம்முடைய ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை நாம் எவ்விதம் பற்றிக் கொள்ளலாம் என புத்தகத்தைப் படிக்கும்போது தெரிந்து கொள்ளலாம். எது விசுவாசம், எது விசுவாசம் இல்லை எனக் காட்டும் எடுத்துக் காட்டுகளும் எச்சரிப்புகளும் ஒவ்வொரு அதிகாரத்திலும் நிறைந்து காணப்படுகின்றன. 'உலகம்', 'மாமிசம்', 'பிசாசு' என்னும்

படுகுழிகளைப் பற்றிய எச்சரிப்புகளும் இந்த அதிகாரங்களில் ஆங்காங்கே காணப்படுகின்றன.

யோசுவாவின் புத்தகத்தில் நாம் காணும் முதல் விஷயம் என்னவெனில் ''விசுவாசத்தின் ஒரு மாறுநிலை''. தலைமைப் பதவியிலும் மோசேயிடமிருந்து யோசுவாவுக்கு மாறும் ஒரு மாற்றத்தைக் காண்கிறோம். ''மோசே நூனின் குமாரனாகிய யோசுவாவின் மேல் தன் கைகளை வைத்தபடியினால் அவன் ஞானத்தின் ஆவியினால் நிறையப்பட்டான். இஸ்ரவேல் புத்திரர் அவனுக்குக் கீழ்ப்படிந்து, கர்த்தர் மோசேக்குக் கட்டளையிட்டபடியே செய்தார்கள். கர்த்தருடைய தாசனாகிய மோசே மரித்தபின்பு, கர்த்தர் மோசேயின் ஊழியக்காரனான நூனின் குமாரன் யோசுவாவை நோக்கி: என் தாசனாகிய மோசே மரித்துப் போனான்; இப்பொழுது நீயும் இந்த ஜனங்கள் எல்லாரும் எழுந்து, இந்த யோர்தானைக் கடந்து, இஸ்ரவேல் புத்திரருக்கு நான் கொடுக்கும் தேசத்துக்குப் போங்கள்... பலங்கொண்டு திடமானதாயிரு; இந்த ஜனத்தின் பிதாக்களுக்கு நான் கொடுப்பேன் என்று ஆணையிட்ட தேசத்தை நீ இவர்களுக்குப் பங்கிடுவாய். தாசனாகிய மோசே உனக்குக் கற்பித்த நியாயப் பிரமாணத்தின் படியெல்லாம் செய்யக் கவனமாயிருக்கமாத்திரம் மிகவும் பலங்கொண்டு திடமனதாயிரு; நீ போகும் இடமெல்லாம் புத்திமானாய் நடந்துகொள்ளும்படிக்கு, அதை விட்டு வலது இடதுபுறம் விலகாதிருப்பாயாக. இந்த நியாயப் பிரமாண புஸ்தகம் உன் வாயை விட்டுப் பிரியாதிருப்பதாக; இதில் எழுதியிருக்கும்படி இரவும் பகலும் அதைத் தியானித்துக் கொண்டிருப்பாயாக; அப்பொழுது நீ உன் வழியை வாய்க்கப்பண்ணுவாய், அப்பொழுது புத்திமானாயும் நடந்து கொள்ளுவாய். நான் உனக்குக் கட்டளையிடவில்லையா? பலங்கொண்டு திடமாயிரு; திகையாதே, கலங்காதே, நீ போகுமிடமெல்லாம் உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடே இருக்கிறார் என்றார் (யோசுவா 1:1-8).

யோசுவாவின் ஆரம்ப அதிகாரங்களிலே ''விசுவாசத்திலே குழப்பங்கள்'' என்று பார்க்கிறோம். விசுவாசத்தப் பற்றிய அறிவிலே நாம்

வளரும்போது நம் விசுசத்தில் சவால் விடும் கேள்விகளை எழுப்பும் பிரச்சினைகளை நாம் சந்திக்கும்போது நாம் கலவரப்படக் கூடாது. விசுவாசத்தைப் பற்றிய கேள்விகள் எழுப்பும் பிரச்சினைகளையும் தடைகளையும் நாம் நீக்கிவிடக்கூடுமானால், விசுவாசத்திற்கான தேவையையே நாம் நீக்கிவிடுவோமே!

யோசுவா இரண்டாம் அதிகாரத்திலே ராகாபின் நடவடிக்கை அநேக மக்களுக்கு விசுவாசம் பற்றிய பிரச்சினைகளையும் கேள்விகளையும் எழுப்புகிறது. இரண்டு யூத வேவுகாரர்கள் அவள் வீட்டிற்கு வந்தனர்; அவர்களை அவள் மறைத்து வைத்தாள். எரிகோ பட்டணத்து ராஜாவின் மனிதர் யூதர்னயைத் தேடி வந்தபொழுது, அவர் களை வேறு வழியாய் அனுப்பி விட்டாள். இதற்காக தேவன் அவளை ஆசீர்வதித்தார். வேதத்தில் விசுவாசத்தைப் பற்றிய மகத்தான அந்த அதிகாரத்தில் ராகாப் விசுவாசத்தில் வீராங்களை எனப்படிக்கிறோம். ஆனால் அவள் பொய் சொன்னாள். அச்சம்பவத்தை நீங்கள் ஆழந்து படிக்காதீர்களென்றால் அவள் பொய் சொன்னதால் விசுவாசத்திற்கு முன் மாதிரியாய் குறிப்பிடப்படவில்லை. 'விசுவாச' அதிகாரத்தில் நாம் இப்படி வாசிக்கிறோம். ''விசுவாசத்தினாலே ராகாப் என்னும் வேசி... கீழ்ப்படியாதவர்களோடே கூடச் சேதமாகாதிருந்தாள்''. யூத வேவுகாரர்கள் வந்தபோது, ராகாப், ''கர்த்தர் உங்களுக்கு தேசத்தை ஒப்புக் கொடுத்தாரென்றும், உங்களைப் பற்றி எங்களுக்குத் திகில் பிடித்திருக்கிறதென்றும் உங்களைக் குறித்து தேசத்துக் குடிகளெல்லாரும் சோர்ந்து போனார்களென்றும் அறிவேன்'' (யோசுவா 2:9) என்று கூறினாள்.

எபிரெய வேவுகாரர்கள் அவளோடே ஒரு உடன்படிக்கை பண்ணி, அவள் உயிரைக் காப்பாற்றுவதாக வாக்குக் கொடுத்தார்கள். அவள் ஏன் காப்பாற்றப்பட்டாள்? அவளது விசுவாசம் அவளைக் காப்பாற்றியது. அந்த எபிரெய மக்கள் தேவனுடைய மக்கள் என்றும், அவர்களுடைய தேவன் ஜீவனுள்ள மெய்யான தேவனென்றும் அவள் விசுவாசித்தாள். ராகாப் தேவனுடைய மக்களில் ஒருவளானாள். ஏனெனில் மெய்யான, ஜீவனுள்ள தேவனிடம் அவளுக்கு விசுவாசம் இருந்தது.

மூன்றாவது அதிகாரத்தில் 'விசுவாசத்தின் உறுதிமொழி' பற்றிப் பார்க்கிறோம். ஆவிக்குரிய கானானுக்குள் பிரவேசிக்க தேவன் நமக்கு விசுவாசத்தைக் கொடுக்க முயலும்போது, நம்மை உற்சாகப் படுத்துவதற்காக, நம் விசுவாசத்தை கனம் பண்ணி நிறைவேற்றுவார். கிதியோனின் வாழ்க்கையில் நாம் இதைப் பார்க்கிறோம். அவன் மயிருள்ள ஒரு தோலைக் களத்திலே போட்டான். தேவன் அதை கனம் பண்ணினார். தாவீது, ''நல்ல மனுஷனுடைய நடைகள் கர்த்தரால் உறு திப்படும்''(சங்கீதம் 37:23) எனக் கூறுகிறார். அதன் பொருள் என்னவெனில், நாம் விசுவாசத்தின் படிகளை (அடிகளை) எடுத்து வைக்கும்போது தேவன் அந்த விசுவாசத்தின் அடிகளை ஆசீர்வதித்து, உறுதிப்படுத்துகிறார்.

இந்த அதிகாரத்தில் தேவன் யோசுவாவுக்குத் தன்னை நிரூபித்துக் காட்டினார். மோசேயின் மேல் தேவனுடைய ஆசீர்வாதம் இருந்தது போல், அவர்களுடைய தலைவன் யோசுவாவின் மீதும் அவருடைய ஆசீர்வாதம் இருக்கும் என மக்களுக்கும் காட்டினார். மக்களுடைய விசுவாசத்தைப் பலப்படுத்தும்படி அற்புதங்களையும் செய்தார். இந்த அற்புதங்களின் நோக்கம் என்னவெனில் தேவன் அவர்களோடிருக் கிறார்; எரிகோ போன்ற கானானின் பலத்த அரண்களுள்ள பட்டணங்களை அவர்கள் தாக்கும்போது, அவர்களுக்கு வெற்றியைக் கொடுத்து ஆசீர்வதிப்பார் என்று காட்டுவது தான்.

நாலாவது அதிகாரத்தில் இஸ்ரவேல் புத்திரர் ''விசுவாச பலிபீடத்தை''க் கட்டினார்கள். அவர்கள் யோர்தான் நதியைக் கடந்தபோது, வெள்ளம் பிரவாகித்து வந்தபோதும், தண்ணீர் பிளவுண்டது; அவர்கள் உலர்ந்த தரையில் நடந்து போனார்கள். ஆற்றைக் கடக்கும் போது கற்களினால் ஒரு பலிபீடத்தைக் கட்டும்படி ஆணையிடப்பட்டார்கள். யோர்தான் நதியைக் கடப்பதற்கு அவரை நம்பத் தக்க விசுவாசம் அவர்களுக்கு இருந்தபோது தேவன் அவர்களுக்குச் செய்ததை அவர்கள் பிள்ளைகள் ஒரு போதும் மறவாதிருக்க இந்தப் பெரிய அற்புதத்திற்கு நினைவுச் சின்னமாக பலிபீடம் கட்டப்படப் பணிக்கப்பட்டார்கள்.

ஐந்தாம் அதிகாரத்தில் 'விசுவாசத்தின் முன் தேவைகள்' பற்றிக் காண்கிறோம். கானானுக்குள் பிரவேசிப்பதற்குச் சற்று முன்னதாக, இஸ்ரவேல் புத்திரரிலுள்ள ஒவ்வொரு ஆணும் விருத்தசேதனம் பண்ணிக் கொள்ள வேண்டும் எனக் கட்டளை பெற்றார்கள். ஆண்களில் இரண்டாம் தலைமுறையினர் இதுவரை விருத்தசேதனம் பண்ணப்படவில்லை. முதலாம் தலைமுறையினர் வனாந்தரத்தில் மடிந்து போனது உங்களுக்கு நினைவிருக்கலாம். நம்பகமான விசுவாசத்தின் நிபந்தனைகளை விளக்கும் அழகானதொரு எடுத்துக் காட்டு இச்சம்பவம். வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசமாகிய தேவனுடைய ஆசீர்வாதத்திற்குள் நீங்கள் பிரவேசிக்குமுன், உங்கள் வாழ்க்கையில் பாவமேதும் இருக்கிறதா என நீங்கள் உங்களையே கேட்டுக் கொள்ள வேண்டும். உங்கள் வாழ்க்கையில் உங்களையே விடுவித்துக் கொள்ள வேண்டிய பாவம் ஏதேனும் இருக்கிறதா?

ஆதியாகமம் புத்தகத்தை நாம் பரிசீலித்த போது, தங்களை விசுவாசிகளென்று அழைத்துக் கொள்ளும் அநேகர் மனந்திரும்புதலின் பலிபீடத்திற்கு வராமல் கடந்து சென்று விடுகிறார்கள் என்று படித்தோம். விசுவாசத்திற்கு, நடமாடும் விளக்கமாக ஆபிரகாமின் வாழ்க்கை இருந்தபோது அவன் இந்த மனந்திரும்புதலின் பலிபீடத்தைக் கட்டினான். மனந்திரும்புதலின் பலிபீடத்திற்கு வராத மக்கள் தங்கள் வாழ்க்கையிலுள்ள பாவத்தை தேவன் அகற்றுவதற்கு அவர்கள் இடங்கொடுத்ததேயில்லை. நமது விசுவாசத்தின் மீது தேவனுடைய ஆசீர்வாதத்தை நாம் எதிர்பார்ககுமுன், நாம் கட்டாயம் நம் வாழ்க்கையிலுள்ள பாவத்திற்காய் மனந்திரும்ப வேண்டும். ஆண் மக்கள் அனைவரும் விருத்தசேதனம் பண்ணப்பட வேண்டும் என்ற இந்தக் கட்டளையின் நோக்கம் இது தான். நம்முடைய இருதயங்களில் உள்ளார்ந்த விசுவாச அர்ப்பணிப்பை வெளிப்படுத்தும் வெளிப்புற அடையாளம் அது. பழைய ஏற்பாட்டில் விருத்தசேதனம் பற்றி நாம் காணும் அர்த்தம், புதிய ஏற்பாட்டில் ஞானஸ்நானம் பற்றி நாம் காணும் அர்த்தம் போன்றிருக்கிறது.

யோசுவா ஐந்தாம் அதிகாரத்தில் 'ஒரு விசுவாசத்தின் ஆணையை' நீங்கள் காணலாம். ஐந்தாம் அதிகாரத்தின் கடைசிப் பகுதியில் காணப்படுகிறது. போர்வீரர்களில் ஒருவனும் உருவின பட்டயத்தை வைத்திருக்கக் கூடாது என யோசுவா கட்டளை யிட்டிருந்தான். யோர்த்தானுக்குக் கிழக்கே, கும்மிருட்டில் இருக்கும் சேனைக்குள் சத்துரு எளிதாக நுழைந்து அவர்களைத் தாக்கக் கூடும். ஆகவே அவர்கள் பொதுவாகவே இப்படித்தான் கட்டளையிடுவார்கள். ''உன் பட்டயத்தை அதன் உறையிலிருந்து உருவாதே''. அப்படிச் செய்வதால் யாராவது உருவின பட்டயத்தோடு வந்தால் அவன் பகைவன் என்று கண்டு அதற்கேற்ப செயல்படுவார்கள்.

எரிகோவின் மீது படையெடுப்பதற்கு முந்திய நடுஇரவில் யோசுவா நடந்து கொண்டிருந்தான். உருவின பட்டயத்தோடு ஒரு மனிதனைக் கண்டான். ''நீர் எங்களைச் சேர்ந்தவரோ எங்கள் சத்துருக்களைச் சேர்ந்தவரோ?'' என யோசுவா அவரிடம் கேட்டான். அதற்குப் பதில், ''நான் கர்த்தருடைய சேனையின் அதிபதியாய் இப்பொழுது வந்தேன்,'' என்று வந்தது. யோசுவா தரையிலே முகங்குப்புற விழுந்து பணிந்து கொண்டு அவரை நோக்கி'' எனக்குக் கட்டளையிடும்,'' எனக் கேட்டான். சேனையின் அதிபதி ''உன் கால்களிலிருக்கிற பாதரட்சைகளைக் கழற்றிப் போடு, நீ நிற்கிற இடம் பரிசுத்தமானது'' என்றார். யோசுவா அப்படியே செய்தான் என்று வாசிக்கிறோம் (யோசுவா 5:13-15).

யுத்தத்திற்கு முந்தின இரவு யோசுவா கர்த்தரிடமிருந்து யுத்தத்திற்கான திட்டத்தைப் பெற்றான் என யோசுவாவின் புத்தகம் ஆறாம் அதிகாரத்தில் உள்ளது. அத் திட்டத்தின்படி, இஸ்ரவேல் மக்கள் அனைவரும் பாளையத்தை விட்டு வெளியே வரும்படியும், எரிகோவின் மதில் சுவர் வரைக்கும் நடந்து வந்து, பட்டணத்தைச் சுற்றிவர வேண்டுமேன சொல்லப்பட்டது. இப்படி அவர்கள் ஒவ்வொரு நாளும் ஒரு முறை என ஆறு நாட்கள் சுற்றி வர வேண்டும்.

ஏழாவது நாள், அவர்கள் பட்டயத்தை ஏழுமுறை சுற்றி வரும்படியாகச் சொல்லப்பட்டது. மொத்தம் பதிமூன்று முறை அந்தப்

பட்டயத்தைச் சுற்றிவர வேண்டுமென அவர்களுக்குக் கட்டளை கொடுகடகப்பட்டது. பட்டணத்தின் மதில் சுவர் எவ்வளவு தடினமாயிருந்தென்றால், அதன்மேல் வீடுகள் கட்டப்பட்டிருந்தன. பட்டணம் அப்படிப் பாதுகாக்கப்பட்டிருந்தது. பட்டணத்தைக் காப்பாற்றும் மனிதர்கள், பெண்கள், ஆயுதம் தாங்கிப் போரிட முடியாத வியாதியுற்றோரை மதிற்சுவரின் மேல் வைத்து, எதிரிகளின் தலைமேல் எறியத்தக்கதாக செந்தணல் கரியையும் பெரிய கல்லுகளையும் அவர்களிடம் கொடுத்து விடுவார்கள்.

அபிமலேக் என்ற ஒரு பெரிய தளபதி, அவன் தாக்கும் பட்டணத்தின் மதில் சுவருக்கு மிக நெருங்கிச் சென்று விட்டான். மூதாட்டி ஒருத்தி ஒரு பெரிய ஏந்திரக் கல்லை அவன் தலையின் மேல் போட்டாள். நசுங்கிய தலையுடன் அபிமலேக் தன் ஆயுததாரியிடம் ''என்னுடைய வாளை எடுத்து என்னை உருவக்குத்தி விடு. ஒரு பெண் அபிமலேக்கைக் கொன்றதாக சொல்லப்படக் கூடாது'' என்றான். (நியாதிபதிகள் 9:52-54) இஸ்ரவேலரின் பட்டாளத்துக்கு அது ஒரு முக்கிய வார்த்தையாகப் போய் விட்டது. ஒரு போதும் ஒரு பட்டணத்தின் மதில் சுவரை நெருங்காதே. அபிமலேக்கை நினைத்துக் கொள்!

இருப்பினும் தேவன் யோசுவாவிடம் தம்முடைய மக்கள் எல்லா ரையும் எரிகோ பட்டணத்தின் பெரிய மதில் சுவர் வரைக்கும் கொண்டு போகச் சொன்னார். பட்டணத்தைப் பதிமூன்று முறை சுற்றி வரவேண்டும் என்றும் சொன்னார். இது யோசுவா நடத்தும் முதல் யுத்தம். போர் நடத்துபவனாகத் தன் யுத்த உத்திகள் மற்றும் திறமைகளைக் காட்ட யோசுவா ஆர்வமுடன் இருந்திருக்கலாம். போர் உத்திகளைச் சிறப்பாகச் செயல்படுத்தக் கூடியவன் என்ற உண்மையை சீக்கிரத்தில் யோசுவா வெளிக்காட்டத் தான் போகிறான். ஆனால் இந்த யுத்த திட்டம் வேடிக்கையாக இருந்தது; யோசுவாவை முட்டாள் போன்று காட்டியது. இந்தத் திட்டத்தின் ஒவ்வொரு சிறு பகுதியையும் கருத்தாய் செயல்படுத்தினான். ஏனென்றால் இத்திட்டத்தைப் பற்றி அவனுக்குத் தெரிந்தது ஒன்றே தான் - அது தேவனின் திட்டம்!

அவர்கள் எரிகோவின் மதிலைச் சுற்றி வந்த நேரமெல்லாம் ஒரு வார்த்தை கூட பேசக் கூடாது என சொல்லப்பட்டடிருந்தது. எரிகோவின் மக்களுக்கு ஒரே ஆச்சரியமாயிருந்திருக்க வேண்டும். ஏனெனில் அவர்கள் இஸ்ரவேலர் மேல் எதையும் எறியவில்லை. ஏழாம் நாளில் ஏழு தடவைப் பட்டணத்தைச் சுற்ற வந்த பிறகு யோசுவா மக்களிடமாய்த் திரும்பி 'ஆர்ப்பரியுங்கள்! என்று கட்டளையிட்டான்.

விசுவாசத்தினால் எரிகோவின் மதில்கள் விழுந்ததாக எபிரெயருக்கு எழுதின நிருபம் கூறுகிறது. இஸ்ரவேல் மக்கள் அனைவருக்கும் முன்னாக யோசுவா நடந்து எரிகோவின் மதில்களைச் சுற்றிவந்தார்கள். அதற்கு விசுவாசம் தேவைப்பட்டது. மக்களனை வரையுமே ஒரு நாளைக்கு ஒரு தரமென ஆறு நாட்களும், ஏழாவது நாளில் ஏழு தரமும், மதில் மேலிருந்தவற்றால் எதுவும் நடக்கலாம் (ஆபத்து வரலாம்) என்ற நிலையிலும் நடத்தினான்.

''வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குள் நாம் பிரவேசிப்பதையும், தேவபக்தியுள்ள மக்களாக நாம் வாழ்வதையும் சாத்தியமாகக் கூடிய விசுவாசத்தை எரிகோ யுத்தம் நமக்குக் காட்டுகிறது. அப்படிப்பட்ட விசுவாசம் நடைமுறைக்கு ஒத்தது. அது நடக்கும் விசுவாசம். எரிகோவைச் சுற்றிப் பதிமூன்று முறை நடந்த யோசுவாவின் விசுவாசம் விளங்காத புதிரோ மர்மமோ அன்று. அந்த விசுவாசத்தின் தரம் வேறொன்றுமில்லை - கீழ்ப்படிதல் தான். ''நடக்கும்'' விசுவாசம் கிரியை செய்யும் விசுவாசம் அல்லது செயலாற்றும் விசுவாசம் எனலாம். அன்று நடந்தது, செயலாற்றிய விசுவாசம் எனலாம். திறம் படைத்த, எடுத்துக்காட்டாயுள்ள அந்த விசுவாசம் இன்று உங்கள் வாழ்க்கைப் போராட்டங்களில் செயலாற்றி வெற்றி சிறக்கக் கூடியது.

உங்கள் விசுவாசம் அப்படிப்பட்ட விசுவாசமா? சிலர், தங்கள் மனதால் எல்லாவற்றையும் புரிந்து கொள்ளும் வரை விசுவாசச் செயலில் இறங்கக் கூடாது என நினைக்கிறார்கள். ஆனால்

இயேசுவானவரோ தம்மைப் பின்பற்றியவர்கள் முதலில் செயலில் இறங்கத் தங்களை ஒப்புக் கொடுக்க வேண்டுமென்றும், அதன்பின் புத்தி ஒப்புதல் அளிக்குமென்றும் போதித்தார். ''அவருடைய சித்தத்தின்படி செய்ய மனதுள்ளவன் எவனோ அவன்....அறிந்து கொள்ளுவான்'' (யோவான் 7:17). முதலில் (கொள்கைப்படி) எரிகோவைப் பதிமூன்று முறை சுற்றி வாருங்கள் அதன்பின், செயலாற்றி, வெற்றி கொள்ளும் விசுவாசத்தைக் கண்டு கொள்வீர்கள்.

சங்கீதம் 27ல், தாவீது இப்படி எழுதினார்: ''நானோ, ஜீவனுள்ளோர் தேசத்திலே கர்த்தருடைய நன்மையைக் காண்பேன் என்று விசுவாசியாதிருந்தால் கெட்டுப் போயிருப்பேன்'' (சங்கீதம் 27:13). ''பார்ப்பது தான் விசுவாசம்'' என சில மக்கள் நினைக்கிறார்கள் அல்லது பார்த்தல் விசுவாசத்திற்கு வழி வகுக்கும் என்று எண்ணுகிறார்கள். ஆனால் தேவனுடைய வார்த்தையோ விசுவாசிப்பது முதலாவது; நிறைவேறுவதைப் பார்ப்பது அதைத் தொடர்ந்து வரும் என நமக்குப் போதிக்கிறது. எரிகோ யுத்தத்தில் இந்த மாதிரி விசுவாசத்தைக் காண்கிறோம்.

நம் வாழ்க்கைக்கான அவர் திட்டங்களை நிறைவேற்ற தேவன் இப்பொழுதும் நம்மிடம் பொறுப்பளிக்கிறார். எரிகோ யுத்தத்திற்கான தேவனின் திட்டம் யோசுவாவை சோதித்தது போல, அவர் நம் வாழ்க்கைக்கென கொடுக்கும் கட்டளை நம் விசுவாசத்தைச் சோதிக்கும். நீங்கள் தேவனை நன்றாய் அறிந்திருந்தால், அவருடைய கிருபை உங்களைக் காப்பாற்றக் கூடாத இடத்திற்கு, அவருடைய கட்டளை உங்களை அழைத்துச் செல்லாது என்று அறிவீர்கள். ஒரு காரியத்தைச் செய்யும்படி தேவன் உங்களை நடத்துகிறாரென்று நீங்கள் அறிந்தால், அதைச் செய்யுங்கள் (யோவான் 2:5). விசுவாசம் நடைமுறைக் கொத்தது என யோசுவாவின் புத்தகம் நமக்குப் போதிக்கிறது. அது நடக்கும் போது, அது செயலாற்றுகிறது. அது செயலாற்றும்போது, வாழ்க்கைப் போராட்டங்களை வெற்றி கொள்கிறது.

அத்தியாயம் 12
விசுவாசத்தின் சத்துருக்கள்

ஆயி பட்டணத்தில் தோற்றுப் போன பின், ஊக்கமாக ஜெபத்தில் முகங்குப்புற யோசுவா விழுந்தான். தேவன் யோசுவாவின் ஜெபத்திற்குப் பதில் கொடுத்து, '' நீ இப்படி முகங்குப்புற விழுந்து கிடக்கிறது என்ன? இஸ்ரவேலர் பாவஞ்செய்தார்கள்,'' என்றார். தேவன் நம்மோடிருக்கிறார் என்ற மகிமையான உண்மைக்கான சாட்சியங் களைக் காணும்போது, நாம் தொடர்ந்து முன்னேற அந்த சாட்சியங்கள் நமக்கு தைரியத்தைக் கொடுக்கின்றன. அப்படித் தொடர்ந்து முன்னேற, முன்னேற, விசுவாசமும் வளருகிறது. ஆனால் தேவன் நம்மோடு இல்லையென்பது தெளிவானிவிட்டால், தேவன் ஏன் நம்மோடு இல்லை எனக் கண்டுபிடிக்கும் வரைக்கும் நாம் முகங்குப்புற விழுந்து கிடக்க வேண்டியது தான். தேவன் ஏன் யோசுவாவின் அநதக் கேள்விக்குப் பதிலளித்தார்?

யாத்திராகம் புத்தகத்தில் இஸ்ரவேல் புத்திரர் செங்கடலுக்குப் புறமுதுகு காட்டியபோது, எகிப்திய சேனை அவர்களைத் தாக்க ஆரம்பித்தார்கள். ஊக்கமாக ஜெபித்து மோசே, தேவன் முன்பாக முகங்குப்புற விழுந்து கிடந்தார். யோசுவா முகங்குப்புற விழுந்து கிடந்த போது கேட்ட அதே கேள்வியைத் தான் தேவன் மோசேயிடமும் கேட்டார். நேரே கடலுக்குள் செல்ல வேண்டும் என்று அவன் தேவனுடைய மக்களிடம் பேச வேண்டும் என்பது தெளிவாகத் தெரிகிற போது, அவன் ஏன் ஜெபித்துக் கொண்டிருக்க வேண்டும் என தேவன் மோசேயை வினவினார்.

எரிகோ தான் ஜெயிக்கப்பட்ட முதல் பட்டணம். தசமபாகம் குறித்த சட்டம் கேட்பதன்படி வெற்றிகொள்ளப்பட்ட முதல் பட்டணத்தின் கொள்ளை கர்த்தருக்குரியது. போரில் கொள்ளையாடின பொருள்களில் ஒன்றைக்கூட ஒரு போர் வீரன் தனக்கென எடுத்துக் கொள்ள முடியாது. யாரோ ஒரு போர்வீரன் எரிகோவின் பொருள்களில் எதையோ தனக்கென எடுத்துக் கொண்டிருக்கிறான். பன்னிரண்டு

கோத்திரங்களையும் வரிசையாக நிற்கும்படி தேவன் யோசுவாவிடம் கூறினார். குற்றம் புரிந்த கோத்திரத்தை தேவன் காட்டிய பிறகு, அந்தக் கோத்திரத்துமக்களை வம்சம் வம்சமாக நிற்க வைத்தார். குற்றமுள்ள வம்சத்தை தேவன் காட்டினார். அந்த வம்சத்தில் குடும்பம், குடும்பமாக நிற்க வைத்துக் கடைசியில் ஆகான் தான் குற்றமிழைத்த பாவி எனக் கண்டுபிடிக்கப்பட்டது. தங்கம், வெள்ளி, மற்றும் சால்வையை எடுத்துக் கொண்டுஅதைத் தன் கூடாரத்திலே புதைத்து வைத்ததை அறிக்கை யிட்டான். அவன் கொலை செய்யப்பட்டான்.

இந்த வரலாற்றுப் புத்தகங்களில் முன் மாதிரிகள் மற்றும் எச்சரிப்பு களைக் கண்டு கொள்ள நாம் அறிவுறுத்தப்படுகிறோம் (I கொரிந்ததியர் 10:11). யோசுவாவின் விசுவாசம் நாம் பின்பற்ற வேண்டிய முன் மாதிரி யாய் இருப்பது போல, நாம் கவனிக்கவேண்டிய எச்சரிப்பாக ஆகானின் கீழ்ப்படியாமை அமைந்துள்ளது. நம் வாழ்க்கையிலுள்ள பாவத்தை தேவன் சுட்டிக் காட்டும் பொழுது, தேவனுடைய ஆசீர்வாதம் மறுபடி யும் நம் வாழ்க்கையில் வரும்படி, அந்தப் பாவத்தை சாகடிக்க வேண் டும் (கொலோசெயர் 3: 5,6; ரோமர் 8:13). இந்த ஆவிக்குரிய ஒழுங்கு ஆகான் வாழ்க்கை தரும் எச்சரிப்பில் காணப்படுகிறது.

உலகம், மாமிசம், பிசாசு

உலகத்தையோ, உலகத்திலுள்ளவைகளையோ நேசிக்கக் கூடா தென நாம் போதிக்கப்பட்டிருப்பதால், பல நூறு ஆண்டுகளாக பக்தி யுள்ள மக்கள் எரிகோவில் ஆகான் செய்ததை உலகத்துக்கு உருவகமாகக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆயியில் அவர்கள் தோற்றுப் போனதை மாமிசத்துக்கு உருவகப்படுத்துகிறார்கள். இயேசுவானவர் ''ஆவி உற் சாகமுள்ளது தான். மாம்சமோ பலவீனமுள்ளது,'' எனப் போதித்தார். மாம் சம் என்பது தேவனுடைய உதவி பெறாத மனித சுபாவம். ஆவிக்குரிய தோல்விகளுக்கு மாமிசமே காரணமாயிருப்பதால், ஆயியில் ஏற்பட்ட தோல்வி மாமிசத்துக்கு உருவகமாயுள்ளது.

யோசுவாவின் புத்தகத்தில் எழுதப்பட்ட இஸ்ரவேலரின் அடுத்த அனுபவம் விசுவாசத்தின் மூன்றாவது சத்துருவாகிய பிசாசு.

‘கிபியோனியர்கள்’ என்றழைக்கப்பட்டவர்களை இஸ்ரவேல் புத்திரர் இப்பொழுது சந்திக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் கானானுக்குள் பிரவேசித்து அங்குள்ள மக்களைக்கொன்று வருவதை ராகாபைப்போல கிபியோனியரும் கண்டனர். தாங்களும் கொல்லப்படுவோம் என்று அவர்களுக்குத் தெரிந்தது. ஆகவே இஸ்ரவேலரை ஏமாற்றினார்கள். அவர்கள் காலணிகளைப் பாறைகளில் தேய்த்து பல ஆண்டுகளாய்ப் பயன்பட்டது போல ஆக்கிக் கொண்டார்கள். அவர்கள் உடைகளும் பழையனவாய்க் காட்சி தரும்படி செய்தார்கள். ஜெயிக்கப்படவேண்டிய நாட்டில் அவர்கள் வாழ்ந்தாலும் கூட, தூர தேசத்திலிருந்து வந்ததாகக் காட்டிக் கொண்டார்கள்.

கர்த்தரிடம் முதலில் விசாரிக்காமல், இஸ்ரவேலர் இந்த மக்களோடு ஒரு உடன்படிக்கை செய்து கொண்டார்கள். கிபியோனியர் அவர்களிடம், ‘‘எங்களோடு ஒரு ஒப்பந்தம் செய்து கொள்ளுங்கள். நாங்கள் கானான் தேசத்தவர்களல்ல. நாங்கள் வெகு தொலைவிலிருந்து வந்தோம்’’ எனக் கெஞ்சிக் கேட்டுக் கொண்டார்கள். அந்த ஒப்பந்தம் செய்து முடித்த பிறகு, கிபியோனியர் தூரதேசத்திலிருந்தல்ல, கானானிலிருந்து தான் வந்துள்ளனர் என இஸ்ரவேல் புத்திரர் கண்டுபிடித்தார்கள். அவர்கள் ஒப்பந்தம் செய்து விட்டபடியாலும், தெரிந்து கொள்ளப்பட்ட மக்கள் முற்றிலும் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களானதாலும் அவர்களால் கிபியோனியரைக் கொல்ல முடியவில்லை. அவர்களை ஏமாற்றிய இந்த மக்களைத் தங்களுக்கு வேலைக்காரர்களாக்கிக் கொண்டனர்.

விசுவாசத்தின் சத்துருக்கள் என யோசுவாவின் புத்தகத்தில் சொல்லப்பட்டிருப்பதை நிறைவு செய்பவர்கள் கிபியோனியர். நமது முதல் சத்தருவாகிய உலகம் எரிகோவாகக் காட்டப்படுகிறது. இவ்வுலகப் பொருள்கள் மேல் நமக்கிருக்கும் ஆசையைப் படம் பிடித்துக் காட்டுவது ஆகானின் வரலாறு. அவன் சால்வை, தங்கம், வெள்ளி என இச்சித்தது போன்று, தேவனை விட்டு நம்மனதை சிதறப் பண்ணும் இவ்வுலகப் பொருள்களை நாம் இச்சிக்கிறோம். ஆயியில் கண்ட தோல்வி மாமிசத்தைக் குறிக்கிறது. இயேசுவானவர், ‘‘ஆவியோ

உற்சாகமுள்ளது, மாம்சமோ பலவீனமுள்ளது எனக் கூறினார். (மத்தேயு 26:40-42)

இஸ்ரவேல் புத்திரர் பாவத்தைப் பற்றிய விஷயத்தில் கடுமையாய் இல்லாததாலும், ஆயி பட்டணத்தை மிக லேசாக எடுத்துக் கொண்டதாலும், அவர்கள் ஆயிபட்டணத்தில் தோற்கடிக்கப் பட்டார்கள். அவர்கள் பாவத்தைக் கடுமையாகக் கண்டித்ததனாலும், ஆயி பட்டணத்தால் வரும் ஆபத்துக்கு முக்கியத்துவம் கொடுத்ததாலும் தான் அவர்கள் சத்துருவை வெற்றி கொள்ள முடிந்தது. அதே போலத் தான் நாமும் வேதம் நமது ‘மாமிசம்’ என்றழைப்பதன் வலுவை, ஆபத்தை லேசாக நினைக்கின்றோம். தேவனுடைய உதவியற்ற நமது மனித சுபாவம் நம் விசுவாசத்திற்கு ஆபத்தை விளைவிக்கும் என்பதை நாம் விளங்கிக் கொள்ளும் போது, ஆவி மாமிசத்தை மேற்கொள்ளும், உன்னுடைய விசுவாச வாழ்க்கையை உன் மாமிசம் எந்த அளவுக்கு பாதிக்கும் என்பதை லேசாக மதிப்பிட்டு விடாதே!

கிபியோனியர் இஸ்ரவேலரை ஏமாற்றி ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். பிசாசும் அப்படித்தான் செயலாற்றுகிறான். மகத்தானதொரு பாட்டில், மார்ட்டின் லூத்தர், ‘‘அவன் தந்திரமும் வல்லமையும் பெரிது’’ என சாத்தானைப் பற்றி எழுதினார். பிசாசு ஒரு ஒளியின் தூதன் (2 கொரிந்தியர் 11:14). ஏதோ ஒரு பயங்கரமான காரியத்தைச் செய்ய நம்மைத் தூண்டி அவன் நம்மை விழச் செய்வதில்லை. பொதுவாக அவன் நம்மிடம் மிகவும் விரும்பத்தக்க, அதிக அழகான ஒரு உருவத்தில் வருவான். நீ ஒரு மருத்துவ மிஷனெரியாக வேண்டுமென தேவன் உன்னை அழைக்கிறா ரென்றால், ‘நீ போய் வங்கிகளைக் கொள்ளையடி’ என்று சொல்லிப் பிசாசு உன்னை சோதிக்கமாட்டான். ஒரு பெரிய வசதிபடைத்த வருமானம் அதிகமுள்ள இடத்தில் ஒரு நல்ல மருத்துவராக இருக்கும்படி சோதிப்பான். மிகச் சிறந்ததற்குப் பதிலாக நாம் நல்லதைச் செய்யும்படி சாத்தான் வேலை செய்வான். அதனால் தான் சிலர், ‘‘மிகச் சிறந்த ஒன்றுக்கு சத்துரு நல்லதான ஒன்று,’’ எனக் கூறுகிறார்கள். யோசுவா

ஆறாம் அதிகாரத்திலிருந்து ஒன்பதாம் அதிகாரம் வரை நமது விசுவாசத்தின் மூன்று சத்துருக்களான உலகம், மாமிசம் மற்றும் பிசாசு பற்றி சித்தரிக்கப்பட்டுள்ளது.

யோசுவா புத்தகத்தின் எஞ்சியுள்ள பாகங்களில் விசுவாசத்தைத் தெளிவுபடுத்தும் உருவகங்களை நீங்கள் காணலாம். யோசுவாவின் வாழ்க்கை, அவனோடு சேர்த்துக் கூறப்படும் இன்னொரு மனிதன் - இவை நமக்கு ‘விசுவாசத்தின் நேர்மறையானதொரு தோற்றத்தைக் கொடுக்கின்றன. வேதத்தில் கூறப்பட்டுள்ள மாபெரும் விசுவாச மனிதர்களுள் ஒருவன் காலேப். யோசுவாவுடன் நல்ல செய்தியைக் கொண்டு வந்த அடுத்த வேவுகாரன் தான் அவன். காலேப் தன் தரிசனத்தை ஒருபோதும் இழக்கவில்லை. வனாந்தரத்தில் அவர்கள் அலைந்து, திரிந்த காலங்கள், மக்கள் முறுமுறுத்து செத்து மடிந்த காலங்களிலெல்லாம் எபிரோனில் காலேபும் யோசுவாவும் வேவுக்காரர்களாகக் கண்ட திராட்சைப் பழங்களைப் பற்றியே காலேப் நினைத்துக் கொண்டிருந்தான்.

மற்ற பத்து வேவுகாரர்களும் அரக்கர்கள் பற்றிய அறிவில் மேதைகளாயிருந்தனர். எண்ணாகமப் புத்தகத்தைப் படிக்கும்போது அதைப் பார்த்தோம். காலேப் அரக்கர்களைப் பார்த்தது உண்மைதான். ஆனால் அவனுடைய தேவன் அந்த அரக்கர்களைக் காட்டிலும் பெரியவர் என்பதை அவன் அறிந்திருந்தான். அவர்கள் கானானுக்குள் சென்றபின் காலேப் எபிரோனை வெற்றி கொண்டு அதைத் தனதாக்கிக் கொண்டான். எபிரோன் மோசேயால் காலேபுக்கு வாக்களிக்கப்பட்ட நகரம்.

யோசுவாவின் புத்தகத்தில் விசுவாசத்தின் ஒரு எதிர்மறையான தோற்றமும் காணப்படுகிறது. விசுவாசம் இல்லாத அந்த பத்து வேவுகாரர்களுடன், கானான் தேசத்து மக்களெல்லாரையும் ஜெயிக்க தேவன் சொல்லியிருந்தும் கூட, எல்லாரையும் ஜெயிக்காத இஸ்ரவேல் புத்திரரும் சேர்ந்து இந்த விசுவாசத்தின் எதிர்மறையான தோற்றத்தை அளிக்கிறார்கள். அவர்கள் மட்டும் தேவனுடைய திட்டத்தைச்

செயப்படுத்தியிருந்தால், வேதாகமத்தின் அடுத்த புத்தகத்தில் அவர்கள் ஜெயிக்கத் தவறிய மக்களால் ஏழு முறை அடிமையாக்கப்பட்டார்கள் என்ற செய்தியை வாசிக்க நேர்ந்திருக்காது.

யோசுவாவின் புத்தகத்தில் விசுவாசத்தைப் பற்றி நாம் காணும் கடைசிச் சித்திரத்தை விசுவாசம் சார்ந்த தீர்மானம் என்றழைக்கலாம். மக்கள், தங்கள் விசுவாசத்தை, தேவனோடு ஒரு உடன்படிக்கை செய்து உறுதிப்படுத்தும்படி யோசுவா அழைத்தான். அவனே அதற்கு முன்மாதிரியாக, ‘‘நானும் என் வீட்டாருமோவென்றால் கர்த்தரையே சேவிப்போம்’’ (யோசுவா 24:15) எனக் கூறினான். யோசுவா ஒரு உடன்படிக்கையால் தன் விசுவாசத்தை உறுதிப்படுத்தினான். அவனும் அவன் வீட்டாரும் தேவனுக்கு முதலிடம் கொடுத்து தேவனை சேவிக்கப்போவதாக அறிவித்தான். அப்படிப்பட்ட உடன்படிக் கையைத் தன்னோடு சேர்ந்து செய்யும்படி மக்களை யோசுவா அழைத்தபோது அவர்கள் ‘‘நாங்களும் கர்த்தரைச் சேவிப்போம்; அவருக்கு முதலிடம் கொடுப்போம்,’’ என்றார்கள். யோசுவா, ‘‘தேவன் இதற்கு சாட்சி, நீங்களும் சாட்சி. இன்று நீங்கள் தேவனை முதலாக வைத்து அவரைச் சேவிக்கத் தெரிந்து கொள்வதாக உடன்படிக்கை பண்ணியுள்ளீர்கள்’’ என்று உறுதிபடுத்தினான் (யோசுவா 24).

உபாகமம், லேவியராகமம் ஆகிய புத்தகங்களின் கடைசிப் பகுதியில் மோசே செய்தது போலவே யோசுவாவின் புத்தகத்தில் முடிவாக யோசுவாவும் மக்களை அர்ப்பணிப்புக்கு அழைக்கிறான்.

விசுவாசத்தில் நமக்கு ஏற்படும் சிக்கல்களைத் தீர்ப்பதற்கு முடிவாக, நம் வாழ்க்கையில் தேவனை முதலாவதாக வைக்க ஒரு பொருத்தனை செய்யும்படி நம்மை அர்ப்பணிக்கும்படி மோசேயும் யோசுவாவும் நம்மை அழைக்கிறார்கள்.

மிகவும் கருத்துடன் தேவனுடன் ஒரு விசுவாசப் பொருத்தனை அல்லது அர்ப்பணிப்பு செய்து விசுவாசம் பற்றிய பிரச்சினைகளை நீ எப்போதாவது ஒரு முடிவுக்குக் கொண்டு வந்ததுண்டா? நீயும் உன் குடும்பமும் தேவனுக்கு முதலிடம் கொடுத்து ஒரே மெய்யான

தேவனைச் சேவீப்பீர்களென எப்போதாவது உன் இருதயத்தில் முடிவெடுத்துள்ளாயா? பழைய ஏற்பாட்டிலுள்ள, ஆவியானவரால் ஏவப்பட்டு எழுதப்பட்ட இந்த வரலாற்றுப் புத்தகத்திலுள்ள விசுவாசத்தின் தோற்றங்களை ஒன்று சேர். விசுவாசத்தைப் பற்றிக் கூறும் இந்தப் புத்தகம் எப்படி முடிவு பெறுகிறது என்பதைக் கவனமாகச் சிந்தனை செய். அதன் பின் நீ ஒரு பொருத்தனை செய்யவும், யோசுவாவின் புத்தகத்தில் நீ கண்ட விசுவாச அளவில் ஒரு உன்படிக்கை செய்யவும் ஆவியானவர் உன்னை ஏவட்டும்.